# தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர்: 05, இதழ்: 128 குரோதி வருடம், மார்கழி மாதம் 03ஆம் திகதி புதன்கிழமை
(18.12.2024) ஹிஜ்ரி 1446, ஜ. ஆகிர் - 16, 0115 886187 - விலை ரூ.40 பக்கங்கள் 12


## எகிறும் ரயில்வே பணியாளர்களின் கட்டண நிலுவை



கே.சுபானி

ரயில்வே திணைக்களத்துக்குச் சொந்தமான இரத்மலானை மற்றும் கொத்தலாவலபுர ஆகிய பிரதேசங்களிலிருக்கும் 546 வீடுகளில் குடியிருக்கும்... » 02 பக்கம்



## புதிய சபாநாயகராக ஜகத் நியமனம்

பத்தாவது பாராளுமன்றத்தின் சபாநாயகராக தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் வைத்தியகலாநிதி ஜகத் விக்கிரமரத்ன நேற்று செவ்வாய்க்கிழமை(17) பாராளுமன்றத்தில் இடம்பெற்ற சபாநாயகர் தெரிவின்போது ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டார். » 02 பக்கம்

# ஜனாஸா எரிப்பு அநீதியானது



## பாராளுமன்றத்தில் போர்க்கொடி தூக்கினர் முஸ்லிம் எம்.பிக்கள்

## பெரும் குற்றமெனக் கூறி அரச தரப்பில் அனுதாபம்

கொரோனா தொற்று காரணமாக உயிரிழந்த முஸ்லிம் மக்களின் ஜனாஸாக்கள் தகனம் செய்யப்பட்டமை தொடர்பான விவரங்களை வெளிப்படுத்துமாறு முஸ்லிம் எம்.பிக்கள் கேள்வி எழுப்பிய தால், இந்த விடயம் தொடர்பில் நேற்று (17) பாராளுமன்ற சபையில் பரபரப்பு ஏற்பட்டது.

அதனைத் தொடர்ந்து ஆளுந்தரப்பு எம்.பிக்களுக்கும் எதிர்த்தரப்பினருக்குமிடையில் இந்த விடயம் தொடர்பில் நீண்ட கருத்துப் பரிமாற்றம் இடம் பெற்றது.

கொரோனா தொற்றால் உயிரிழந்தவர்களின் பெயர் விபரங்களை வெளியிடுமாறு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் முன்வைத்த வேண்டுகோளை நிராகரித்த சுகாதார அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ, கொரோனா தொற்றில் மரணித்து தகனம் செய்யப்பட்டவர்களின் பெயர், விபரங் களை வெளியிடுவதற்கு வைத்திய நெறிமுறையில் இடமில்லை எனவும் சுட்டிக்காட்டினார். » 02 பக்கம்

## பாதுகாப்பு குறைப்பு: சபையில் கடும் சர்ச்சை



» 02பக்கம்

## முன்னாள் ஜனாதிபதிகளின் பாதுகாப்புக்கு வரையறை

முன்னாள் ஜனாதிபதிகளுக்கு வழங்கப்பட்டுள்ள இராணுவப் பாதுகாப்பை அடுத்த வாரம் முதல் நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகப் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை(17) பாதுகாப்பு அமைச்சின் விசேட அறிவித்தலை வெளியிட்டு உரையாற்றும்போதே அமைச்சர் இதனைக் கூறினார். அதன்போது அமைச்சர் மேலும் கூறுகையில், » 02 பக்கம்



**இந்தியாவுக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க நேற்று செவ்வாய்க்கிழமை (17) இந்தியாவின் புத்தகயாவுக்கு விஜயம் செய்திருந்தார். அதன்போது, மஹாபோதி மற்றும் புனித ஸ்ரீ மஹாபோதி அரச மரத்தை வணங்கி வழிபாடுகளில் ஈடுபட்டார்.**

## பன்றி இறைச்சியில் கவனம் தேவை

### கால்நடை அமைச்சு அறிவுறுத்து

கா.யோசியா

ஆபிரிக்க வைரஸ் தொற்றுக்குள்ளான பன்றிகளைக் கொலை செய்து, அதன் இறைச்சியை எதிர்வரும் பண்டிகைக் காலங்களில் விற்பனை செய்வதற்காக குளிரூட்டப்பட்ட களஞ்சியசாலைகளில் சேமித்து வைக்கப்பட்டுள்ளதாக விவசாய மற்றும் கால்நடை அமைச்சுக்குத் தகவல் கிடைத்துள்ளது. பன்றிகளை ஏற்றிச்செல்வதற்கு கடந்த காலங்களில் சட்டவிரோத முறைமை நடைமுறைப்படுத்தப்பட்டதாகவும் அரசாங்கத்தின் அனுமதியின்றி முன்னாள் பணிப்பாளர் நாயகம் ஒருவரின் கடிதத்தின் அடிப்படையில் இந்தப் போக்குவரத்து நடவடிக்கைகளுக்கான அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டதாகவும் விவசாய மற்றும் கால்நடை... » 02 பக்கம்

## அர்ச்சுனாவுக்கு எதிராக நீதிமன்றில் மனு



மருத்துவர் பதவியை இராஜிநாமா செய்யாமல் பொதுத் தேர்தலில் போட்டியிட்டு எம்.பியாகத் தெரிவுசெய்யப்பட்ட யாழ். மாவட்ட சுயேச்சைக்குழுப் பாராளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனா பாராளுமன்ற உறுப்பினர் பதவியை வகிக்கத் தகுதியற்றவரெனவும் அவரின் பதவி செல்லுபடியற்றதாகும்... » 02 பக்கம்



## உஷ்

*ஜனவரி இரண்டாம் வாரத்தில் சீனா செல்லவுள்ளார் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க.*

*புதிய பல திட்டங்களை ஜனாதிபதியிடம் முன்வைக்க சீனா தயாராகி வருகிறது. அதேசமயம், காற்றாலை மின் உற்பத்திக்கு புதிய முதலீட்டாளர்களை இலங்கைக்கு கொண்டுவரத் தயாராகி வருகிறது சீனா.*

*வடக்கு, கிழக்கில் மட்டுமல்ல, மலையகத்திலும் புதிய திட்டங்களை அமுல்படுத்த பீஜிங் ஆராய்ந்து வருகிறது.*

## அரச அதிகாரிகள் வொஷிங்டனுக்கு நேரில் செல்லக் காரணம் என்ன?



### செலவு விவரத்தை வெளியிடுமாறு சாமர எம்.பி.கோரிக்கை

விரிவாக்கப்பட்ட நிதியுதவி குறித்து சர்வதேச நாணய நிதியம் நிகழ்நிலை செயலியின் மூலமாக விவாதம் நடத்த ஒப்புக்கொண்ட போதிலும், மத்திய வங்கி மற்றும் நிதி அமைச்சு அதிகாரிகள் பெரும் தொகையைச் செலவிட்டு வொஷிங்டனுக்கு சென்றது ஏனென்று புதிய ஜனநாயக முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் சாமர சம்பத் கேள்வி எழுப்பினார். » 02 பக்கம்


## கமெண்ட் கந்தர்...



**ஜனாஸா எரிச்ச ஆட்களை பிடிக்க முடியேல்ல இவங்களுக்கு? இன்னும் கொஞ்ச நாள் போனா ஜனாஸா எரிக்கவேயில்லை என்று சொன்னாலும் சொல்லுவாங்க..**







## அர்ச்சுனாவுக்கு எதிராக...

வகையில் ஆணை பிறப்பிக்குமாறும் கோரி அபிநவ சுதந்திர முன்னணியின் தலைவர் ஓஷல ஹேரத் தாக்கல் செய்த மனுவை ஜனவரி 15ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளுமாறு மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று (17) உத்தரவிட்டது.

இந்த மனு சோபித ராஜகருணா மற்றும் மகேன் கொபல்லவ ஆகியோர் அடங்கிய மேன்முறையீட்டு நீதியரசர்களைக் கொண்ட அமர்வு முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. அதன்படி, சம்பந்தப்பட்ட மனுவைப் பரிசீலிக்க ஜனவரி 15ஆம் திகதிக்கு அழைக்குமாறு நீதியரசர்கள் உத்தரவிட்டனர்.

பாராளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனா கடந்த பொதுத் தேர்தலில் அரச வைத்தியராகப் பணிபுரியும்போதே வேட்புமனுவை சமர்ப்பித்ததாக மனுதாரர் கூறியுள்ளார். அரச சேவையிலிருந்து விலகாமல் இவ்வாறு வேட்புமனுக்களைக் கையளிப்பது சட்டவிரோதமானதெனவும் அது தேர்தல் சட்டவிதிகளுக்கு முரணானதெனவும் மனுதாரர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதன்படி, அரசியலமைப்பின் பிரகாரம் பாராளுமன்ற உறுப்பினர் பதவியை வகிக்க பொறுப்புவாய்ந்த பாராளுமன்ற உறுப்பினர் தகுதியற்றவர் எனவும் அந்தப் பதவியை செல்லுபடியற்றதாக்குமாறு உத்தரவிடுமாறும் கோரி மனுதாரர் இந்த மனுவை சமர்ப்பித்திருந்தார். மனுதாரர் சார்பில் ஷெனால் பெர்னாண்டோவுடன் சட்டத்தரணி என்.கே.அசோக்பரனும் ஆஜராகியிருந்தார்.

## ஜனாஸா எரிப்பு...

பாராளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை (17) இடம்பெற்ற வாய்மூல விடைக்கான வினா நேரத்திலேயே அவர் இவ்வாறு கேள்வியெழுப்பினார்.

சமீபத்தில் அமெரிக்காவின் வொஷிங்டன் நகரில் சர்வதேச நாணய நிதியத்துடன் இடம்பெற்ற கலந்துரையாடலில் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு மற்றும் இலங்கை மத்திய வங்கி ஆகியவற்றைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் பங்குபற்றிய அலுவலர்களின் எண்ணிக்கை, இவர்களின் பயணத்துக்காக செலவிடப்பட்ட தொகை உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் சாமர சம்பத் எம்.பி. கேள்விகளை எழுப்பினார்.

இதற்குப் பதிலளித்த பிரதி நிதியமைச்சர் கலாநிதி ஹர்ஷன சூரியப்பெரும, வொஷிங்டனில் நடைபெற்ற சர்வதேச நாணய நிதியத்தின் கலந்துரையாடலில் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் நான்கு அதிகாரிகளும் மத்திய வங்கியின் ஐந்து அதிகாரிகளும் கலந்துகொண்டனர். அதனைத் தொடர்ந்து வொஷிங்டனில் இடம்பெற்ற கலந்துரையாடல்களில் பங்கேற்பதற்கான தீர்மானம் அரசாங்கத்துக்கும் சர்வதேச நாணய நிதியத்துக்குமிடையே ஓர் ஒப்பந்தத்தின் அடிப்படையில் எடுக்கப்பட்டது.

கலந்துரையாடல்களின் சிக்கலான தன்மை, சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் எண்ணிக்கை மற்றும் நடத்தத் திட்டமிடப்பட்ட கலந்துரையாடல்களின் எண்ணிக்கை ஆகியவற்றின் காரணமாக வொஷிங்டன் கலந்துரையாடலில் பங்கேற்க அரசாங்கம் தீர்மானித்தது.

கலந்துரையாடலின் ஒருபகுதியை வொஷிங்டனில் நடத்த சர்வதேச நாணய நிதியமும் அரசாங்கமும் ஒப்புக்கொண்டன. மற்றைய பாதி கலந்துரையாடல்களுக்கு நாணய நிதியக்குழு இலங்கைக்கு வர ஒப்புக்கொண்டது. அதிகாரிகளின் விமானச் செலவுக்காக 7.05 மில்லியன் ரூபா செலவிடப்பட்டது. 38,587 டொலர்கள் பயணச் செலவுக்கு செலவிடப்பட்டன. நிதியமைச்சின் அதிகாரிகள் விமானத்தில் வணிக வகுப்பில் பயணிக்கவில்லை என்றும் சுட்டிக்காட்டினார்.

## பன்றி இறைச்சியில்...

வளங்கள் பிரதி அமைச்சர் நாமல் கருணாரத்ன தெரிவித்துள்ளார்.

அதற்கமைய, இந்த நடைமுறையை முழுமையாக இரத்துச்செய்ய நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

விவசாய அமைச்சில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். ஒரு வருடத்துக்கு முன்பிருந்தே உள்நாட்டிலுள்ள பன்றிகளுக்கு ஆபிரிக்க வைரஸ் பரவியதன் காரணமாக பன்றி இறைச்சியை உற்பத்தி செய்வதற்கான தொழிற்றுறை பெரும் வீழ்ச்சியைச் சந்தித்துள்ளதாகவும் பிரதியமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

திருகோணமலையைத் தவிர நாட்டின் ஏனைய சகல பிரதேசங்களிலும் இந்த வைரஸ் பரவியுள்ளதாகவும் அதற்கமைய, பண்டிகைக் காலங்களில் பன்றி இறைச்சி தொடர்பான பிரச்சினை உருவாகியுள்ளதாகவும் சுட்டிக்காட்டினார். இது தொடர்பில் அவர் தொடர்ந்தும் கருத்துத் தெரிவிக்கையில்,

நாட்டில் பன்றி இறைச்சி உற்பத்தி தொழிற்றுறையில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ள இந்த வைரஸ் தொற்றை ஒழிப்பது தொடர்பில் கால்நடை வைத்திய பிரிவினர் நடவடிக்கை எடுத்து வருகின்றனர். இத்திட்டத்தை மேலும் துரிதப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். அதேபோன்று, கால்நடை மருத்துவ கண்காணிப்பு சிறப்பாக உள்ள பிரதேசங்களில் இந்த வைரஸ் பரவும் வீதம் குறைவாகவே காணப்படுகிறது. வைரஸ் தொற்றுக்குள்ளான பன்றிகளின் இறைச்சி குளிரூட்டப்பட்ட களஞ்சியசாலைகளில் சேமிக்கப்பட்டுள்ளதா என்பது தொடர்பில் விசாரணை நடத்தப்படும். அவ்வாறு குளிரூட்டப்பட்டுக் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ள பன்றி இறைச்சியை உடனடியாக அழிக்க நடவடிக்கை எடுக்கப்படும். வைரஸ் தொற்று காரணமாக பன்றிகள் உயிரிழந்தமையின் காரணமாக சிரமப்படும் துறைசார்ந்த தொழிலாளர்களுக்கு சலுகை அடிப்படையிலான கடன் வழங்க அமைச்சரவைப் பத்திரத்தை முன்வைக்க நடவடிக்கை எடுத்து வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## பாதுகாப்பு குறைப்பு...

''முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பாதுகாப்பைக் குறைத்து டயஸ்போராக்களின் விருப்பத்துக்கிணங்க செயற்படாதீர்கள். பாதாளக் குழுக்களும் மஹிந்த ராஜபக்ஷவும் ஒன்றல்ல'' - என பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினரான டி.வி.சானக நேற்று (17) சபையில் தெரிவித்தார்.

இந்நிலையில், மஹிந்த ராஜபக்ஷவின் தென்னந்தோட்டங்களைப் பாதுகாக்க இராணுவத்தினரை வழங்கமுடியாதென தேசிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர்கள் அந்தக் கருத்துக்கு சபையில் கடும் எதிர்ப்பை வெளியிட்டனர்.

பாராளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை (17) இடம்பெற்ற பாடசாலை மாணவர்களுக்கான காகிதாதிகளுக்கான குறை நிரப்பு பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றிய பொதுஜன பெரமுனவின் எம்.பி. சானக,

''முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கான பாதுகாப்பு இல்லாது செய்யப்பட்டுள்ளது. அவரின் பாதுகாப்பை நீக்கியுள்ள இந்த அரசு.தற்போது மஹிந்த ராஜபக்ஷவின் பாதுகாப்புக்கு இராணுவத்தை வழங்க முடியாதெனவும் 60 பொலிஸாரை மட்டுமே வழங்க முடியுமெனவும் கூறுகின்றது.

இந்த நாட்டில் யுத்தத்தை முடித்து வைத்தவர் மஹிந்த ராஜபக்ஷ. யுத்தம் நடந்தபோது 05 நிமிடங்களுக்கு 30 கோடி ரூபா செலவானது. இன்று அந்த நிலை இல்லை. அவ்வாறான நிலையில், யுத்தத்தை முடித்து இந்த நாட்டின் பாதுகாப்பை உறுதிப்படுத்திய மஹிந்த ராஜபக்ஷவுக்கு உங்களினால் 30 கோடி ரூபா செலவிடமுடியாதா? பாதாளக்குழுத் தலைவர்களுக்கே பலர் பாதுகாப்பு வழங்கும் நிலையில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு பாதுகாப்பு வழங்க முடியாதா? மஹிந்த ராஜபக்ஷவை பாதாளக்குழுத் தலைவர்களுடன் ஒப்பிட வேண்டாம். முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு வழங்கும் பாதுகாப்பை மஹிந்த ராஜபக்ஷவுக்கும் வழங்குவதற்கு இருவரும் ஒன்றல்ல.

மஹிந்த ராஜபக்ஷ யுத்தத்தை முடித்தவர். ரணில் அவ்வாறானவரல்ல. எனவே, முன்னாள் ஜனாதிபதி ராஜபக்ஷவின் பாதுகாப்பைக் குறைத்து டயஸ்போராக்களின் விருப்பத்துக்கிணங்க செயற்படாதீர்கள்'' - என்றார்.

இதனால் விசனமடைந்த தேசிய மக்கள் சக்தி எம்.பிக்கள் எழுந்து, ''முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பாதுகாப்புக்கு வழங்கப்பட்ட இராணுவத்தினர் மஹிந்த ராஜபக்ஷவின் தென்னந்தோட்டங்களைப் பாதுகாக்கத்தான் பயன்படுத்தப்பட்டார்கள். வீட்டு வேலைக்கு பயன்படுத்தப்பட்டார்கள். வளவுகளை சுத்தம் செய்வதற்காகப் பயன்படுத்தப்பட்டார்கள். அவ்வாறு இராணுவத்தினரை பயன்படுத்த அனுமதிக்க முடியாது'' - என்றனர். இதனால் இருதரப்புகளுக்குமிடையில் சிறிது நேரம் கடும் வாய்த்தர்க்கம் ஏற்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

## புதிய சபாநாயகராக...

பத்தாவது பாராளுமன்றத்தின் சபாநாயகராக செயற்பட்ட பாராளுமன்ற உறுப்பினர் அசோக ரன்வல அண்மையில் சபாநாயகர் பதவியை இராஜிநாமா செய்ததன் காரணமாக ஏற்பட்ட வெற்றிடத்துக்கே ஜகத் விக்கிரமரத்ன தெரிவு செய்யப்பட்டார்.

அதற்கமைய, பிரதமர் ஹரிணி அமரசூரியவால் தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஜகத் விக்கிரமரத்னவின் பெயர் முன்மொழியப்பட்டதுடன், சபை முதல்வர் பிமல் ரத்நாயக்க அதனை வழிமொழிந்தார்.

புதிய சபாநாயகரை முன்மொழிந்து, வழிமொழிந்த பிரதமர் மற்றும் சபை முதல்வரினால் சம்பிரதாயபூர்வமாக புதிய சபாநாயகர் தனது ஆசனத்துக்கு அழைத்துச்செல்லப்பட்டார். அதன் பின்னர் புதிய சபாநாயகருக்கு பிரதமர் ஹரிணி அமரசூரிய மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச உள்ளிட்ட கட்சித் தலைவர்கள் வாழ்த்துத் தெரிவித்தனர்.அதனையடுத்து, தன்னைத் தெரிவு செய்தமை தொடர்பில் நன்றி தெரிவித்த சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்ன, பாராளுமன்ற நிலையியற் கட்டளைகள் மற்றும் மரபுகளுக்கமைய சுயாதீனம், கௌரவம் மற்றும் அனைத்து உறுப்பினர்களினதும் உரிமைகளைப் பாதுகாத்து பொதுமக்களின் நலனுக்காக அர்ப்பணிப்புடன் பணியாற்றுவதாகத் தெரிவித்தார்.

## எகிறும் ரயில்வே

ஓர் அதிகாரியிடம் நீர்க் கட்டணத்துக்காக மாதாந்தம் 05 ரூபா கட்டணம் அறவிடப்படுவதால் கடந்த மூன்று ஆண்டுகளில் ரூபா 09 கோடியே 23 இலட்சத்து 98 ஆயிரத்து 532 (9,23,98,532) ரூபா ரயில் திணைக்களத்தால் செலுத்தப்பட்டுள்ளதாக தேசிய கணக்காய்வுத் திணைக்களம் அறிவித்துள்ளது.

மேலும், இரத்மலானை பிரதான இயந்திர பொறியியலாளர் உப திணைக்களத்தின் கொத்தலாவலபுர பகுதியிலுள்ள 546 குடியிருப்புகளுக்காக வருடாந்தம் 30 மில்லியன் ரூபாவுக்கும் அதிக தொகையை நீர்க்கட்டணமாக ரயில் திணைக்களத்தால் செலுத்தப்படுவதாகவும் கணக்காய்வுத் திணைக்களத்தின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்தோடு, குறித்த வீடுகளில் முறையான நீர்மானிகள் பொருத்தப்பட்டு செலவை முகாமைத்துவம் செய்யவேண்டுமென கணக்காய்வில் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

546 உத்தியோகபூர்வ இல்லங்களில் 509 இல்லங்களுக்காக புதிய நீர்மானிகள் பொருத்தப்பட்டு மொத்த விநியோகம் நிறைவுசெய்யப்பட்டுள்ளதாக ரயில் திணைக்களத்தின் கணக்கறிக்கை அதிகாரியினால் கணக்காய்வுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, நீர்மானிகள் பொருத்தப்படவில்லை என்று கூறப்படும் மிகுதி 07 இல்லங்களுக்கு நீர்மானிகள் பொருத்தப்பட் டுள்ளதாகவும் மிகுதி இல்லங்களில் இதுவரையில் எவரும் பதிவுக்கு வரவில்லையென்றும் பிரதான கணக்கறிக்கை அதிகாரி கணக்காய்வுத் திணைக்களத்துக்கு தெரிவித்திருக்கிறார். நீர்மானி பொருத்தப்பட்டுள்ளமையினால் முறையாக நீர்க்கட்டணத்தை அறிவிடும் நடவடிக்கைகள் இடம்பெற்று வருவதாகவும் அந்த அதிகாரி கணக்காய்வுத் திணைக்களத்துக்கு குறிப்பிட்டுள்ளார்.

## முன்னாள் ஜனாதிபதிகளின்...

''முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பாதுகாப்புத் தொடர்பில் பல்வேறு கருத்துகள் வெளியாகியிருந்தன. அரசியல் கலாசாரத்தை மாற்றி மக்களுடனிருக்கும் அரசியலை ஏற்படுத்த வேண்டுமென்ற எதிர்பார்ப்பும் மக்கள் பணத்தை வீணடித்தல் மற்றும் அரசியல்வாதிகள் அளவுக்கதிகமான பாதுகாப்புப் பிரிவினருடன் பெருமளவான வாகனங்களுடன் வீதி ஒழுங்குகளை மீறிச் செல்வதும் மக்களுக்கு அதிருப்தியை ஏற்படுத்தியிருந்தது. இந்தப் பின்னணியிலேயே மக்கள் எங்களுக்கு அதிகாரத்தை வழங்கினார்கள்.

இந்நிலையில், எமது அரசாங்கம் மற்றைய விடயங்களை விடவும் அரசியல் கலாசாரத்தை மாற்றுவது தொடர்பில் முக்கியத்துவம் வழங்குகின்றது. இதனால் முன்னாள் ஜனாதிபதிகளின் பாதுகாப்புத் தொடர்பில் எழுந்துள்ள தர்க்கங்கள் தொடர்பில் மக்களுக்கு தெளிவுபடுத்தவேண்டியுள்ளது. முன்னாள் ஜனாதிபதிகளுக்கு வழங்கவேண்டிய சலுகைகள் தொடர்பான சட்டம் உள்ளது. அதில் முன்னாள் ஜனாதிபதியொருவருக்கு எத்தனை பேர் கொண்ட பாதுகாப்புப் பிரிவினர் இருக்க வேண்டுமென்று குறிப்பிடப்படவில்லை.

நாங்கள் அரசியல் கலாசாரத்தை மாற்றியமைக்க முன்னிற்கின்றோம். இதன்படி முன்னாள் ஜனாதிபதிகளின் பாதுகாப்புத் தொடர்பில் ஆராய்வதற்காக குழுவொன்று அமைக்கப்பட்டது. இந்தக் குழுவினால் பல பரிந்துரைகள் வழங்கப்பட்டுள்ளன. அதற்கமைய, அந்தக் குழுவின் பரிந்துரைகளை செயற்படுத்துவதையே செய்கின்றோம். இதில் முன்னாள் ஜனாதிபதிகளின் பாதுகாப்பைக் குறைப்பதற்கான திட்டமெதுவும் இல்லை.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை இலக்காகக்கொண்டு செய்யப்பட்டதல்ல. இங்கே அரசாங்கம் வேண்டுமென்றே தீர்மானம் எடுக்கவில்லை. இன்றும் மஹிந்த ராஜபக்ஷவின் பாதுகாப்புக்காகவும் ஏனைய செயற்பாடுகளுக்காகவும் 60 பொலிஸாரும் 228 இராணுவத்தினரும் வழங்கப்பட்டுள்ளனர். அத்துடன், முன்னாள் ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேனவுக்கு 04 இராணுவத்தினரும் 60 பொலிஸ் அதிகாரிகளும் வழங்கப்பட்டுள்ளதுடன், கோட்டாபய ராஜபக்ஷவுக்கு 188 இராணுவத்தினரும் 22 பொலிஸாரும் பாதுகாப்புக்காக வழங்கப்பட்டுள்ளனர். ரணில் விக்கிரமசிங்கவுக்கு 58 இராணுவத்தினரும் 60 பொலிஸாரும் வழங்கப்பட்டுள்ளனர். சந்திரிகா குமாரதுங்கவுக்கு 60 பொலிஸாரும் ஹேமா பிரேமதாசவுக்கு 10 பொலிஸாரும் பாதுகாப்புக்காக வழங்கப்பட்டுள்ளனர்.

இந்த நடவடிக்கைகளுக்காகவும் முன்னாள் ஜனாதிபதிகளின் பராமரிப்புகளுக்காகவும் நடப்பாண்டின் கடந்த பதினொன்றரை மாதங்களில் பெருந்தொகைப் பணத்தைச் செலவிட வேண்டி ஏற்பட்டுள்ளது.

இதன்படி மஹிந்த ராஜபக்ஷவுக்கு 710 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளதுடன் மைத்ரிபால சிறிசேனவுக்காக 207 மில்லியன் ரூபாவும் கோட்டாபய ராஜபக்ஷவுக்காக 307 மில்லியன் ரூபாவும் ரணில் விக்கிரமசிங்கவுக்காக 03 மாதங்களில் 82 மில்லியன் ரூபாவும் செலவிடப்பட்டுள்ளது.

சந்திரிகாவுக்காக 110 மில்லியன் ரூபாவும் ஹேமா பிரேமதாசவுக்காக 32 மில்லியன் ரூபாவும் செலவிடப்பட்டுள்ளது. இதன்படி கடந்த பதினொன்றரை மாதங்களில் முன்னாள் ஜனாதிபதிகளுக்காக மக்களின் நிதியில் 1,448 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது. மக்கள் நெருக்கடியில் வாழும் நிலையில், இவ்வளவு பணம் செலவிடப்பட்டுள்ளது. இந்நிலையில், பாதுகாப்பு தொடர்பில் ஆராய்ந்து அவர்களுக்கான பாதுகாப்பில் மாற்றங்களைச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

பாதுகாப்பு போதுமானதாக இல்லையென்று கூறுபவர்கள் மக்கள் நேய எண்ணம் இல்லாதவர்கள் என்பதுடன், மக்கள் பணத்தை தமது தனிப்பட்ட தேவைகளுக்காகப் பயன்படுத்தும் பழக்கத்தை கைவிட முடியாதவர்களாவர். இந்நிலையில், இந்தளவு இராணுவ அதிகாரிகள் எதற்கு என்றும் அவர்கள் கூற வேண்டும். சில இராணுவ அதிகாரிகள் வளர்ப்பு நாய்களைப் பராமரிக்கவா என்றும் கேட்க வேண்டும். சிலர் இராணுவச் சிப்பாய்களை இதற்காகப் பயன்படுத்துவதாகவும் தெரியவந்துள்ளது.

மக்கள் வழங்கிய ஆணையை நாங்கள் மாற்றத் தயாரில்லை.

இதனால் அடுத்த வாரம் முதல் பொலிஸாரால் வழங்கப்பட்டுள்ள பாதுகாப்பு தவிர்ந்த ஓய்வுபெற்ற ஜனாதிபதிகளுக்கு வழங்கப்பட்டுள்ள இராணுவப் பாதுகாப்பையும் நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். 06 மாதங்களுக்கு ஒருதடவை பாதுகாப்பு தொடர்பான மீளாய்வுக்கமையவே பாதுகாப்புகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். இதன் மூலம் வருடாந்தம் 1,200 மில்லியன் ரூபாவையாவது சேமிக்க முடியுமாக இருக்கும்'' - என்றார்.

## அரச அதிகாரிகள்...

பாராளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற வாய்மூல விடைக்கான வினா நேரத்தின்போது ரவூப் ஹக்கீம் எம்.பி., கொரோனா தொற்றின் காரணமாக உயிரிழந்தவர்களின் சடலங்களை தகனம் செய்யவேண்டுமென அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்துக்கமைவாக, தகனம் செய்யப்பட்ட சடலங்களின் எண்ணிக்கை யாது? அவ்வாறு மரணித்த ஒவ்வொரு நபரினதும் பெயர், பாலினம், இனம், சமயம் நெருங்கிய உறவினரின் பெயர், முகவரி, சடலம் தகனம் செய்யப்பட்ட திகதி மற்றும் இடம் தனித்தனியே தெரிவிக்க முடியுமா எனக் கேட்டார்.

இதற்கு சுகாதார அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ பதிலளிக்கையில்,

கொரோனா தொற்றில் மரணித்தவர்களில் 13,183 பேர் தகனம் செய்யப்பட்டுள்ளனர். தகனம் செய்யப்பட்டவர்களின் பெயர், பாலினம், இனம், சமயம் நெருங்கிய உறவினரின் பெயர், முகவரி, சடலம் தகனம் செய்யப்பட்ட திகதி மற்றும் இடம் போன்ற தகவல்களை வெளியிட முடியாமல் இருக்கிறது. ஏனெனில், வைத்திய அடிப்படை நெறிமுறைக்கமைய இந்த விடயங்களைத் தெரிவிக்க முடியாது - என்றார்.

இதன்போது எழுந்த ரவூப் ஹக்கீம், அமைச்சரின் இந்தப் பதில் ஆச்சரியமளிக்கின்றது. நான் கேட்டிருந்த இந்தத் தகவல்கள் அரசாங்கம் பாதுகாத்து வைத்திருக்க வேண்டிய தகவல்கள். இது கொரோனா தொற்றால் உயிரிழந்தவர்களின் உணர்ச்சிபூர்வமான விடயமாகும். தொற்றுநோய் தொடர்பான விசேட நிபுணரும் தேசிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளருமான நிமல் அபேசிங்க இந்தப் பிரச்சினை தொடர்பில் நேர்மையாக உண்மையான கருத்துகளை வெளியிட்டிருந்தார். இருந்தபோதும் இதுபோன்ற அறிக்கைகள் அரசாங்கத்திடம் இருக்கவேண்டும்.அதனைப் பகிரங்கப்படுத்த வேண்டும். இவற்றை மூடி மறைத்துக்கொண்டு வெளிப்படுத்த முடியாதென்பது கூற முடியாது என்பதை சுகாதார அமைச்சரும் அறிந்து வைத்திருப்பார் என்று கருதுகிறேன். இது சுகாதார அமைச்சின் நேர்மைக்கும் களங்கத்தை ஏற்படுத்திவிடும்.

சுகாதார அமைச்சுக்கு புதிதாக நியமிக்கப்பட்டுள்ள செயலாளரும் இதுபோன்ற விடயங்களை மூடி மறைத்தது மாத்திரமல்லாமல், அதனை நியாயப்படுத்தினார். இவ்வாறான நிலைமையிலேயே உங்களது அரசாங்கத்துக்கு முஸ்லிம் மக்களிடமிருந்து ஆணைக் கிடைத்துள்ளது. அதனால், இந்த விடயங்களை அடிப்படையாகக் கொண்டு உண்மையான தகவல்களைப் பெற்றுக்கொடுக்கவேண்டும். தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் பிரகாரம் இந்தத் தகவல்களை வழங்காமலிருப்பது பெரும் தவறாகும். தயவுசெய்து இந்தத் தகவல்களை எங்களுக்குப் பெற்றுக்கொடுக்க வேண்டும்,

இதற்குப் பதிலளித்த சுகாதார அமைச்சர், இது மிகவும் உணர்வுபூர்வமான பிரச்சினையாகும். உயிரிழந்தவர்கள் தொடர்பான தகவல்களை வழங்குவது சமூக அமைப்பு தொடர்பான விடயமாகும். கொரோனா தொற்று பரவலடைய ஆரம்பித்த ஆரம்ப காலத்தில் கொரோனா வைரஸ் எவ்வாறானது, அது எவ்வாறு பரவலடையும் என்பது தொடர்பில் பல்வேறு நிலைப்பாடுகள் இருந்திருக்க முடியும். ஆனால், அவற்றில் அநேகமான விடயங்கள் மிகவும் குறுகிய காலத்தில் தீர்மானிக்கப்பட்டவை. அதற்கமைய, அப்போதைய அரசாங்கத்தால் எடுக்கப்பட்ட தீர்மானத்தால் பாரிய பிரச்சினை ஏற்பட்டது.

ஆனால், சில மாதங்களின் பின்னர் ஓட்டமாவடியில் சடலங்களை நல்லடக்கம் செய்ய எடுத்த தீர்மானத்தால் மக்கள் மத்தியில் பாரிய பிரச்சினைகள் எழுந்தன. இந்தப் பிரச்சினையில் எடுக்கப்பட்ட அரசியல் தீர்மானங்கள் தொடர்பில் அரசாங்கம் என்ற அடிப்படையில் நாம் வெட்கப்படவேண்டும். அரசியல் தீர்மானங்களின் அடிப்படையில் விஞ்ஞானத்துக்குப் புறம்பாக அறிக்கைகளைத் தயாரித்து தீர்மானங்களை முன்வைப்பது தவறு என்ற நிலைப்பாட்டிலேயே அப்போதும் இருந்தோம்.

கொரோனா தொற்று தொடர்பில் கடந்த அரசாங்கம் எடுத்த தீர்மானங்களில் எங்களுக்கு உடன்பாடில்லை. அந்தப் பிரச்சினை தொடர்பில் நாங்கள் மிகவும் கவலையடைகிறோம். ஆனால், இந்த விடயத்தில் தகவல் மறைக்கும் விடயம் எதுவும் இல்லை. மருத்துவ நெறிமுறைக்கமையவும் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் பிரகாரமும் தகவலை வழங்க முடியாத பிரச்சினையே இருக்கிறது. தகவல்களை மறைப்பதற்கு எந்த அவசியமும் இல்லை. முன்னாள் அரசாங்கத்தால் எடுக்கப்பட்ட தீர்மானங்களால் ஏற்பட்ட தவறுகள் எதிர்காலத்திலும் இடம்பெறுவதற்கு இடமளிக்க மாட்டோம்.

மீண்டும் எழுந்த ரவூப் ஹக்கீம், கொரோனாவால் மரணித்தவர்களின் தகவல்கள் தொடர்பில் மருத்துவ நெறிமுறைக்கமைய தெரிவிக்க முடியாதென்கின்றீர்கள். ஆனால், அவ்வாறான நெறிமுறை இருப்பது தொடர்பாக நான் அறியவில்லை. அவ்வாறு இருக்குமானால், அதனை எங்களுக்குக் காட்டுங்கள். தகனம் செய்யப்பட்டவர்களின் பெயர், முகவரி மற்றும் உறவினர்களின் பெயர்களை மாத்திரமே கோருகிறோம். இந்த விடயங்களை வெளியிடுவது எவ்வாறு மருத்துவ நெறிமுறைக்கு முரணாகிறதெனத் தெளிவுபடுத்துங்கள். கடந்த அரசாங்கம் செய்த விடயங்கள் தவறு என்பது எங்களுக்குத் தெரியும். அதற்காக முன்னாள் ஜனாதிபதி மன்னிப்பும் கோரியிருந்தார். ஆனால், தற்போதுள்ள கேள்வி, பலவந்தமாக தகனம் செய்யப்பட்டவர்களின் பெயர் விபரங்களை ஏன் வழங்க முடியாது. இதில் என்ன நெறிமுறை சிக்கல் இருக்கிறது. இதனால் நான் பெரிதும் ஆச்சரியமடைகிறேன்.

அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ, சட்டத்தின் பிரகாரம் வைத்திய நெறிமுறைக்கமையவே எனக்கு இந்த விபரங்களை எனக்கு வழங்க முடியாமல் இருக்கிறது. வேறெந்த காரணமும் இல்லை என மீண்டும் கூறினார்.

இதன்போது எழுந்த எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, கொரோனா காலத்தில் ஓர் இனத்தையும் மதத்தையும் இலக்குவைத்து கோட்டாபய ராஜபக்ஷ அரசாங்கம் உலக சுகாதார நிறுவனம் வழங்கிய வழிகாட்டுதல்களையும் மீறி செயற்பட்டது. உரிமைகள் மீறப்பட்ட முஸ்லிம் சமூகத்தினருக்கும் பாதிக்கப்பட்ட முஸ்லிம்களுக்கும் நீதி நிலைநாட்டப்பட வேண்டும். இதனால் பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு இழப்பீடு வழங்க வேண்டும் - என்றார்.

அதற்குப் பதிலளித்த அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ,

இந்தப் பிரச்சினை தொடர்பில் இருக்கும் வரையறைகளுக்கப்பால் சென்று சட்ட மா அதிபருடனும் பேச்சுவார்த்தை நடத்துவோம். அதனூடாக முடிந்த தகவல்கள் சகலவற்றையும் வழங்குவோம். இதில் மூடிமறைப்பதற்கு எதுவும் இல்லை. நடைமுறையிலிருக்கும் சட்டதிட்டங்களுக்கமையவே தகவல்களை வழங்க நடவடிக்கை எடுத்திருக்கிறோம் – என்றார்.

அதனைத் தொடர்ந்து கருத்துத் தெரிவித்த முஜிபுர் ரஹ்மான் எம்.பி,

அமைச்சர் கூறுவதுபோன்று இந்த விடயம் தொடர்பில் நாடென்ற அடிப்படையில் நாங்கள் வெட்கப்பட வேண்டும். உலக சுகாதார ஸ்தாபனத்தின் வழிகாட்டல்களையும் கவனத்திற்கொள்ளாமல் பலவந்தமாக ஜனாஸாக்களை தகனம் செய்ய நடவடிக்கை எடுத்தார்கள். இதுதொடர்பில் அரசியல் அதிகார குழாம் தீர்மானம் எடுத்திருந்தாலும், அந்தத் தீர்மானத்தை அரச அதிகாரிகளே வெளிப்படுத்தினார்கள். இந்தப் பிரச்சினை இடம்பெற்ற சந்தர்ப்பத்தில் அப்போதைய சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் எங்களுடன் கலந்துரையாடியிருந்தார்.

அதன்போது இது அரசியல் தீர்மானம் எதுவும் இல்லை. சுகாதார அமைச்சால் எடுக்கப்பட்ட தீர்மானமென்று அதற்கான பொறுப்பை ஏற்றுக்கொண்டார். அப்படியிருக்கையில் அவ்வாறானவொருவரை எவ்வாறு அமைச்சின் செயலாளராக நியமித்தீர்கள். இந்தத் தீர்மானம் தொடர்பில் வெட்கப்பட வேண்டும் என்று நீங்களே கூறுகிறீர்கள். ஆனால், அந்தத் தீர்மானம் எடுத்த ஒருவரை எவ்வாறு செயலாளராக நியமித்தீர்கள் என்பதை தெளிவுபடுத்த வேண்டும் - என்று கோரினார்.

அதற்குப் பதிலளித்த அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ,

இதுதொடர்பில் நியமிக்கப்பட்டிருந்த குழு அப்போதைய நிலைமையில் ஏதாவது தவறு இருக்குமாக இருந்தால் அதுதொடர்பில் தெளிவுபடுத்த நாங்கள் தயாராகவிருக்கிறோம். அரசியல்வாதிகளின் அச்சுறுத்தலின் பிரகாரம் அந்தச் செயற்பாடுகளை அவ்வாறே முன்னெடுத்துச் சென்றார்கள். அரசியல் அச்சுறுத்தலால் எடுக்கப்பட்ட தீர்மானங்களே இதில் தாக்கம் செலுத்தியுள்ளன - என்று குறிப்பிட்டார்.

அதனை தொடர்ந்து கருத்துத் தெரிவித்த பிரதமர் ஹிரிணி அமரசூரிய,

கடந்த அரசாங்கம் எடுத்த இந்தத் தீர்மானத்தை ஒருபோதும் நியாயப்படுத்த முடியாது. இதுவொரு கொடூரமான தீர்மானமாகும். மரணமொன்று சம்பவிக்குமாக இருந்தால் சம்பிரதாயங்களின் அடிப்படையிலேயே மக்கள் அவர்களின் கவலையை வெளிப்படுத்துவார்கள். அவர்களின் கவலையை சமநிலைப்படுத்திக் கொள்வதற்காகவே சம்பிரதாயங்கள் பின்பற்றப்படுகின்றன. அதன் காரணமாகவே அதற்கு சமய ரீதியான பெறுமதியும் வழங்கப்பட்டுள்ளன.

கொரோனா போன்ற காலத்தில் இதுபோன்ற சம்பிரதாயங்கள் தொடர்பில் அதிக கவனம் செலுத்தவேண்டும். இதுபோன்ற கொடூர தீர்மானங்களை எங்களால் ஒருபோதும் அனுமதிக்க முடியாது. எக்காரணத்துக்காகவும் இதனை நியாயப்படுத்த முடியாது. எனவே, எங்களின் அரசாங்கத்திலும் எதிர்காலத்திலும் எந்தவொரு மக்களுக்கும் துக்கத்தை ஏற்படுத்தும் அவர்களின் சம்பிரதாயங்களை அகௌரவப்படுத்தும் எந்தவொரு தீர்மானத்தையும் எடுக்க தீர்மானம் எடுக்கமாட்டோம். அப்போதிருந்த அரசியல் கலாசாரத்தின அடிப்படையிலேயே அவ்வாறான தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன. அந்தக் கலாசாரத்தை மாற்றியமைக்க வேண்டும். எந்த அதிகாரியையும் பாதுகாக்கமாட்டோம். இருந்தபோதும் எங்களுடன் பணியாற்றும் எந்தவொரு அதிகாரியும் மக்களைப் பாதிக்கும் வகையிலான தீர்மானங்களை எடுக்க தீர்மானிக்க மாட்டோம். இந்த தீர்மானத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு எவ்வாறு நிவாரணம் வழங்கப்பட வேண்டும். அது தொடர்பில கலந்துரையாடவும் தயாராக இருக்கிறோம் - என்றார்.

# தினசரி பலாபலன்கள்

## குரோதி வருடம் மார்கழி மாதம் 03ஆம் நாள் புதன்கிழமை

**மேஷம்** மௌனம் காப்பதே சிறந்தது. யாருடனும் விதண்டா வாதம்செய்ய வேண்டாம்.

**ரிஷபம்** காதல் பயணங்கள்,சுற்றுலாக்கள் மூலம் மகிழ்ச்சி உண்டு. பெண்களால் இலாபம் உண்டு.

**மிதுனம்** உடல் நிலையில் கவனம் செலுத்துங்கள். தேவையற்ற விடயங்களால் எரிச்சலடைவீர்கள்.

**கடகம்** பணம் ஏதோ வழியில் வந்துகொண்டிருக்கும். தெளிந்த மனதுடன் சேவையாற்றுவீர்கள்.

**சிம்மம்** பயணங்களால் மன மகிழ்ச்சி, உற்சாகம், தாய்வழி இலாபங்கள் உண்டு.

**கன்னி** சமயோசித புத்தியால் அனைத்தையும் வெற்றி கொள்வீர்கள். அவசிய செலவுகள் இருக்கும்.

**துலாம்** திடீர் பண வரவுக்கான வாய்ப்பு உள்ளது.வார்த்தைகளால் விளையாடுவீர்கள்.

**விருச்சிகம்** மனதை அலைய விடாதீர்கள். சிந்தனையில் மூழ்கியிருப்பீர்கள். அதனால் ஞாபக மறதி ஏற்படலாம்.

**தனுசு** வீண் டென்ஷன் வேண்டாம். உங்கள் பணம் பொருட்களைப் பத்திரப்படுத்திக் கொள்ளுங்கள்.

**மகரம்** தொட்டது துலங்கும் நாள். மன அமைதியுடன் அனைத்தையும் சாதிப்பீர்கள்.

**கும்பம்** பயணங்களால் சிரமங்களை அனுபவித்தாலும் பண வரவு உண்டு. உடல் நிலையில் அக்கறை காட்டுங்கள்.

**மீனம்** எதிர்பாராத சுப செய்தியால் மகிழ்ச்சி. ஆலய தரிசனம் செய்து கொள்வீர்கள்.

**திதி:**திருதியை மு.ப.10.06 வரை பின் சதுர்த்தி
**நட்சத்திரம்:**பூசம் பி.இ.12.58 வரை பின் ஆயிலியம்
பிறை:தேய்பிறை
**யோகம்:** அமிர்த யோகம் பி.இ.12.58 வரை பின் மரண யோகம்
**வார சூலை:**வடக்கு திசை நோக்கி சுப காரியம் கூடாது.
**நல்ல நேரம்:**காலை 6.16 –7.46 மணி வரை காலை 9.16 – 10.16 மணி வரை பகல் 1.46 –3.16 மணி வரை மாலை 4.16 – 5.16 மணி வரை
**ராகு காலம்:**12.16 – 1.46 மணி வரை
**எமகண்டம் :**7.46 – 9.16 மணி வரை
**குளிகை :**10.16 – 12.16 மணி வரை
**சந்திராஷ்டமம்:**தனுசு ராசியினர் எச்சரிக்கையாக செயற்படவும்.

**அதிர்ஷ்ட தாராபலனுடைய நட்சத்திரங்கள்**

**இன்று பின்னிரவு 12.58 மணி வரை**
அஸ்வினி, கார்த்திகை, மிருகசீரிடம், புனர்பூசம், ஆயிலியம், மகம், உத்திரம், சித்திரை, விசாகம், கேட்டை, மூலம், உத்திராடம், அவிட்டம், பூரட்டாதி, ரேவதி

**இன்று பின்னிரவு 12.58 மணிக்கு மேல்**
அஸ்வினி, பரணி, ரோஹிணி, திருவாதிரை, பூசம், மகம், பூரம், அஸ்தம், சுவாதி, அனுஷம், மூலம், பூராடம், திருவோணம், சதயம், உத்திரட்டாதி

**போன்ற நட்சத்திரங்களில் பிறந்தவர்களுக்கு, தொழில், வியாபார இலாபங்கள்,கல்விச் சிறப்பு, திடீர் தன அதிர்ஷ்டம், உடல் ஆரோக்கியம், தெய்வ அனுக்கிரகம் அனைத்தும் சித்திக்கும்.**

**விஷேட தினம்:** சங்கடஹர சதுர்த்தி விரதம்

**கணிப்பு : சிவா பாஸ்கரராவ்**



(ஜோதிடம் மற்றும் வாஸ்து ஆய்வாளர்) ஸ்தாபகர் - ஓம்சிவ ஜோதிட வித்தியா & வாஸ்து நிலையம்.
தொலைபேசி :
077-0525325
078-6759739

# புளிக்கான விலை சடுதியாக அதிகரிப்பு

**(கா.யோசியா)**

சமையலுக்குப் பயன்படுத்தப்படும் ஒரு கிலோ புளியின் மொத்த விலை 1, 000 ரூபாவாக அதிகரித்துள்ளதாக பொருளாதார மத்திய நிலையத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தற்போதைய நாட்களில் வறண்ட பகுதிகளில் புளி அறுவடை செய்யப்பட்டாலும், ஒரு கிலோ புளியின் மொத்த விற்பனை விலை அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

புளியின் மொத்த விற்பனை விலை உயர்வால், 100 கிராம் புளி பொதியின் விலை 150 ரூபா வரை உயர்வடைந்துள்ளது.

போதியளவு புளி தொகை சந்தைக்கு கிடைக்காமையினால் இவ்வாறு விலை உயர்ந்துள்ளதாக பொருளாதார மைத்திய நிலையத் தகவல்கள் கூறுகின்றன.

# கட்டணம் செலுத்தாததால் மின் துண்டிப்பு அதிகரிப்பு

## நடப்பாண்டின் 06 மாதங்களில் ஆறு இலட்சம் மின்வெட்டு

**(கே.சுபானி)**

மின்கட்டணம் செலுத்தப்படாததால் நாட்டில் மின் துண்டிப்பு அதிகரித்துள்ளதாக மின் பாவனையாளர்களின் சங்கம் சுட்டிகாட்டியுள்ளது.

இவ்வாண்டு ஜனவரி முதல் ஜூன் மாதம் வரையான காலப்பகுதிக்குள் நாட்டில் மின் துண்டிப்புகள் வேகமாக அதிகரித்துள்ளதாகவும் இலங்கை மின்சார சபையின் தரவுகளின்படி 2023 ஆம் ஆண்டுக்குள் உரிய நேரத்தில் பணம் செலுத்தாமையால் 9,70,933 மின் துண்டிப்புகள் இடம்பெற்றுள்ளதாகவும் மின்பாவனையாளர்கள் சங்கத்தின் தேசிய செயலாளர் சஞ்சீவ தம்மிக்க தெரிவித்துள்ளார்.

அந்தவகையில், இவ்வாண்டு ஜனவரி முதல் ஜூன் வரையான 06 மாத காலப்பகுதிக்குள் 6,28,286 மின் துண்டிப்புகள் இடம்பெற்றுள்ளன. இதன்படி 5,05,949 வீடுகள், 8,579 தொழிற்சாலைகள், 2,090 வழிபாட்டுத் தலங்கள், 39 ஹோட்டல்கள், 359 பொதுத்துறை நிறுவனங்கள், 1,11,276 கடைகள் மற்றும் ஏனையவை என்ற அடிப்படையில் இந்த மின் துண்டிப்பு இடம்பெற்றுள்ளது.

கடந்த ஆண்டு நாளொன்றுக்கு 2,660 மின் துண்டிப்புச் சம்பவங்கள் இடம்பெற்ற நிலையில், இவ்வாண்டு சராசரியாக 3,443 மின் துண்டிப்புச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

மின்சார சபையின் தரவுகளின் அடிப்படையில் ஏற்பட்ட மின் கட்டண அதிகரிப்பால் கடந்த மாதங்களில் மின்கட்டணத்தின் நிலுவைத் தொகை அதிகரித்தமையினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இவ்வருடம் இவ்வாறு இக்கட்டான சூழ்நிலை தோற்றம்பெற்றுள்ளது.

மின்சாரச் சட்டத்தை மீறி இலங்கை மின்சார சபை பெரும் இலாபம் ஈட்டியுள்ளது. எனினும், வாடிக்கையாளர் தமது நகைகளை அடகு வைத்துக்கூட மின் கட்டணங்களைச் செலுத்த வேண்டியுள்ளது. இறுதியில் அடகு வைத்த தங்கப் பொருட்களுக்கு வட்டி கட்ட வேண்டியுள்ளது.

மின்பாவனையாளர்கள் தமது தோட்டத்திலுள்ள இலைகுழைகளைக் கூட விற்று இக்கட்டணங்களைச் செலுத்த வேண்டிய நிலை ஏற்பட்டது. இதனால் மின் பாவனையாளர்கள் பெரும் பாதிப்புக்குள்ளாகியுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# புத்தகயாவை தரிசித்தார் ஜனாதிபதி அநுர





ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க நேற்று (17) காலை புத்தகயாவுக்குச் சென்று சித்தார்த்த இளவரசர் ஞானம் பெற்ற இடத்தில் அமைந்துள்ள மகா விகாரை மற்றும் ஸ்ரீ மகாபோதி என்பவற்றைத் தரிசித்து ஆசி பெற்றுக்கொண்டார்.

இந்திய மகாபோதி சங்கத்தின் பொதுச் செயலாளர் வண. பெலவத்தே சீவலி தேரர் மற்றும் சாரநாத் மையத்தின் விகாராதிபதி வண. ரத்மல்வல சுமித்தானந்த தேரர் ஆகியோர் ஜனாதிபதிக்கு ஆசீர்வாதம் வழங்கினர்.

வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் விஜித ஹேரத், தொழில் அமைச்சர் மற்றும் பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சர் பேராசிரியர் அனில் ஜயந்த பெர்னாண்டோ ஆகியோரும் இதன்போது கலந்துகொண்டிருந்தனர்.

# கல்வியமைச்சின் முன் போராட்டத்தில் ஈடுபட்டோர் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைதாகவில்லை

## சபை முதல்வர் பிமல் ரத்நாயக்க



கல்வியமைச்சின் முன்பாக போராட்டத்தில் ஈடுபட்ட அபிவிருத்தி உத்தியோகஸ்தர்கள் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்படவில்லையெனத் தெரிவித்த சபை முதல்வர் பிமல் ரத்நாயக்க, பயங்கரவாத தடைச்சட்டத்துக்கமைய கைது இடம்பெற்றதாக எதிர்க்கட்சி எம்.பி. நளின் பண்டார தெரிவித்த பொய்யான கருத்தை அவர் மீளப் பெறவேண்டுமெனவும் வலியுறுத்தினார்.

பாராளுமன்றத்தில் நேற்று (17) நடைபெற்ற அமர்வின்போது விசேட கூற்றை முன்வைத்து உரையாற்றிய பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால, கல்வியமைச்சின் முன்பாகப் போராட்டத்தில் ஈடுபட்ட அபிவிருத்தி உத்தியோகஸ்தர்கள் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டதாக எதிர்க்கட்சி எம்.பி. நளின் பண்டார தெரிவித்த கருத்து முற்றிலும் பொய்யானது.

போராட்டத்தின்போது பொலிஸார் மீது தாக்குதலை நடத்தி,வன்முறையில் ஈடுபட்ட அபிவிருத்தி உத்தியோகஸ்தர்கள் பொதுச்சட்டத்தின் கீழேயே கைதுசெய்யப்பட்டார்கள். எவரும் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்படவில்லை என்றார்.

இதன்போது எழுந்த சபை முதல்வர் பிமல் ரத்நாயக்க, பயங்கரவாத தடைச்சட்டம் குறித்து தெரிவிக்கப்படும் கருத்துகளைப் பொறுப்புடன் தெரிவிக்க வேண்டும். பயங்கரவாத தடைச்சட்டத்தை அரசாங்கம் பயன்படுத்துகிறது என்ற நிலைப்பாட்டை சர்வதேச மட்டத்தில் தோற்றுவிக்கவே இவர்கள் முயற்சிக்கிறார்கள்.

எதிர்க்கட்சி எம்.பி. நளின் பண்டார தெரிவித்த கருத்தை பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் நிராகரித்துள்ளார். எனவே, பொய்யான கருத்தை அவர் வாபஸ்பெற வேண்டுமென வலியுறுத்தினார்.

இதன்போது எழுந்த எதிர்க்கட்சி எம்.பி.நளின் பண்டார, ''பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைதுகள் இடம்பெறவில்லையெனில் அதனை வரவேற்பேன். பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் கூற்றை ஆராய்ந்ததன் பின்னர் நாளை (இன்று 18) குறிப்பிட்ட கருத்தை மீளப்பெறுவது குறித்து தெரிவிப்பேன்''- என்றார்.

# இலங்கையில் நீரிழிவை கட்டுப்படுத்துவதில் பங்களிப்பு வழங்குவதற்காக யூனியன் அஷ்யூரன்ஸ் 'சுவமக நடமாடல் இனங்காணல் அலகு' அறிமுகம்

இலங்கையின் முன்னணி ஆயுள் காப்புறுதி சேவை வழங்குநரான யூனியன் அஷ்யூரன்ஸ், தனது பிரதான சமூகப் பொறுப்புணர்வு செயற்திட்டமான சுவமக ஊடாக, சமூகத்தின் நலனுக்கு வளமூட்டும் செயற்பாடுகளை தொடர்ந்தும் முன்னெடுத்த வண்ணமுள்ளது. இலங்கையில் அதிகரித்துச் செல்லும் நீரிழிவு நோயை கட்டுப்படுத்தும் செயற்பாடுகளில் பங்களிப்பு வழங்கும் வகையில், தனது வர்த்தக நாம நோக்கமான வாழ்க்கையை பாதுகாத்தல் மற்றும் அனைவரின் நலனுக்கும் வளமூட்டல் என்பதற்கமைவாக, சுவமக திட்டத்தை அறிமுகம் செய்திருந்தது. நீரிழிவு தொடர்பில் விழிப்புணர்வை ஏற்படுத்தி, சிறந்த ஆரோக்கியமான வாழ்க்கைமுறைகளை ஊக்குவிப்பதில் இந்தத் திட்டம் பரந்தளவில் கவனம் செலுத்துவதுடன், ஆரம்ப கட்டத்தில் இனங்காண்பதற்கு உதவுதல் மற்றும் இடர் முகாமைத்துவத்துக்கு பங்களிப்பு செய்வதுடன், சமூக ஈடுபாட்டை கட்டியெழுப்புவதிலும் கவனம் செலுத்துகின்றது.

இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் அங்கமாக, நிறுவனம் தனது 'சுவமக நடமாடும் இனங்காணல் அலகு' என்பதை, கொழும்பு சினமன் லேக்சைட் ஹோட்டலில் அறிமுகம் செய்திருந்தது. இந்நிகழ்வில், சுகாதார அமைச்சு மற்றும் இலங்கை நீரிழிவு சங்கத்தின் பிரதிநிதிகளும் பங்கேற்றிருந்தனர். சுவமக நடமாடும் இனங்காணல் அலகு என்பது, தகைமை பெற்ற சுகாதார பராமரிப்பு நிபுணர்களைக் கொண்ட சகல வசதிகளையும் உள்ளடக்கிய நீரிழிவு பரிசோதனைகளை இலவசமாக முன்னெடுக்கக்கூடிய வகையில் வடிவமைக்கப்பட்ட நடமாடும் ட்ரக் வண்டியாக அமைந்துள்ளது. இந்த பரிசோதனைகளை மேற்கொண்ட பங்குபற்றுனர்களுக்கு சுகாதார அறிக்கைகள் வழங்கப்படுவதுடன், சுகாதார இடர்களை தணித்துக் கொள்வது மற்றும் நிர்வகித்துக் கொள்வது தொடர்பான பிரத்தியேகமான வழிகாட்டல்களும் வழங்கப்படும். இந்த நடமாடும் அலகு இலங்கை முழுவதும் விஜயம் செய்யவுள்ளதுடன், சகல வயதினருக்கும் இலவச பரிசோதனையை மேற்கொள்ளும் வசதி வழங்கப்படுவதை உறுதி செய்யும். யூனியன் அஷ்யூரன்ஸ் வாடிக்கையாளர்கள் மற்றும் அதன் வாடிக்கையாளர் அல்லாதவர்களுக்கும் இந்த பரிசோதனைகளில் பங்கேற்க முடியும் என்பதால், பொது மக்கள் சுகாதார சேவைகளை பெற்றுக் கொள்ளும் அணுகல் மேம்படுத்தப்பட்டுள்ளது.



















தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91. விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 0114 846 097
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com
2024 டிசம்பர் 18ஆம் திகதி, புதன்கிழமை

# ஜனாதிபதியும் இந்திய விஜயமும்!

***''இலங்கையின் நல்லிணக்கம் மற்றும் புனரமைப்புக் குறித்தும் நாம் கலந்துரையாடியுள்ளோம்.***

***ஜனாதிபதி திசாநாயக்க, அனைவரையும் உள்ளடக்கிய தனது நோக்கு குறித்து என்னிடம் கூறியுள்ளார்.***

***தமிழ் மக்களின் அபிலாஷைகளை இலங்கை அரசாங்கம் நிறைவேற்றுமென நாம் நம்புகின்றோம்.***

***அத்துடன், இலங்கை அரசியலமைப்பை முழுமையாக அமுல்படுத்தவும் மாகாண சபைத் தேர்தல்களை நடத்துவதற்குமான தமது உறுதிமொழியை அவர்கள் நிறைவேற்ற வேண்டும்''***

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவைச் சந்தித்து பேச்சு நடத்திய பின்னர் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி மேற்படி தெரிவித்திருக்கிறார்.இருதரப்புத் தலைவர்களும் நடத்திய செய்தியாளர் மாநாட்டில் முக்கிய பல விடயங்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

இருதரப்பு வர்த்தக நடவடிக்கைகளை மேம்படுத்துவதற்காக எட்கா உடன்படிக்கையை நிறைவேற்றும் முயற்சிகள் இரு தரப்பாலும் மேற்கொள்ளப்படுமென்று பிரதமர் மோடி தனது உரையில் தெரிவித்திருந்தார்.ஏற்கனவே எட்கா ஒப்பந்தம் குறித்து முன்னாள் ஜனாதிபதி ரணில் பாராளுமன்றத்தில் ஆற்றிய உரையை அநுரகுமார அப்போது கடுமையாக விமர்சித்திருந்தார் என்பதையும் இங்கு நினைவூட்டவேண்டியுள்ளது.

அதுமட்டுமல்ல, 2016 ஆம் ஆண்டு பெப்ரவரி 17 ஆம் திகதி கொழும்பு மகாவலி கேந்திர நிலையத்தில் நடைபெற்ற கருத்தரங்கொன்றில் பேசிய ஜனாதிபதி அநுரகுமார பின்வருமாறு கூறுகிறார்.

***"இங்கு அரசியல் சூதாட்டம் நடக்கிறது. நமது நாட்டில் அரசியலில் இந்தியா தலையிட முயற்சிக்கிறது. ஏற்கனவே யாழ்ப்பாணத்தில் பல ரோ உளவாளிகள் உள்ளனர். நமது நாட்டை ஓர் அரசியல் விளையாட்டு மைதானமாக மாற்றுவதற்கு முன், இந்தியா நமது பொருளாதாரத்தைச் சூறையாட விரும்புகிறது. ஏற்கனவே இந்தியா வாகனம், மருத்துவம் மற்றும் கட்டுமானத் துறைகளில் ஏகபோக உரிமையைக் கொண்டுள்ளது. ஏற்கனவே நமது பொருளாதாரத்தை அது கட்டுப்படுத்தி வருகின்றது. அதன் மூலம் நம் நாட்டில் அரசியலைக் கையாளுகிறார்கள். இந்த அரசியல் தேவைதான் என்று ரணிலின் வாயிலிருந்து குதிக்கிறது. ஆனால், இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்படுவதற்கு ஒருபோதும் இடமளிக்க மாட்டோம்"*** - என ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார தெரிவித்தார்.

ஆனால், அரசியலில் நிரந்தர எதிரியுமில்லை நண்பனுமில்லை என்பதுபோல பொருளாதார நெருக்கடிகளுக்குப் பின்னால் நிலைமையெல்லாம் தலைகீழாக மாறி இப்போது எட்கா ஒப்பந்தத்தை செய்யவேண்டிய நிலையில் இருக்கிறது அநுரகுமார அரசாங்கம். ஆனால், ஒப்பந்தம் செய்யப்படும்வரை அது செய்யப்படுமா இல்லையா என்பது தொடர்பில் உறுதியாக எதனையும் கூறிவிட முடியாது. அதேபோல, மாகாண சபைகளுக்கெதிராக ஒருகாலத்தில் போர்க்கொடி தூக்கியவர்கள் இன்று மாகாண சபைத் தேர்தலை எப்போது நடத்துவோமென்ற நிலைமைக்கு வந்திருப்பதும் ஒருவகையில் வரவேற்கத்தக்கது.

இலங்கை - இந்திய மீனவர்களின் வாழ்வாதாரத்துடன் தொடர்புடைய விவகாரங்கள் குறித்து விரிவான கலந்துரையாடல் இடம்பெற்றாலும் இந்த விவகாரம் தொடர்பாக மனிதாபிமான ரீதியிலான அணுகுமுறையை கடைப்பிடிக்க வேண்டுமென எடுக்கப்பட்டிருக்கும் தீர்மானம் மீனவர்களுக்கு ஏமாற்றமான முடிவு. ஏனெனில், கடந்த காலங்களிலும் இப்படியான முடிவுகளே எடுக்கப்பட்டாலும் ஆக்கபூர்வமான வகையில் மீனவர்களின் பிரச்சினை அணுகப்படவில்லை.


இந்தியாவின் பாதுகாப்புக்கும் பிராந்தியத்தின் ஸ்திரத்தன்மைக்கும் பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் இலங்கை மண்ணைப் பயன்படுத்த ஒருபோதும் இடமளிக்கப்போவதில்லையென ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க இந்தியாவில் தெரிவித்திருப்பது சீனாவின் இலங்கை ஆதிக்கத்தினால் அதிருப்தியுற்றுள்ள புதுடில்லியை ஆசுவாசப்படுத்துவதற்காக இருக்கலாம். இதே நிலைப்பாட்டையே முன்னர் ஆட்சி செய்த பலரும் எடுத்திருந்தார்கள்.என்றபோதிலும், இந்தியாவில் சொல்வது ஒருபுறமும் கொழும்பில் செய்வது இன்னொருவிதமுமாகவே அவர்களின் செயற்பாடுகள் இருந்தன. இந்தியாவின் தேசிய பாதுகாப்புக்கு ஆதரவு உள்ளதோ இல்லையோ இலங்கையில் சீனாவின் ஆதிக்கத்துக்கு எந்தக் குறைச்சலும் வந்ததில்லை.

எவ்வாறாயினும், தமிழர்கள் குறித்து இந்தியா வழமையாகப் பாடும் பல்லவியையே இப்போதும் பாடியிருக்கிறது. ஜனாதிபதி அநுரவும் எல்லா ஜனாதிபதிமாரும் போடும் தாளத்தையே அங்கு போட்டிருக்கிறார். ஆனால், நடைமுறையில் எதுவும் வருவதாக நிலைமை இல்லை.

இலங்கை ஆட்சியாளர்களைப் பொறுத்தவரை பிராந்திய அரசியலைக் கையாள முடியாமல் அது தடுமாறுவது தெரிகிறது. இந்திய தொழிலதிபர் அணிக்கு எதிராக அமெரிக்க உயர்நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது . மறுபக்கம், அதானியின் இலங்கை முதலீட்டை கொழும்பு நிராகரிக்க முடியாமல் இருக்கிறது. அப்படியே அதானியின் முதலீடுகளுக்கு இங்கே இடமளித்தால் அமெரிக்காவின் எதிர்ப்பை சம்பாதிக்கவேண்டிவரும். அதுமட்டுமல்ல, சீனாவுக்கு அதிகபட்சம் இடமளித்தால் அமெரிக்காவினதும் இந்தியாவினதும் எதிர்ப்பு வந்துவிடலாம்.ஜனாதிபதி அநுரகுமாரவின் இந்திய விஜயம் மேலோட்டமாக நோக்கினால் ஆளுங்கட்சிக்கு வெற்றிகரமானதாக இருப்பதாகத் தெரிந்தாலும் களநிலைமைகள் அப்படி இல்லை. ஜனாதிபதி அநுர விரைவில் சீனாவுக்கான விஜயத்தை மேற்கொள்ளவுள்ளார். அங்கும் முக்கிய பல ஒப்பந்தங்கள் எட்டப்படவுள்ளதாக அறியமுடிகின்றது.

ஜனாதிபதி அநுரகுமார தனது ஆட்சியின் முதலாவது பயணத்தை இந்தியாவுக்கு மேற்கொண்டார் என்று பெருமைப்படுவதற்கு அப்பால், அவர் இனி இந்தியாவையும் சீனாவையும் எப்படிக் கையாளப்போகிறார் என்பதில்தான் அடுத்தகட்ட செயற்பாடுகள் அமையப்போகின்றன.பொறுத்திருந்து பார்ப்போம்.

# தந்தை மகற்கு ஆற்றும் நன்றி!



மன்னராட்சி, இராணுவ ஆட்சி, சர்வாதிகார ஆட்சி ஆகியவற்றில் அதிகாரத்தில் இருப்பவர்களுக்கு தண்டிக்கவும் மன்னிக்கவும் உரிமை உண்டு. மக்களாட்சி அதிலிருந்து வேறுபடுகிறது. ஜனநாயகத்தில் ஆட்சியாளர்களுக்கு தண்டிக்கும் உரிமை கிடையாது. அது நீதித்துறையைச் சார்ந்தது. மன்னிக்கும் உரிமையும்கூட குடியரசுத் தலைவருக்கோ ஆளுநருக்கோதான் உண்டு.

விரைவில் தனது பதவிக்காலம் முடிந்து வெள்ளை மாளிகையில் இருந்து வெளியேறவிருக்கும் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன், தனது மகனுக்கு பல்வேறு தண்டனைகளிலிருந்து பொது மன்னிப்பு வழங்கியிருப்பது இப்போது உலகளாவிய அளவில் பேசுபொருளாக மாறியிருக்கிறது. துப்பாக்கி விதிமுறை மீறல்கள், வரி முறைகேடுகள் உள்ளிட்டவற்றுக்காக கடந்த 11 ஆண்டுகளாக அவர் எதிர்கொள்ளும் பல்வேறு குற்றங்களிலிருந்து நிபந்தனையற்ற பொது மன்னிப்பு ஜனாதிபதி ஜோ பைடனால் வழங்கப்பட்டிருக்கிறது.

2016-19 ஆண்டுகளில் 14 இலட்சம் டொலர் அளவிலான வருமான வரி ஏய்ப்பு குற்றச்சாட்டுக்கு உள்ளாகியிருக்கிறார் ஹன்டர் பைடன். போதை மருந்து, உல்லாச விடுதிகள், மோட்டார் வாகனங்கள் ஆகியவற்றுக்காக 50 இலட்சம் டொலர் செலவழித்த கணக்கில் குற்றச்சாட்டு உறுதிப்படுத்தப்பட்டிருக்கிறது. இதற்காக மட்டுமே அவருக்கு 17 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்படலாம். துப்பாக்கி விதிமீறல் குற்றச்சாட்டு 25 ஆண்டுகால தண்டனைக்குரியது. பொது மன்னிப்பு காரணமாக சிறைத் தண்டனையிலிருந்து தப்பித்திருக்கிறார் ஹன்டர் பைடன்.

தனது மகன் என்பதால் ஹன்டர் பைடன் அரசியல் காரணங்களுக்காகக் குற்றஞ்சாட்டப்பட்டிருக்கிறார் என்பது ஜனாதிபதி ஜோ பைடனின் விளக்கம். உண்மை என்னவென்றால் ஜனாதிபதி தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் டொனால்ட் ட்ரம்ப்பின் ஆட்சியில் ஏற்கனவே உள்ள குற்றச்சாட்டுகள் மட்டுமல்லாமல், புதிய குற்றச்சாட்டுகளும் சுமத்தப்பட்டு தனது மகன் பழிவாங்கப்படலாம் என்கிற 82 வயது தந்தையின் அச்சம்தான் ஜனாதிபதி ஜோ பைடனின் பொது மன்னிப்பின் அடிப்படை.

அமெரிக்க அதிபர்கள் தங்களது நெருங்கிய உறவினர்களுக்கும் அரசியல் ஆதரவாளர்களுக்கும் நண்பர்களுக்கும் பொது மன்னிப்பு வழங்குவதென்பது புதிதொன்றுமல்ல. ஆயிரக்கணக்கானவர்கள் - போதைப் பொருள் உள்ளிட்ட குற்றங்களுக்காக தண்டிக்கப்பட்டவர்கள்கூட - அமெரிக்க ஜனாதிபதிகளால் பொது மன்னிப்பு வழங்கப்பட்டு விடுவிக்கப்பட்டிருக்கிறார்கள். அப்படி இருக்கும்போது ஜனாதிபதி ஜோ பைடன் எடுத்திருக்கும் முடிவு விமர்சனத்துக்குள்ளாகியிருப்பதற்கு அவரேதான் காரணம்.

தனது ஜனாதிபதித் தேர்தல் பிரசாரத்திலும் சரி, அதற்குப் பிறகும் சரி தனது மகனுக்குப் பொது மன்னிப்பு வழங்கப்படமாட்டாது என்று உறுதியளித்திருந்தார் ஜனாதிபதி ஜோ பைடன். ஏறத்தாழ 12 குற்றச்சாட்டுகளில் நீதிமன்றத் தண்டனைக்கு முன்னரே மகன் ஹன்டருக்கு தனது பதவிக்காலத்தின் இறுதி நாட்களில் பொது மன்னிப்பு வழங்கியதுதான் விமர்சனத்துக்கு உள்ளாகியிருக்கிறது.

ஜனாதிபதியாகப் பதவியேற்கவிருக்கும் டொனால்ட் ட்ரம்ப் முதல்முறை ஜனாதிபதியாக இருந்தபோது, தனது மகள் இவான்காவின் மாமனார் சார்ள்ஸ் குஷ்னர் என்பவருக்கு பதவிக் காலம் முடியவிருக்கும் தறுவாயில் பொது மன்னிப்பு வழங்கியிருக்கிறார். மனை வணிக வியாபாரியான, பொது மன்னிப்பு வழங்கப்பட்ட சார்ள்ஸ் குஷ்னர், ட்ரம்ப் மீண்டும் பதவியேற்கும்போது பிரான்ஸ் நாட்டுக்கான அமெரிக்கத் தூதராக இருப்பார் என்கிற அறிவிப்பு வந்திருக்கிறது.

தனது பதவிக்காலத்தில் 143 பொது மன்னிப்புகளை டொனால்ட் ட்ரம்ப் வழங்கினார் என்றால், அதற்கு முன்னால் பராக் ஒபாமா (212), பில் கிளிண்டன் (396) ஆகியோரும் தாராளமாகவே பொது மன்னிப்பு வழங்கியிருக்கிறார்கள். போதைப் பொருட்கள் குற்றத்துக்காக சிறைத் தண்டனை அனுபவித்த தனது மாற்றாந்தாய் சகோதரரான ரோஜர் கிளிண்டனுக்கும் தனது முன்னாள் வியாபார கூட்டாளியான சூசன் மெக்டகல் என்பவருக்கும் ஜனாதிபதி கிளின்டன் பொது மன்னிப்பு வழங்கியது குறிப்பிடத்தக்கது.

வாட்டர்கேட் முறைகேட்டில் பதவி விலகிய முன்னாள் ஜனாதிபதி ரிச்சர்ட் நிக்சனை, 1974இல் முழுமையான பொது மன்னிப்பு வழங்கிப் பாதுகாத்தார் அவருக்குப் பின்னால் ஜனாதிபதியான ஜெரால்ட் ஃபோர்ட். 1969 முதல் 1974 வரை பதவி வகித்த நிக்சன் 863; 1953 முதல் 1961 வரை பதவி வகித்த டுவைட் ஐசன்ஹோவர் 1,110; 1945 முதல் 1953 வரை பதவியிலிருந்த ஹாரி ட்ரூமன் 1,913; 1933 முதல் 1945 வரை ஜனாதிபதியாக இருந்த பிராங்க்ளின் ரூஸ்வெல்ட் 2,819 பொது மன்னிப்புகளை தங்களது பதவிக்காலத்தில் வழங்கியிருக்கிறார்கள்.

அமெரிக்க அரசமைப்புச் சட்டத்தின்படி தேசிய அரசில் தண்டனைகளுக்கு மட்டும்தான் ஜனாதிபதியால் பொது மன்னிப்பு வழங்க முடியும். மாகாணங்களில் நிலவும் குற்றச்சாட்டுகளையும் தண்டனைகளையும் இரத்துச் செய்யும் அதிகாரம் அந்தந்த மாகாண ஆளுநர்களுக்கு மட்டும்தான் உண்டு. பொது மன்னிப்பு வழங்குவதாலேயே அமெரிக்க பாராளுமன்றம் அந்தக் குற்றச்சாட்டுக் குறித்து விசாரிப்பதிலிருந்து விலக்குப் பெற முடியாது.

**நன்றி - தினமணி**

## இன்றைய நாளில்...

- 1787 – நியூ ஜெர்சி ஐக்கிய அமெரிக்காவில் 3ஆவது மாநிலமாக இணைந்தது.
- 1911 – சேர் பொன்னம்பலம் இராமநாதன் இலங்கையின் சட்டவாக்கப் பேரவைக்குத் தேசிய பிரதிநிதியாகத் தெரிவானார்.
- 1935 – லங்கா சமசமாஜக் கட்சி இடதுசாரிக் கட்சி இலங்கையில் ஆரம்பிக்கப்பட்டது.
- 1958 – உலகின் முதலாவது தகவல் தொடர்பு செயற்கைக்கோள், 'ஸ்கோர்', ஏவப்பட்டது.
- 1966 – சனிக் கோளின் எப்பிமேத்தியஸ் என்ற சந்திரன் கண்டுபிடிக்கப்பட்டது.
- 1973 – இஸ்லாமிய வளர்ச்சி வங்கி ஆரம்பிக்கப்பட்டது.
- 1990 – திருகோணமலை இராணுவத் தளபதி லக்கி விஜயவர்த்தன கண்ணிவெடித் தாக்குதலில் கொல்லப்பட்டார்.
- 1999 – கொழும்பு நகரசபை முன்னரங்கில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தின்போது, முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க மீது நடத்தப்பட்ட தற்கொலைத் தாக்குதலில் அவர் தனது வலது கண்ணை இழந்தார்.

## நக்கல் நமசிவாயம்

***அரிசி சாப்பிட்டா உடம்புக்கு சரியில்லை என்று கருதிதான் மக்களை ஆரோக்கியமாக வைக்க செயற்கையா அரிசி தட்டுப்பாட்டை உருவாக்கினாங்களோ என்னவோ?***



## மக்கள் கடிதம்

வாசகர்களே!
உங்கள் பகுதியில் நிலவும் குறைபாடுகள், தேவைகளை சுட்டிக்காட்ட நாங்கள் இடம் தருகிறோம். தட்டச்சு செய்தோ, எழுத்து மூலமாகவோ அவற்றை நீங்கள் எமக்கு அனுப்பலாம். அவற்றை பிரசுரிப்போம்.

ஆசிரியர்,
மக்கள் கடிதம், தமிழன் பத்திரிகை நிறுவனம்,
இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
அல்லது *thamilaneditor@gmail.com* என்ற மின்னஞ்சலுக்கு அனுப்பலாம்.

## சுயநலமற்ற சேவை

சுயநலமற்ற சகல சேவைகளையும் உள்ளன்போடு செய்துவரின் எமக்கு உரிய பலன் கிட்டும். 'எல்லோரும் வாழ்க இன்பமே சூழ்க' என்பதே பொதுச் சேவை அடிப்படை. நாம் பெற்ற கல்வி, அனுபவங்கள் யாவும் இயன்றவரையில் நம் சக்திக்கேற்ப பிறருக்கு அளிக்க முன்வரல் கடன். 'கருணை நிறைந்த உள்ளம் கடவுளார் வாழும் இல்லம்.'

எனவே, பதவி மோகத்துடன் சொந்தபந்தங்களை மட்டும் முன்வரிசையில் அமர்த்தி சேவையாற்றுவது சுயநலமே. அதேவேளை, அன்புள்ளத்துடன் யாவரையும் நேசிப்பதே சிறப்பு.

'சொல்லுதல் யார்க்கும் எளிய - அறிவாம் சொல்லிய வண்ணம் செயல்' அலங்காரமான வாய்ப்பேச்சில் ஒருவித பயனுமில்லை. சத்தியம், நல்லொழுக்கம் ஆகியன மேலோங்கி பொதுப் பணிகளில் ஆர்வமுடன் செயற்படுதலே முக்கியம்.

''எப்பொழுதெல்லாம் அறமகிழ்ந்து மறம் தோன்றுகின்றதோ அப்பொழுதெல்லாம் நல்லோரைக் காக்கவும் தீயோரை அழிக்கவும் அறத்தை நிலைநாட்டவும் நான் யுகம் தோறும் திருவவதாரம் செய்கிறேன்'' - என பகவத்கீதையில் கிருஷ்ணர் குறிப்பிடுகிறார். எனவே, உரிய அறநெறியில் பொதுச் சேவையில் பங்காற்றி இனிய வாழ்வு பெறுவோமாக.

''ஆற்றுவார் ஆற்றல் இகழாமை போற்றுவார் போற்றலுள் எல்லாம் தலை'' – திருக்குறள்.

***வ.சி. ஸ்ரீஸ்கந்தராசா,***
***ஆத்தியடி,***
***புலோலி***
***மத்தி,பருத்தித்துறை.***

# பாராளுமன்ற இணையத்தளத்தை இடைநிறுத்துமாறு நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார கோரிக்கை

பாராளுமன்ற உறுப்பினர்கள் தொடர்பான பிழையான தரவுகள் திருத்தப்படும் வரை பாராளுமன்ற இணையத்தளத்தை இடைநிறுத்துமாறு நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார நேற்று (17) பாராளுமன்றில் கோரிக்கை விடுத்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று (17) மு.ப 11.00 மணிமுதல் பி.ப 3.00 மணிவரை பாடசாலை மாணவர்களுக்கான காகிதாதிகளுக்கான ஒதுக்கீடுகளை மேற்கொள்வது தொடர்பான குறைநிரப்பு தொகை மதிப்பீடு விவாதத்தின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

பாராளுமன்ற இணையத்தளத்தில் தனது பெயர் மாத்திரமன்றி, ஏராளமான பாராளுமன்ற உறுப்பினர்களின் விபரங்கள் பிழையான முறையில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளதாக அமைச்சர் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

பாராளுமன்ற இணையத்தளத்தில் உள்ள விபரங்களை பத்து ஆண்டுகளுக்கு மீண்டும் புதுப்பிக்க முடியும் என்று கூறிய அவர், பாராளுமன்ற உறுப்பினர்கள் அசௌகரியங்களுக்கு உள்ளாகாமல் இருக்க பாராளுமன்ற இணையத்தளம் பராமரிக்கப்பட வேண்டும் என்றார்.

“பாராளுமன்ற இணையத்தளத்தை இடைநிறுத்தி பிழைகளை சரி செய்து 100 வீதம் பிழைகளை திருத்திய பின்னர் மீண்டும் திறக்குமாறு பொதுச் செயலாளரின் அலுவலகத்தைக் கேட்டுக்கொள்கிறேன்” என்று அவர் கூறினார்.



# புதிய சபாநாயகருக்கு ரிஷாத் எம்.பி. சபையில் வாழ்த்து



10ஆவது பாராளுமன்றத்தின் புதிய சபாநாயகராக நியமிக்கப்பட்டுள்ள வைத்தியகலாநிதி ஜகத் விக்கிரமரத்னவுக்கு ஐக்கிய மக்கள் சக்தியின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவருமான ரிஷாத் பதியுதீன் வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

சபையில் நேற்று (17) வாழ்த்துத் தெரிவித்து, உரையாற்றிய அவர் மேலும் கூறியதாவது,

“புதிய சபாநாயகராகத் தெரிவுசெய்யப்பட்டுள்ள உங்களுக்கு எனது வாழ்த்துக்கள். அதேபோன்று, எமது அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சி சார்பாகவும் மனமார்ந்த வாழ்த்துகளை தெரிவித்துக்கொள்கின்றேன்.

பெரும்பான்மையைக் கொண்டுள்ள ஒரு அரசாங்கத்தின் சபாநாயகராக நீங்கள் தெரிவுசெய்யப்பட்டிருக்கிறீர்கள். ஒரு குறுகிய காலத்துக்குள் இரண்டாவது சபாநாயகராக பாராளுமன்றத்தில் தெரிவாகியுள்ள நீங்கள், ஒரு வைத்தியராகவும் இருக்கின்றீர்கள்.

எனவே, சகல கட்சிகளையும் அனைத்து உறுப்பினர்களையும் சமமாக மதித்து, அனைவரினதும் உரிமைகளைப் பாதுகாத்து, நேர்மையாகச் செயற்படுவீர்கள் என்ற நம்பிக்கையோடு, உங்களை வாழ்த்துகிறேன்” என்றும் குறிப்பிட்டார்.

# சட்டவாக்க செயற்பாட்டில் பாலின சமத்துவத்தை மேம்படுத்துவது குறித்து பாகிஸ்தானில் செயலமர்வு





சட்டவாக்க செயற்பாட்டில் பாலின சமத்துவத்தை மேம்படுத்துவது தொடர்பில் பாலின சமத்துவம் பற்றிய உணர்திறன் கொண்ட சட்டமூலங்களைத் தயாரிப்பது குறித்த செயலமர்வு கடந்த 14 மற்றும் 15ஆம் திகதிகளில் பாகிஸ்தானின் பாராளுமன்ற சேவைகளுக்கான நிறுவனத்தில் நடைபெற்றது.

பாகிஸ்தான் பாராளுமன்ற பெண் உறுப்பினர்கள் ஒன்றியத்தின் செயலாளர் ஷஹிதா ரெஹ்மானி தலைமையில் நடைபெற்ற இந்த செயலமர்வில் இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தி பாராளுமன்ற பெண் உறுப்பினர்களின் ஒன்றியத்தின் பிரதி இணைத்தலைவர் சட்டத்தரணி சமிந்திரானி பண்டார கிரிஎல்லே மற்றும் ஒன்றியத்தின் உறுப்பினர் லக்மாலி ஹேமச்சந்திர ஆகியோர் கலந்துகொண்டனர்.

சர்வதேச தரங்கள் மற்றும் சட்டக் கட்டமைப்பு, பிராந்தியங்களிலிருந்தான சிறந்த நடைமுறைகள், பிரச்சினைகளை அடையாளம் காணுதல் மற்றும் இடைவெளிகளை ஆய்வுசெய்தல், பெண்களுக்கு ஆதரவான சட்டங்களுக்கு அவசியமான அம்சங்கள், சட்டவாக்கத்தின் ஊடாக பாலின சமத்துவத்தை அடைவதற்கான வழிகள் போன்ற விடயங்கள் குறித்து சிறந்த புரிதல்கள் இச்செயலமர்வில் ஏற்படுத்தப்பட்டன.

இச்செயலமர்வில் பொதுநலவாய பாராளுமன்றத்தின் பெண் பாராளுமன்ற ஒன்றியத்தின் தலைவர் சைனாப் ஜிம்பா, மாலைதீவு பாராளுமன்ற உறுப்பினர் அம்சா ரசீட் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர்.

## தொழிலுக்காக வெளிநாடு செல்லும் ஆண்கள் 60 சதவீதமாக அதிகரிப்பு

2024ஆம் ஆண்டில் வெளிநாட்டு வேலைகளுக்கு செல்லும் இலங்கையர்களின் எண்ணிக்கை 03 இலட்சத்தை தாண்டியுள்ளது.

இந்த எண்ணிக்கை டிசம்பர் 13ஆம் திகதி நிலவரப்படி 300,162 ஆக உயர்ந் துள்ளது என இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது.

கடந்த 10 ஆண்டுகளில் 03 இலட்சம் தொழிலாளர்கள் வெளிநாடுகளுக்குச் சென்ற இரண்டாவது முறையாக இது அமைந்துள்ளது. இதற்கு முன், 2022ஆம் ஆண்டில் 310,948 தொழிலாளர்கள் வெளி நாட்டு வேலைகளுக்கு சென்றுள்ளனர்.

# பகிரங்கப்படுத்தப்பட்டது தேர்தல் செலவு அறிக்கைகள்


Election Commission
MEDIA RELEASE
2024.12.13
பாராளுமன்றத் தேர்தல் - 2024 நவம்பர் 14

பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிட்ட அனைத்து வேட்பாளர்கள், கட்சியின் செயலாளர்கள், சுயேச்சைக் குழுத் தலைவர்கள் மற்றும் தேசியப் பட்டியல் வேட்பாளர்களின் செலவு அறிக்கைகள் பகிரங்கப்படுத்தப்படும் என தேர்தல் ஆணைக்குழு நேற்று முன்தினம் (16) தெரிவித்துள்ளது.

இது தொடர்பான அறிக்கைகள் அனைத்து மாவட்டச் செயலகங்களிலும் இராஜகிரியவில் உள்ள தேர்தல் ஆணைக்குழு அலுவலகத்திலும் பகிரங்கப்படுத்தப்படும் என தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல். ரத்நாயக்க தெரிவித்தார்.

இந்த அறிவிப்புக்கமைய நேற்று (17) முதல் குறித்த அறிக்கைகள் பகிரங்கப்படுத்தப்பட்டுள்ளன.

செலவு அறிக்கையை சமர்ப்பிப்பதற்காக வழங்கப்பட்ட காலப்பகுதியில், மாவட்ட மட்டத்தில் அரசியல் கட்சிகளை பிரதிநிதித்துவப் படுத்தும் 8,361 வேட்பாளர்களில் 7,412 பேர் செலவு அறிக்கைகளை சமர்ப்பித்துள்ளனர்.

சுயேச்சைக் குழுக்களில் போட்டியிட்ட 690 வேட்பாளர்களில் 493 பேர் வருமானம் மற்றும் செலவு அறிக்கையை சமர்ப்பித்துள்ளதாகவும் 527 தேசியப்பட்டியல் வேட்பாளர்களில் 434 பேர் தங்களது அறிக்கைகளை சமர்ப்பித்துள்ளதாகவும் தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

மேலும், வருமானம் மற்றும் செலவு அறிக்கையை சமர்ப்பிக்காத வேட்பாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல். ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

# குமார ஜயக்கொடி பொறியியல் பட்டதாரி பரீட்சார்த்தி என மஹிந்த தேசப்பிரிய தெரிவித்ததாக பரவிய செய்தி

## போலியானதென உறுதிப்படுத்தப்பட்டது

வலுசக்தி அமைச்சர் புண்ய ஸ்ரீ குமார ஜயக்கொடி பொறியியல் பட்டதாரி பரீட்சார்த்தி என தேர்தல் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்ததாக சமூக வலைத்தளங்களில் வெளியாகியுள்ள பதிவுகள் பொய்யானவை என உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

வலுசக்தி அமைச்சர் புண்ய ஸ்ரீ குமார ஜயக்கொடி பொறியியல் பட்டதாரி பரீட்சார்த்தி என தேர்தல் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் மஹிந்த தேசப்பிரிய கூறியதாக சமூக வலைத்தளங்களில் பல பதிவுகள் பகிரப்படுகின்றன.

இது தொடர்பான பதிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ள செய்தியில்,

‘‘வலுசக்தி அமைச்சர் குமார ஜயக்கொடி தன்னை பொறியியலாளர் என்று பொய்யாக காட்டிக் கொள்வதாக சமூக வலைத்தளங்களில் கூறப்படும் குற்றச்சாட்டுகளில் உண்மையில்லை எனவும் குமார ஜயக்கொடி பாராளுமன்றத்தில் வழங்கிய தகவல்களில் தாம் பொறியியல் பட்டதாரி பரீட்சார்த்தி” என குறிப்பிட்டுள்ளதாகவும் தேர்தல் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் மஹிந்த தேசப்பிரிய வானொலி அலைவரிசையுடனான கலந்துரையாடலொன்றில் தெரிவித்ததாகவும் கூறப்பட்டுள்ளது.

அத்துடன் “சமூக வலைத்தளங்களில் வெளியாகியுள்ள செய்தியின் பிரகாரம் அமைச்சர் பொய்யான அறிக்கையை வெளியிட்டதாக குற்றம் சுமத்துவது முறையானதல்ல” என தேர்தல் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் தெரிவித்துள்ளார் எனக் கூறப்பட்டுள்ளது. அந்த செய்திகளுக்கான இணைப்புகள் கீழே உள்ளன.



https://janahanda.site/#/news/9

https://sinhala-themorningtelegraph.com/?p=4617 https://newsweb.lk/archives/34102 இந்த விடயம் தொடர்பில் உண்மை சரிபார்ப்பு ஆராய்ந்து பார்த்தபோது, மஹிந்த தேசப்பிரிய பங்குபற்றிய அண்மைய வானொலி கலந்துரையாடல்கள் தொடர்பில் கண்டறிய முடிந்தது.

இவ்வாண்டு டிசம்பர் மாதம் 06ஆம் திகதி, Neth வானொலி சேவையில் ஒலிபரப்பான Balumgala நிகழ்ச்சிக்கான தொலைபேசி நேர்காணலில், அவர் ஒரு குறிப்பிட்ட அமைச்சரைப் பற்றி கருத்துத் தெரிவித்திருப்பதை அவதானிக்க முடிந்தது.

https://youtu.be/Sj-8cwmNr-o?t=394

அதன்போது, அமைச்சர் ஒருவர் தன்னை பொறியியலாளர் என்று கூறினாலும் அவர் பொறியியலாளர் அல்ல. ஆனால், பொறியியல் பட்டதாரி பரீட்சார்த்தியாக பாராளுமன்றத்தில் தனது தகவல்களை அவர் வழங்கியுள்ளதாக அந்த நிகழ்ச்சியில் மஹிந்த தேசப்பிரிய சுட்டிக்காட்டியுள்ளார். ஆனால் அந்த விமர்சனத்தில் எந்த இடத்திலும் வலுசக்தி அமைச்சர் குமார ஜெயக்கொடியின் பெயரை அவர் குறிப்பிடவில்லை.

ஆகவே மஹிந்த தேசப்பிரிய கூறும் காரணி குமார் ஜெயக்கொடி பற்றியதா என்பதை அறிய, பாராளுமன்ற இணையத்தளத்தில் எம்.பிக்கள் பட்டியலில் குமார் ஜெயக்கொடியின் தகவல்களை சரிபார்த்தபோது, அவரது கல்வித் தகுதி குறித்து எதுவும் குறிப்பிடப்படவில்லை. அவரது தொழில் பொறியியலாளர் என்று பட்டியலிடப்பட்டது.

அதனையடுத்து, தேர்தல் ஆணைக் குழுவின் முன்னாள் தலைவர் மஹிந்த தேசப்பிரியவிடம் இது குறித்து வினவியபோது, அவர் மேற்கண்ட பதிவுகளில் கூறியது போன்று வலுசக்தி அமைச்சர் குமார ஜயக்கொடி தொடர்பில் எந்தக் கருத்தையும் வெளியிடவில்லை எனத் தெரிவித்தார்.

இதன்படி, வலுசக்தி அமைச்சர் புண்ய ஸ்ரீ குமார ஜயக்கொடி பொறியியல் பட்டதாரி பரீட்சார்த்தி என தேர்தல் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்ததாக சமூக வலைத்தளங்களில் வெளியாகியுள்ள பதிவுகள் பொய்யானவை என FactSeeker உறுதிப்படுத்தியுள்ளது.

# அல்-அஸ்ஹர் மத்திய கல்லூரியில் ஊடக செயலமர்வு



**(எம்.எஸ்.எம்.ஸாகிர்)**

கண்டி, தெநுவர வலயத்துக்குட்பட்ட தெஹியங்க அல்-அஸ்ஹர் மத்திய கல்லூரியின் (தேசிய பாடசாலை) ஊடகப்பிரிவு மாணவர்கள் மற்றும் உயர்தர மாணவர்களுக்கான இலவச ஊடக செயலமர்வு அண்மையில் கல்லூரி பிரதான மண்டபத்தில் நடைபெற்றது.

ஆர்.ஜே.மீடியா வலையமைப்பின் கண்டி மாவட்ட ஒருங்கிணைப்பாளர் பாத்திமா சப்னாவின் ஏற்பாட்டில், கல்லூரியின் அதிபர் எம். மன்சூர் மபாஹிர் அனுமதியுடன் பிரதி அதிபர் உஸ்மான்லெப்பை மொஹமட் ரிஸான் கண்காணிப்பின் கீழ் இடம்பெற்ற இந்நிகழ்வில், ஊடகத்துறையின் அவசியம் மற்றும் எமது இலக்கை வெற்றிகரமாக மாற்றுவது எப்படி போன்ற தலைப்புகளை உள்ளடக்கி செயல்முறையுடன் கூடிய விரிவுரைகள் மாணவர்களுக்கு வழங்கப்பட்டன.

இவ் அமர்வின் விரிவுரைகளை ஆர்.ஜே.மீடியா வலையமைப்பின் பணிப்பாளரும் அறிவிப்பாளருமான ஏ.எம்.இன்சாப் வழங்கியமை குறிப்பிடத்தக்கது.

இதன்போது கல்லூரி மாணவர்கள், ஆசிரியர்கள் எனப் பலர் கலந்து சிறப்பித்தனர்.


இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு

2025 உத்தேசிக்கப்பட்டுள்ள மின்சாரக் கட்டண திருத்தம் பொது ஆலோசனை கேட்டல்

2002ஆம் ஆண்டின் 35ஆம் இலக்க இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு சட்டத்தின் 17வது பிரிவின் கீழ் ஆணைக்குழுவிற்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் அடிப்படையில் 2009 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க இலங்கை மின்சாரச் சட்டத்தின் 30 ஆவது பிரிவின் கீழ், உரிமதாரரால் (இலங்கை மின்சாரசபை) 2025 ஆம் ஆண்டிற்கான உத்தேசிக்கப்பட்ட மின்சாரக் கட்டணத்தைப் பற்றிய பொது ஆலோசனை கேட்டலை நடத்துவதற்கான முடிவை இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு இதன் மூலம் அறிவிக்கிறது.

இலங்கை மின்சார சபை, இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்ட மின்சாரக் கட்டணத் திருத்த முன்மொழிவு மற்றும், அது தொடர்பான ஆலோசனை பத்திர அறிக்கைகளை www.pucsl.gov.lk என்ற இணையத்தளத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.

முன்மொழியப்பட்டுள்ள மின்சார கட்டண திருத்தம் தொடர்பாக பொதுமக்களின் எழுத்துப்பூர்வ கருத்துகள் மற்றும் ஆலோசனைகள் **2024 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 17 ஆம் திகதி முதல் 2025 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 08 ஆம் திகதி** வரை ஏற்றுக் கொள்ளப்படும். இந்தக் கட்டணத் திருத்தம் தொடர்பான வாய்மூலக் கருத்துக்களை தெரிவிக்கும் அமர்வு **2024 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 27 ஆம் திகதி முதல் 2025 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 10 ஆம் திகதி** முதல் 09 மாகாணங்களிலும் நடைபெறும்.

பொதுமக்களின் ஆலோசனைக் கேட்டல் முடிந்த பின்னர் ஆணைக்குழு இறுதி முடிவை **2025 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 17** ஆம் திகதியன்று அறிவிக்கும்.

முன்மொழியப்பட்ட கட்டணத் திருத்தம் தொடர்பான எழுத்துப்பூர்வ கருத்துகள் மற்றும் ஆலோசனைகளை பின்வரும் முகவரிக்கு அல்லது கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய முறைகள் மூலம் சமர்ப்பிக்கலாம்.

**தபால் - “மின்சார கட்டணம் குறித்த பொது ஆலோசனை”**
இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு,
6 வது மாடி, இலங்கை வங்கி வர்த்தகக் கோபுரம்,
இல.28, புனித மைக்கல் வீதி,
கொழும்பு 03.

**பெக்ஸ்:** 011 239 2641
**வட்ஸ்அப்:** 076 427 1030
**மின்னஞ்சல்:** info@pucsl.gov.lk
**இணையதளம்:** www.pucsl.gov.lk
முகநூல்: www.facebook.com/pucsl

வாய்மொழிமூல அமர்வுகளில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்க பின்வரும் தொலைபேசி இலக்கங்களுக்கு அழைக்கவும்.

| பொது ஆலோசனை | வாய்மொழிமூல கருத்து பதிவுக்கு |
| --- | --- |
| மத்திய, வடக்கு, கிழக்கு மாகாண பொது ஆலோசனை | 077 039 9119 |
| வடமேற்கு, வடமத்திய, மேல் மாகாண பொது ஆலோசனை | 076 427 1030 |
| தெற்கு, சப்ரகமுவ, ஊவா மாகாண பொது ஆலோசனை | 076 322 4610 |

தலைவர்
இலங்கைப் பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு
18.12.2024


# மோட்டார் சைக்கிளில் வந்த பெண்ணை மோதி விட்டு தங்கச் சங்கிலி அபகரிப்பு

**(அநுராதபுரம் நிருபர்)**

பெண் ஒருவருடைய இரண்டு பவுண் தங்கச் சங்கிலியை கொள்ளையடித்த சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபரை கைதுசெய்வதற்காக அநுராதபுரம், எலயாபத்துவ பொலிஸார் தீவிர விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

எலயாபத்துவ பொலிஸ் பிரிவின் கறுக்கங்குளம், ரளபனாவ பகுதியில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

எலயாபத்துவ, கல்கடவள பகுதியை வசிப்பிடமாகக் கொண்ட பெண் ஒருவர் பொலிஸ் நிலையத்தில் செய்த முறைப்பாட்டின் பேரில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கறுக்கங்குளம் வித்தியாலயத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றுக்கு சம்பவதினத்தன்று மாலை சென்று தனது மகளுடன் மோட்டார் சைக்கிளில் வீடு நோக்கி சென்றுகொண்டிருக்கும் போது பின்தொடர்ந்து மோட்டார் சைக்கிளில் சென்ற நபர், மோட்டார் சைக்கிளை மோதியுள்ளார். இதனால் குறித்த பெண் கீழே விழுந்த நிலையில் அவரின் கழுத்திலிருந்த தங்கச் சங்கிலியை அபகரித்துச் தப்பிச் சென்றுள்ளதாக தெரியவந்துள்ளது.சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

# இறக்குவானை ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்தில் இன்று ஐயப்ப சுவாமிக்கு 18ஆம் படி பூஜை

**(மு.லலிதா)**

இறக்குவானை ஸ்ரீ ஹரிஹர சுதன் ஐயப்ப சேவா சங்கத்தின் ஏற்பாட்டில் ஐயப்ப சுவாமிக்கு 18ஆம் படி பூஜையும் ஆசிர்வாத பூஜையும் இறக்குவானை ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்தில் இன்று (18) இடம்பெறவுள்ளது.

இந்தியா, கேரளா, சபரிமலை மாளிகைப்புரம் சந்நிதியின் மேல்சாந்தி குரு முதல்வர் பிரம்மஸ்ரீ எம்.என்.ரெஜிகுமார் நம்பூதரி தலைமையில் பூஜை வழிபாடுகள் இடம்பெறவுள்ளன.

இன்று காலை 08 மணிக்கு எம்.என். ரெஜிகுமார் நம்பூதரி மற்றும் குருசுவாமிமார்களை வரவேற்கும் நிகழ்வு இறக்குவானை நகரில் ஆரம்பமாகவுள்ளது.

அதனைத் தொடர்ந்து காலை 09 மணிக்கு இறக்குவானை ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தானத்தில் ஐயப்பனுக்கு 18 படிபூஜையும் ஆசிர்வாத பூஜையும் இடம்பெறவுள்ளது.

மேலும், முற்பகல் 11 மணிக்கு சௌமியமூர்த்தி கலாசார மண்டபத்தில் சுவாமிமார்களுக்கான கௌரவிப்பு நிகழ்வு இடம்பெற்று அடியார்களுக்கு அன்னதானம் வழங்கப்படும்.

# கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் கைலாசபதி நினைவுப்பேருரை

பேராசிரியர் கே.கைலாசபதி நினைவுப் பேருரை நிகழ்வு ஒன்றை கொழும்பு தமிழ்ச் சங்கம் இன்று புதன்கிழமை மாலை 5.30 மணிக்கு விநோதன் மண்டபத்தில் ஏற்பாடு செய்துள்ளது.

சங்கத்தின் இலக்கியக்குழுச் செயலாளர் தெ.மதுசூதனன் தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில் கொழும்பு பல்கலைக்கழகத்தின் முன்னாள் சிரேஷ்ட பேராசிரியர் அன்ரனி எஸ்.நோர்பேட் “அதிகரித்துவரும் வானிலைக் குழப்பங்களும் COP 29 மாநாட்டின் முக்கியத் துவமும்” தொனிப்பொருளில் உரையாற்றுவார்.

# புதிய பாராளுமன்ற உறுப்பினர்கள் நால்வர் பதவிப்பிரமாணம்






பத்தாவது பாராளுமன்றத்தில் நான்கு புதிய பாராளுமன்ற உறுப்பினர்கள் பிரதி சபாநாயகர் (வைத்திய கலாநிதி) ரிஸ்வி சாலி முன்னிலையில் நேற்று (17) பதவிப்பிரமாணம் செய்துகொண்டனர்.

ஐக்கிய மக்கள் சக்தியைப் பிரதிநிதித்துவப்படுத்தி தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர்களாக அர்ஜுன சுஜீவ சேனசிங்க, முஹம்மது இஸ்மாயில் முத்து முஹம்மது, மனோ கணேசன் ஆகியோரும் புதிய ஜனநாயக முன்னணியின் தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்பினராக பைஸர் முஸ்தபாவும் பதவிப்பிரமாணம் செய்துகொண்டனர்.

பிரதி சபாநாயகர் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டதன் பின்னர் பாராளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர முன்னிலையில் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான ஏட்டிலும் அவர்கள் கையொப்பமிட்டனர்.

கடந்த நவம்பர் 21ஆம் திகதி பத்தாவது பாராளுமன்றத்தின் முதலாவது அமர்வு இடம்பெற்றதுடன், அன்றைய தினம் புதிய உறுப்பினர்கள் பதவிப்பிரமாணம் செய்தனர். அதுவரை ஐக்கிய மக்கள் சக்திக்குக் கிடைத்த நான்கு தேசியப்பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் பதவிக்கான பெயர் வர்த்தமானியில் வெளியிடப்பட்டிருக்கவில்லை. கடந்த 12ஆம் திகதி இந்தப் புதிய பாராளுமன்ற உறுப்பினர்களின் பெயர்கள் அடங்கிய வர்த்தமானியை தேர்தல் ஆணைக்குழு வெளியிட்டிருந்தது. இதற்கமைய நான்கு தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர்களில் மூவர் நேற்று (17) பதவிச் பிரமாணம் செய்தனர்.

அதேநேரம், புதிய ஜனநாயக முன்னணிக்குக் கிடைத்த தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் பதவிக்கு ஒருவருடைய பெயர் அறிவிக்கப்படாதிருந்ததுடன், குறித்த பதவிக்கான பெயர் கடந்த 11ஆம் திகதி வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்டது. இதற்கமைய அக்கட்சியின் தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்பினராக பைஸர் முஸ்தாபா பதவிப் பிரமாணம் செய்துகொண்டார்.

அர்ஜுன சுஜீவ சேனசிங்க, மனோ கணேசன், பைஸர் முஸ்தபா ஆகியோர் இலங்கை பாராளுமன்றத்தின் உறுப்பினர்களாகப் முன்னர் பணியாற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது

## சீன பெண்கள் சம்மேளனத்தின் துணைத் தலைவி பிரதமர் ஹரிணி அமரசூரியவை சந்தித்தார்



அனைத்து சீன பெண்கள் சம்மேளனத்தின் (ACWF) துணைத் தலைவியான திருமதி சாங் டோங்மேய், பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரியவை பிரதமர் அலுவலகத்தில் சந்தித்து பெண்கள் வலுவூட்டல் மற்றும் அபிவிருத்தி தொடர்பான பரஸ்பர முயற்சிகள் குறித்து கலந்துரையாடினார்.

திருமதி சாங் டோங்மேய் மற்றும் அவரது தூதுக்குழுவினரை வரவேற்ற பிரதமர் கலாநிதி அமரசூரிய, இலங்கைக்கும் சீனாவுக்குமிடையிலான நீடித்த நட்புறவைப் பாராட்டினர். இந்தக் கலந்துரையாடல் பெண்களின் சுகாதாரம், கல்வி மற்றும் பொருளாதாரப் பங்கேற்பு ஆகியவற்றில் பகிரப்பட்ட சவால்கள் மற்றும் வாய்ப்புகளை மையமாகக் கொண்டிருந்தது. பெண்களின் தொழிற்படை ஈடுபாடு மற்றும் கீழ் மட்டப் பிரதிநிதித்துவத்தை அதிகரிப்பது உட்பட சீனாவின் முன்னேற்றங்கள் குறித்து திருமதி சாங் டோங்மேய் விளக்கினார்.

இந்நிகழ்வில் இலங்கைக்கான சீனத் தூதுவர் Qi Zhenhong , இலங்கை சீனத் தூதரகத்தின் உயரதிகாரிகள்,இலங்கைக் குழுவில் பிரதமரின் செயலாளர் பிரதீப் சபுதந்திரி, பிரதமரின் மேலதிக செயலாளர் திருமதி சாகரிகா போகஹவத்த, வெளியுறவு அமைச்சின் கிழக்கு ஆசியாவுக்கான பணிப்பாளர் நாயகம் திருமதி ருவந்தி தெல்பிட்டிய மற்றும் கிழக்கு ஆசியப் பிரிவின் பணிப்பாளர் திருமதி உதானி குணவர்தன ஆகியோர் பங்குபற்றினர்.



**தமிழ் மக்களைப் பாதிக்கும் பல பிரச்சினைகள் தொடர்பாக ஐ. நா. வதிவிடப் பிரதிநிதியை நேற்று முன்தினம் தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியனும் ஜனாதிபதி சட்டத்தரணியும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான ம.சுமந்திரனும் சந்தித்து கலந்துரையாடினர்.**

## அநுரவுக்கும் இந்திய முன்னணி வர்த்தக பிரதிநிதிகளுக்குமிடையில் கலந்துரையாடல்

### இலங்கையில் முதலீடுகள் தொடர்பில் கவனஞ்செலுத்த விருப்பம் தெரிவிப்பு









மூன்று நாள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு இந்தியா சென்றுள்ள ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க, நேற்று முன்தினம் (16) பிற்பகல் புதுடில்லியில் இந்திய முன்னணி வர்த்தகப் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடலில் ஈடுபட்டார்.

இந்திய கைத்தொழில் சம்மேளனத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்தக் கலந்துரையாடலில் இந்தியாவின் முன்னணி தொழில் முனைவோர் கலந்துகொண்டனர்.

இலங்கையில் முதலீடு செய்வதற்கான சாதகமான சூழல் குறித்து விளக்கமளித்த ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க, இலங்கையில் முதலீடு செய்யுமாறு இந்திய தொழில் முனைவோரிடம் கோரிக்கை விடுத்தார்.

இரு நாடுகளுக்குமிடையிலான முதலீடு மற்றும் வர்த்தக உறவுகளை விரிவுபடுத்தும் நோக்கில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில் டிஜிட்டல் பொருளாதாரம், சுற்றுலா, புதுப்பிக்கத்தக்க சக்தி மற்றும் தகவல் தொழில்நுட்பம் ஆகிய துறைகள் குறித்து விசேட கவனம் செலுத்தப்பட்டது.

இதன்படி, இரு நாடுகளுக்குமிடையிலான வர்த்தக நடவடிக்கைகளின் அடிப்படையில் இலங்கையில் முதலீட்டு வாய்ப்புகளை விஸ்தரிப்பது குறித்து கலந்துரையாடப்பட்டது.

இலங்கையில் முதலீட்டு வாய்ப்புகள் குறித்து கவனஞ்செலுத்த இந்திய முன்னணி வர்த்தகப் பிரதிநிதிகள் விருப்பம் தெரிவித்ததுடன், அதற்குத் தேவையான முதலீட்டு வசதிகளை வழங்க இலங்கை அரசாங்கம் உடன்பாடு தெரிவித்தது.

தொழில் அமைச்சரும் பொருளாதார அபிவிருத்தி பிரதியமைச்சருமான பேராசிரியர் அனில் ஜயந்த பெர்னாண்டோவும் இந்தச் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தார்.

## சட்டவிரோத மின்கம்பியில் சிக்கி கெப்பித்திகொல்லாவையில் ஒருவர் பலி

**(அநுராதபுரம் நிருபர்)**

காட்டு மிருகங்களைக் கொல்லும் நோக்கில் சட்டவிரோதமான முறையில் பொருத்தப் பட்டிருந்த மின்கம்பியில் சிக்கி ஒருவர் பரிதாபகரமான முறையில் உயிரிழந்துள்ளதாக கெப்பித்திகொல்லாவ பொலிஸார் தெரிவித்தனர்.

கெப்பித்திகொல்லாவ பொலிஸ் பிரிவின் ஹெரத்ஹல்மில்லாவ பகுதியில் நேற்று முன்தினம் (16) மாலை இச்சம்பவம் இடம்பெற்றுள்ளதாக விசாரணைகளை மேற்கொண்டுவரும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

சம்பவத்தில் உயிரிழந்தவர் 72 வயதுடைய ஹெரத்ஹல்மில்லாவ,கெப்பித்திகொல்லாவ பகுதியை வசிப்பிடமாகக் கொண்டவர் என்பது ஆரம்பகட்ட பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சடலம் கெப்பித்திகொல்லாவ வைத்திய சாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கெப்பித்திகொல்லாவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

### நாணய மாற்று விதம் (17.12.2024)

| நாணயம் | கொள்வனவு விதம் | விற்பனை விதம் |
|---|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் | 180.4566 | 189.8918 |
| கனேடியன் டொலர் | 199.7633 | 208.4495 |
| சீன யுவான் (ரென்மின்பி) | 38.5128 | 41.0781 |
| யூரோ | 299.5315 | 312.1716 |
| ஜப்பான் யென் | 1.8523 | 1.9275 |
| சிங்கப்பூர் டொலர் | 210.4532 | 220.3145 |
| ஸ்ரேலிங் பவுன் | 361.8030 | 376.0197 |
| சுவிஸ் பிராங் | 317.7565 | 332.9515 |
| ஐ.அ. டொலர் | 286.4435 | 295.0915 |

| நாடு | நாணயம் | விற்பனை விதம் |
|---|---|---|
| பஹ்ரைன் | பஹ்ரைன் தினார் | 770.8391 |
| குவைட் | குவைட் தினார் | 944.8559 |
| ஓமான் | ஓமான் றியால் | 755.2221 |
| கட்டார் | கட்டார் றியால் | 79.7587 |
| சவூதி அரேபியா | சவூதி அரேபிய றியால் | 77.3865 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம் | 79.1616 |

## மாணவர்களுக்கு இலவச கற்றல் உபகரணங்கள் வழங்கிவைப்பு





சுகாதாரம் மற்றும் வெகுஜன ஊடகத்துறை அமைச்சரும் அமைச்சரவை ஊடகப் பேச்சாளருமான வைத்தியர் நளிந்த ஜயதிஸ்ஸ தலைமையில் பாடசாலை மாணவர்களுக்கு இலவச கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு பதுரெலிய, மொஹமதி தோட்ட, மரதகஹாதெனிய பகுதியில் அண்மையில் நடைபெற்றது.

களுத்துறை மாவட்டம், பதுரெலிய, மொஹமதி தோட்ட, மாரகஹாதெனிய பகுதியில் அமைந்துள்ள 'செம்பனை எண்ணெய்' உற்பத்தி நிறுவனமான ஏ.ஈ.என். நிறுவனத்தின் ஏற்பாட்டில் பாலிந்தநுவர, மத்துகம, அகலவத்த பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட விவேகானந்தா தமிழ் வித்தியாலயம், பெலேந்த தமிழ் வித்தியாலயம், சரஸ்வதி வித்தியாலயம் உள்ளிட்ட 17 தமிழ், முஸ்லிம் மற்றும் சிங்களப் பாடசாலைகளைச் சேர்ந்த 718 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டன.

இதன்போது அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களை வழங்கி வைத்தார்.

ஏ.ஈ.என். நிறுவனம் கடந்த 14 வருடங்களாக தொடர்ந்து மேற்கொண்டுவரும் இந்த சமூக நற்பணித் திட்டத்தின் கீழ் இவ்வருடம் சுமார் 30 இலட்சம் ரூபா பெறுமதியான கற்றல் உபகரணங்களை மேற்படி பிரதேசங்களைச் சேர்ந்த மேலும் 1,500 பாடசாலை மாணவ மாணவிகளுக்கு வழங்க ஏற்பாடு செய்துள்ளது. இதனைத் தவிர இந்த வருடம் 150 இலட்சம் ரூபா செலவில் 8 தமிழ், சிங்கள பாடசாலைகளுக்கும் ஒரு முன்பள்ளிக்கும் சத்துணவு வழங்கும் திட்டத்தையும் முன்னெடுத்து வந்துள்ளது.

டெல்கித் தோட்ட அம்மன் ஆலய பிரதான குருக்கள் குககிரியா சாஹரம் சர்வாலய கிரியாமணி நவனீதன் மற்றும் பௌத்த மதகுருமார்களின் ஆசீர்வாதத்துடன் இடம்பெற்ற இவ்வைபவத்தில் தேசிய மக்கள் சக்தி களுத்துறை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் தனுஷ்க ரங்கநாத், பாலிந்தநுவர பிரதேச செயலாளர் உள்ளிட்ட பல சிரேஷ்ட அரச அதிகாரிகளுடன் பெற்றோர், ஆசிரியர்கள், அகலவத்த, எல்பிட்டிய மற்றும் நமுனுகுல பெருந்தோட்ட (ஏ.ஈ.என்.) நிறுவனங் களைச் சேர்ந்த பணிப்பாளர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

# கசிப்பு, போதைப்பொருட்கள் விற்பனையை தடுத்து நிறுத்தக்கோரி கவனயீர்ப்புப் பேரணி முன்னெடுப்பு

## பரித்திச்சேனை மங்கையர் கொத்தணி அமைப்பு ஏற்பாடு







வீரமுனை செய்தியாளர்

மட்டக்களப்பு, மண்முனை மேற்கு பிரதேச செயலகத்துக்குட்பட்ட பகுதியில் முன்னெடுக்கப்படும் சட்டவிரோத கசிப்பு விற்பனை மற்றும் போதைப்பொருள் விற்பனையை தடுக்கக்கோரி பரித்திச்சேனையில் கவனயீர்ப்புப் போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

பரித்திச்சேனை மங்கையர் கொத்தணி அமைப்பின் ஏற்பாட்டில் பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தினரும் பொதுமக்களும் இணைந்து இந்த கவனயீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்தனர். பரித்திச்சேனையிலிருந்து ஆரம்பமான பேரணியானது தாண்டியடி விசேட அதிரடிப்படை முகாம் வரை சென்றது. அங்குள்ள விசேட அதிரடிப்படை முகாம் பொறுப்பதிகாரியிடம் பிரதேசத்தில் காணப்படும் சட்டவிரோத கசிப்பு விற்பனை மற்றும் போதைப்பொருள் விற்பனைகளைத் தடுக்கக் கோரும் மகஜரொன்றும் பொறுப்பதிகாரியிடம் கையளிக்கப்பட்டது.அதனைத் தொடர்ந்து ஊர்வலமானது கொக்கட்டிச்சோலை - வவுணதீவு பிரதான வீதியூடாகச் சென்று வவுணதீவு பொலிஸ் நிலையத்துக்கு முன்பாக கவனயீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

‘‘இலஞ்சம் வாங்காதே, போதைப்பொருள் வியாபாரிகளை பாதுகாக்காதே, கசிப்பு பாவனையை தடுத்து நிறுத்து, போதைப்பொருள் விற்பனையை தடுத்து நிறுத்து’’ போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட சுலோக அட்டைகளை ஏந்தியவாறு போராட்டக்காரர்கள் கோஷங்களை எழுப்பினர்.

இதன்போது வவுணதீவு பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியையும் சந்தித்த போராட்டக்காரர்கள், தமது கோரிக்கைகள் அடங்கிய மகஜரையும் கையளித்தனர். குறித்த பகுதியில் பொலிஸார் போதைப்பொருள் பாவனையைத் தடுக்க நடவடிக்கைகளை முன்னெடுத்துவருவதாகவும் அதற்காக பொதுமக்கள் முழுமையான ஒத்துழைப்பை வழங்கவேண்டுமெனவும் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.


அதனைத் தொடர்ந்து ஆர்ப்பாட்டப் பேரணியானது மண்முனை மேற்கு பிரதேச செயலகத்துக்கு முன்பாக சென்று அங்கும் கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. இதன்போது போராட்டம் நடைபெறும் இடத்துக்கு வந்த மண்முனை மேற்கு பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலாளர் யோகராஜாவுடன் போராட்டத்தில் கலந்துகொண்டவர்கள் கலந்துரையாடி கோரிக்கைகளும் முன்வைக்கப் பட்டன.

இதற்கான காத்திரமான நடவடிக்கைகளை பொதுமக்களுடன் இணைந்து முன்னெடுக்கத் தயாராகவுள்ளதாக உதவிப் பிரதேச செயலாளர் இதன்போது உறுதியளித்தார்.

மேலும், இந்தப் போராட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியனின் பிரதிநிதிகளாக இணைப்பாளர் டினேஸ், மட்டக்களப்பு மாநகரசபை முன்னாள் உறுப்பினர் கௌரி ஆகியோர் கலந்துகொண்டு போராட்டத்துக்கு ஆதரவு வழங்கினார்கள். இதன்போது பாராளுமன்ற உறுப்பினருக்கான மகஜர் பரித்திச்சேனை மங்கையர் கொத்தணி அமைப்பினால் இணைப்பாளர் மற்றும் முன்னாள் மாநகரசபை உறுப்பினரிடம் கையளிக்கப்பட்டது.

# மட்டக்களப்பில் சர்வதேச மனித உரிமைகள் தின நிகழ்வு





மட்டக்களப்பு

மட்டக்களப்பில் சர்வதேச மனித உரிமைகள் தின நிகழ்வு மண்முனை வடக்கு பிரதேச செயலக டேபா மண்டபத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை (17) இடம்பெற்றது.

மனித உரிமைகள் பிராந்திய காரியாலய இணைப்பாளர் ஏ.எல்.இஸ்ஸதீன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பிரதம அதிதியாக மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஜஸ்டினா முரளிதரன் கலந்து கொண்டார்.

சர்வதேச மனித உரிமை தினம் டிசம்பர் 10ஆம் திகதி உலகளாவிய ரீதியில் நினைவு கூரப்பட்டு வருகின்றமையை முன்னிட்டு ‘‘எங்களுடைய உரிமைகள் எதிர்காலத்துக்கான தற்போதைய நடவடிக்கையை எடுப்போம்’’ எனும் தொனிப்பொருளில் இம்முறை இடம்பெற்றது.

இதன்போது விசேட தேவையுடையவர்களின் தொழில் உரிமை பாதுகாக்கப்பட வேண்டியதன் அவசியம் தொடர்பாக கருத்துகள் முன்வைக்கப்பட்டன. இந்நிகழ்வில் பிரதேச செயலாளர்கள், உதவிப் பிரதேச செயலாளர், வைத்தியர்கள், வலயக் கல்விப் பணிப்பாளர்கள், பொலிஸார், மனித உரிமை உத்தியோகத்தர், மனித உரிமை செயற்பாட்டாளர்கள், சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

# செட்டிபாளையத்தில் அம்பியூலன்ஸ் - இபோச பஸ் மோதி விபத்து: மூவர் வைத்தியசாலையில் அனுமதி

மட்டக்களப்பு செய்தியாளர்



மட்டக்களப்பு - கல்முனை பிரதான வீதி செட்டிபாளையத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை(17) காலை பாரிய விபத்துச் சம்பவமொன்று இடம்பெற்றுள்ளது. இதில் மூவர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக களுவாஞ்சிக்குடி போக்குவரத்துப் பிரிவு பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்விபத்துச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

மட்டக்களப்பிலிருந்து களுவாஞ்சிக்குடி நோக்கிச் சென்றுகொண்டிருந்த அம்பியூலன்ஸ் அதே திசையில் எதிரே சென்றுகொண்டிருந்த இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ்ஸுடன் மோதியுள்ளது. இதன்போது தெய்வாதீனமாக இரு வாகனங்களிலும் பயணித்தவர்கள் உயிர்தப்பியுள்ளதுடன், அம்பியூலன்ஸ் சாரதி உட்பட மூவர் காயமடைந்து களுவாஞ்சிக்குடி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

குறித்த அம்பியூலன் வண்டியானது மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையிலிருந்து புறப்பட்டு களுவாஞ்சிக்குடியில் நடைபெறவுள்ள கூட்டமொன்றுக்காக சென்றவேளையிலேயே இவ்விபத்துச் சம்பவித்துள்ளதாகத் தெரியவருகின்றது. பஸ்ஸில் பயணித்த பிரயாணிகள் எவருக்கும் எதுவித பாதிப்பும் ஏற்படாத நிலையில், அம்பியூலன்ஸ் சாரதி, விசேட தாதிய பரிபாலகி மற்றும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ஒருவருமாக மூவர் இதில் காயமடைந்துள்ளனர். எனினும், அம்பியூலன்ஸின் முன்பகுதிக்கு பலத்த சேதம் ஏற்பட்டுள்ளதுடன் பஸ்ஸின் பின் பகுதிக்கும் சேதம் ஏற்பட்டுள்ளது. இவ்விடயம் அறித்த களுவாஞ்சிக்குடி போக்குவரத்துப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.



**திருகோணமலை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் சண்முகம் குகதாசன் கனேடிய நடுவண் அரசின் பழங்குடி மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கரி ஆனந்தசங்கரியை கனடாவில் சந்தித்து இலங்கைத் தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் பல்வேறுபட்ட பிரச்சினைகள் குறித்துக் கலந்துரையாடினார்.**

# ஆறுமுகத்தான் குடியிருப்பு பிரதேசத்தில் டெங்கு சிரமதானப்பணி

ஏறாவூர் செய்தியாளர்



மட்டக்களப்பு - ஏறாவூர்ப்பற்று செயலகப் பிரிவின் பல இடங்களில் டெங்கு காய்ச்சல் பரவியுள்ளதாக அறிவிக்கப்பட்டதையடுத்து சுகாதாரத் துறையினர் அதனைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர்.

இதனடிப்படையில், ஆறுமுகத் தான் குடியிருப்புப் பிரதேசத்தில் டெங்கு நுளம்புகள் பெருகும் இடங்களை இனங்கண்டு அழிக்கும் சிரமதானப்பணிகள் நேற்று(17) ஆரம்பிக்கப்பட்டன.

பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி எம்.ஹஸ்மத்தின் அறிவுறுத்தலுக்கமைவாக சிரேஷ்ட பொதுச்சுகாதாரப் பரிசோதகர் எஸ். திருநவன் தலைமையில் முன்னெடுக்கப்பட்ட மேற்படி நடவடிக்கையில் பொதுச்சுகாதாரப் பரிசோதகர் எஸ். கிருஷாந்தராஜா, கிராம சேவகர் எஸ்.லிதர்சனன் மற்றும் விளையாட்டுக் கழகங்கள், பொதுநல அமைப்புகள் என்பனவும் இணைந்துகொண்டன.

காளிகோயில் வீதி, தரவைச்சேனை வீதி, நாககன்னி வீதி மற்றும் துரைசாமி வீதி ஆகிய பாதைகளிலுள்ள சுமார் 300 வீடுகள் இதன்போது பரிசோதிக்கப்பட்டன. 25 வீட்டு வளாகங்களில் நுளம்புகள் உருவாகும் ஏதுநிலை காணப்பட்டன. இந்த இடங்கள் அழிக்கப்பட்டதுடன் வீட்டுரிமையாளர்கள் எச்சரிக்கப்பட்டனர். மேலும் சில வீட்டுரிமையாளர்களுக்கெதிராக சட்ட நடவடிக்கை எடுக்க ஆலோசிப்பதாகவும் சுகாதாரத்துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.



# கிழக்கில் தமிழர் ஒருவர் முதலமைச்சராக வர தமிழ்க் கட்சிகள் வழிவகுக்க வேண்டும்

## கிழக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினர் துரைரெத்தினம் வேண்டுகோள்

எருவில் செய்தியாளர்

''இந்தியாவுக்குச் சென்ற இலங்கை ஜனாதிபதி மாகாணசபைத் தேர்தல் நடத்தப்படுமென உறுதியளித்துள்ளார். இந்நிலையில், கிழக்கு மாகாணத்தில் தமிழர் ஒருவர் முதலமைச்சராக வருவதற்கு தமிழ்க் கட்சிகள் வழிவகுக்க வேண்டும்''-என்று கிழக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினர் இரா.துரைரெத்தினம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

கிழக்கு மாகாண சபையைப் பொறுத்தவரையில் 30.06.2006க்கு முன்னர் வடக்கு, கிழக்கு இணைந்த மாகாண சபையாகவே இருந்து வந்தது. தமிழர்கள் ஒற்றுமையாகவும் பலமாகவும் இருந்தார்கள். தமிழர்களைப் பலவீனமாக மாற்றி தமிழர்களை ஒற்றுமையாக வாழவிடக்கூடாது என திட்டம் போட்டு மாற்றியது ஜே.வி.பி. என்பதை மறந்து விடக்கூடாது.

இதேபோல, கிழக்கு மாகாணத் தமிழர்களையும் பலவீனமாக்குவதற்கான செயல்வடிவங்களை ஊழல் ஒழிப்பு எனும் போர்வையில் ஜே.வி.பி. களமாடுகின்றது. இதையும், இனிமேல் தமிழ்த்தேசியத்துக்கு வரப்போகின்ற பாரிய ஆபத்தைத் தடுப்பதற்கு தமிழ்த் தலைமைகள் விட்ட தவறுகளை திருத்திக் கொண்டு அபிவிருத்தியையும் எமது உரிமைகளையும் சிறப்பான முறையில் கொண்டுசெல்வதற்கு தமிழ்த் தலைமைகள் பொது உடன்பாட்டுக்கு வராத பட்சத்தில் தமிழ்த் தேசியத்துக்கான வளம் ஜே.வி.பியினரால் சுக்குநூறாக்கப்படும். தமிழ்த்தேசியம் இல்லாமல் போகும்.



தமிழர்கள் ஒன்றுசேர்வதற்கான சந்தர்ப்பம் இதுவாகும். இதைத் தவறவிடும் பட்சத்தில் கிழக்கு மாகாணத்தில் தமிழ் விகிதாசாரமும் இல்லாமல் ஒழிக்கப்படும். எதிர்காலத்தில் கிழக்கு மாகாணத்தில் தமிழர்கள் நல்லாட்சி முறையை கொண்டு வருவதற்கு சமூகநலனுள்ள, ஊழல்மோசடியற்ற, நல்ல மக்கள் பிரதிநிதிகளை கொண்டுவரவேண்டும்.

கிழக்கு மாகாண சபையில் 37 பிரதிநிதிகளில் தமிழர்கள் - 15, முஸ்லிம்கள் - 13, சிங்களவர்கள் - 09 பிரதிநிதிகள் என்ற விகிதாசார அடிப்படையில் வர முடியும். மொத்தமாக 37 பிரதிநிதிகள் தெரிவுசெய்யப்படுவார்கள். இதில் தமிழர்கள் ஒற்றுமையாக வரும் பட்சத்தில் 15தமிழ் பிரதிநிதிகளைக் கொண்டுவர முடியும். இதில் தமிழர்கள் ஒற்றுமையாக இருந்தால் மட்டுமே தமிழ் முதலமைச்சரைப் பெற முடியும். ஒற்றுமை இல்லாத பட்சத்தில் இதைச் சாதிக்க முடியாது.

அது மட்டுமன்றி, தமிழ்த்தேசியத்தோடு சம்பந்தப்பட்ட விடயத்தில் தமிழ்க் கட்சிகள் ஓரணியில் நிற்பதற்கு ஆக்கபூர்வமான வேலைகளை முன்னெடுக்க வேண்டும். கிழக்கு மாகாணத்திலுள்ள 05 அமைச்சர்களில் முதலமைச்சருக்கே கூடுதலான அதிகாரம் உண்டு. இதை அமுல்படுத்தினால் மட்டுமே பல சவால்களை தமிழர்களாகிய நாங்கள் முறியடிக்க முடியும் - என்றார்.

# கிண்ணியா பிரதேசத்துக்கு நிரந்தர காதி நீதவானை நியமிக்குக

## சிரேஷ்ட பிரஜைகள் சங்கம் ஜனாதிபதிக்கு மகஜர்

சீனக்குடா செய்தியாளர்

கிண்ணியா பிரதேசத்துக்கு நிரந்தர காதி நீதவான் ஒருவரை நியமிக்கக் கோரி, கிண்ணியா சிரேஷ்ட பிரஜைகள் சங்கத்தினால் திங்கட்கிழமை (16) ஜனாதிபதிக்கு மகஜர் ஒன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

சிரேஷ்ட பிரஜைகள் சங்கத் தலைவர் எம்.ரீ.சபருல்லாகானால் ஒப்பமிடப்பட்டு அனுப்பி வைக்கப்பட்டுள்ள அந்த மகஜரில்,

கடந்த 2023ஆம் ஆண்டு நவம்பர் மாதம் கிண்ணியா உட்பட நாட்டின் பல பிரதேசங்களில் உள்ள காதி நீதிமன்றங்களில் நிலவும் காதி நீதிபதிகள் வெற்றிடங்களுக்காக நீதிச்சேவை ஆணைக்குழுவால் விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்தன. வெற்றிடங்களை நிரப்புவதற்காக விண்ணப்பங்கள் கோரப்பட்டு ஒரு வருடத்தைக் கடந்துள்ளபோதிலும், நியமனங்களை வழங்குவதற்கு இதுவரை எந்த நடவடிக்கையும் முன்னெடுக்கப்படாமையினால் கிண்ணியா பகுதி மக்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

சுமார் ஒரு இலட்சத்துக்கும் அதிகமான குடிமக்கள் வாழும் கிண்ணியா காதி நீதிமன்றப் பிரிவில், ஆயிரத்துக்கும் மேற்பட்ட வழக்குகள் தேங்கிக் கிடக்கின்றன. கிண்ணியா பிரிவுக்கு பதில் காதி நீதவான் ஒருவர் நியமிக்கப்பட்டு வழக்குகள் நடைபெற்று வருகின்றபோதிலும், மக்களுக்கான சேவைகள் மாதத்தில் இரு நாட்கள் மட்டுமே நடைபெறுவதனால், வழக்குகள் தேங்கிக் கிடக்கின்றன. மேலும், அதிகப்படியான வழக்குகளைக் கொண்ட, கிண்ணியா காதி நீதிமன்றத்தின் நடவடிக்கைகள் மிக மந்தகதியிலேயே நடைபெற்று வருவதனால், தூர இடங்களில் இருந்து வருகின்றவர்கள் தொடர்ச்சியாக ஏமாற்றத்துடன் திரும்பிச் செல்லும் நிலை ஏற்பட்டு வருவதாகவும் அந்த மகஜரில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இது விடயமாக, பலமுறை கோரிக்கைகள் விடுத்தும் இதுவரை நிரந்தர காதி நீதவான் ஒருவரை நியமிப்பதற்கான எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. எனவே, மக்கள் எதிர்நோக்கும் அசௌகரியங்களைக் கருத்திற்கொண்டு, நிரந்தர காதி நீதவான் ஒருவரை நியமிக்க துரித நடவடிக்கை எடுக்குமாறு தங்களை விநயமாகக் கேட்டுக்கொள்கின்றோம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

# அரச நியமனம் கோரி வெளிநாட்டு பட்டதாரிகள் சங்கத்தினர் மகஜர்



தம்பலகாமம் செய்தியாளர்

இலங்கை வெளிநாட்டு பட்டதாரிகள் சங்கத்தினர் தமக்கான நியமனத்தை வழங்கக் கோரி சங்கத்தின் தலைவர் தலைமையில் கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜெயந்தலால் ரத்னசேகரவிடம் மகஜர் ஒன்றை திங்கட்கிழமை (16) கையளித்தனர்.

கிழக்கு மாகாணத்தில் 1026 வெளிநாட்டுப் பட்டதாரிகள் உள்ளனர். இதில் திருகோணமலையில் 505 பேரும் மட்டக்களப்பில் 174 பேரும் அம்பாறையில் 347 பேரும் இம்மாவட்டங்களில் வெளிநாட்டு பட்டதாரிகளாக உள்ளனர்.

அரச நியமனங்களுக்காக 2019 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலுக்கு முன்பு விண்ணப்பித்து நியமனம் வழங்கப்பட்டு வேலை செய்ததாகவும் இரு வாரங்களுக்குப் பின் தேர்தல் ஆணைக்குழுவினரால் இந்நியமனங்கள் இரத்துச் செய்யப்பட்டதாகவும் இச்சங்கத்தினர் தெரிவித்தனர்.

இந்நியமன விடயமாக கிழக்கு மாகாண ஆளுநருக்கு எடுத்துக்கூறப்பட்டதோடு ஆளுநர் வெளிநாட்டுப் பட்டதாரிகள் நியமனம் சம்பந்தமாக மத்திய அரசாங்கத்துக்கு அனுப்பி நடவடிக்கை எடுப்பதாகவும் கிழக்கு மாகாணத்தில் வேலைவாய்ப்பு வெற்றிடத்துக்கு விண்ணப்பம் கோருகின்றபோது வெளிநாட்டுப் பட்டதாரிகளை உள்வாங்குவதாகவும் இதன்போது அவர் குறிப்பிட்டார்.

இச்சந்திப்பில் வெளிநாட்டுப் பட்டதாரிகள் சங்கத்தின் தலைவர் எம்.எஸ்.நஸ்மிர், செயலாளர் எம்.கே.எம்.நஸ்ரி, பொருளாளர் ஏ.எம்.இஸ்பாக் மற்றும் பட்டதாரிகள் சங்கக் குழுவினர் ஆகியோர் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

# ஏறாவூரில் சொகுசு கார் விபத்து



ஏறாவூர் மேலதிக செய்தியாளர்

பண்டாரகமுவவிலிருந்து கல்முனை நோக்கிப் பயணித்த சொகுசு கார் ஒன்று கட்டுப்பாட்டை இழந்து வர்த்தக நிலையத்தை உடைத்துக்கொண்டு உட்புகுந்தமையால் விபத்து ஏற்பட்டுள்ளது.

நேற்று(17) அதிகாலை இடம்பெற்றுள்ள குறித்த சம்பவத்துக்கு சாரதிக்கு ஏற்பட்ட தூக்கக்கலக்கமே காரணமென ஏறாவூர் பொலிஸார் தெரிவித்தனர்.

உயிர்ச்சேதம் மற்றும் படுகாயம் எதுவும் இடம்பெறவில்லையெனவும் கடைக்குள் நிறுத்திவைக்கப்பட்டிருந்த வாகனமும் கடையின் முன்பகுதியும் சேதமாகியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

விபத்து பற்றிய மேலதிக விசாரணைகளை ஏறாவூர் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.





**மட்டக்களப்பு, பெரியபுல்லுமலை கிராம மக்களுக்கு அபயம் அமைப்பினால் இலவச மூக்குக்கண்ணாடி ஞாயிற்றுக்கிழமை(15) வழங்கப்பட்டது. அபயம் அமைப்பினர் செங்கலடி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம், செங்கலடி வைத்தியசாலை, மட்டக்களப்பு பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் ஆகியவற்றோடு இணைந்து மேற்படி இலவச மருத்துவப்பரிசோதனையை ஏற்பாடு செய்திருந்தது. இதன்போது பார்வைக்குறைபாடுள்ள 100பேர் இப்பரிசோதனையின்போது இனங்காணப்பட்டு இலவச மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (கொக்கட்டிச்சோலை செய்தியாளர்)**

# 'அரசாங்க பொறிமுறை மாற்றத்துக்கான சமூகவியல் நோக்கு' செயலமர்வு



செங்கலடி செய்தியாளர்

'அரசாங்க பொறிமுறை மாற்றத்துக்கான சமூகவியல் நோக்கு' எனும் தொனிப்பொருளில் மட்டக்களப்பு ஏறாவூர் மகளிர் நல ஆலோசனை மற்றும் மேம்பாட்டு மையத்தின் ஏற்பாட்டில் விசேட செயலமர்வு ஏறாவூர் அறபா வித்தியாலயத்தின் கேட்போர் கூடத்தில் திங்கட்கிழமை (16) நடைபெற்றது.

போதையால் சீரழியும் சிறார்களும் இளைஞர்களும், இளவயது திருமணமும் விவாகரத்தும், அரசாங்க நலன்புரித் திட்டத்தின் கீழ் நன்மைகள் எட்டாத உண்மையான பயனாளிகளின் அவலக்குரல், மாணவர்களின் பாடசாலை இடைவிலகலும் பரிகாரக் கற்பித்தலும் போன்ற விடயங்கள் இதன்போது தெளிவூட்டப்பட்டன.

மகளிர் நல ஆலோசனை மற்றும் மேம்பாட்டு மையத்தின் தலைவி சேகு பரீதா தலைமையில் நடைபெற்ற இச்செயலமர்வில் பிரதான வளவாளர்களாக பாதுகாப்பு அமைச்சின் ஊடகங்கள் கட்டுப்பாட்டுச் சபையின் வடக்கு, கிழக்கு இணைப்பாளர் வஸீர் எம்.ரஷாட், உளவளத்துணை ஆலோசகர், மனித உரிமை செயற்பாட்டாளர், பயிற்சி பெற்ற வளவாளர் திருமதி ரஜனி ஜெயப்பிரகாஷ் ஆகியோர் கலந்துகொண்டு விளக்கமளித்தனர்.

இச்செயலமர்வில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மட்டக்களப்பு மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.நளீம், ஏறாவூர் பொதுச் சுகாதார வைத்திய அதிகாரி சாபிரா வஸீம், ஏறாவூர் நகர் பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் ஜாஹிதா ஜலால்தீன், சமூக சேவை உத்தியோகத்தர் எஸ்.ஏ.சி.நஜிமுதீன், கிராம உத்தியோகத்தர்களான யூ.எல்.ஸாஹிர் ஹுசைன், எம்.வை.அஹமட் அஸ்லம், ஏறாவூர் பொலிஸ் நிலைய மகளிர் பிரிவு உத்தியோகத்தர் சுசீலா, திடீர் மரண விசாரணை அதிகாரி எம்.நஸீர், லெப்டினன்ட் கேர்ணல் அனஸ் அஹமட், கிழக்கு மாகாண ஆளுநரின் இணைப்பாளர் எம்.அப்துல்லாஹ் உட்படப் பலர் கலந்துகொண்டனர்.

# தீர்வுக்கான பேச்சுவார்த்தை வருகின்றபோது அரசாங்கமும் தமிழர்களும் முஸ்லிம்களும் சமமாக இருந்து பேசவேண்டும்

## கிழக்கின் கேடயம் பிரதானி சபீஸ் தெரிவிப்பு

மாளிகைக்காடு செய்தியாளர்

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவின் இந்திய விஜயத்தைத் தொடர்ந்து நாடுபூராகவும் புரையோடிப்போன பிரச்சினைகளுக்கு சமஷ்டித் தீர்வு முன்வைக்கப்படவேண்டுமென்ற கோரிக்கைகள் எழுந்த வண்ணமுள்ளன. எமது நாட்டில் தீர்க்கப்படாமல் பல பிரச்சினைகள் பல தசாப்தங்களாகத் தேங்கிக்கிடக்கின்றன. அவற்றுக்கு ஒரு தீர்வுப்பொறி முன்வைக்கப்பட வேண்டுமென்றால் அரசாங்கத்துடன் தமிழர் தரப்பும் முஸ்லிம் தரப்பும் ஒரே மேசையில் இருந்து பேசி தீர்க்க வேண்டும்'' - என கிழக்கின் கேடயம் பிரதானியும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் உயர்பீட உறுப்பினருமான எஸ்.எம்.சபீஸ் தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிட்ட அவர், ''ஒரு தீர்வுப்பொறி முன் வைக்கப்படவேண்டியது சில நாடுகளின் அழுத்தத்தினாலோ அல்லது சில குழுக்களின்



தேவைகளுக்காகவோ தீர்மானிக்க முடியாது. பேச்சுவார்த்தைகளின்போது கட்டாயம் முஸ்லிம்களின் பிரதிநிதித்துவம் அந்தப் பேச்சுவார்த்தை மேசையில் இருக்க வேண்டும். அதனூடாகத்தான் யாருக்கும் பாதகமில்லாத தீர்வைப் பெற முடியும். யாருக்காவது நியாயமான தீர்வுகள் கிடைக்காதபோது அது இன்னொரு போராட்டத்தை நோக்கி இழுத்துச்சென்றுவிடும் என்பதில் மாற்றுக் கருத்துகள் இல்லை.

பாசிச புலிகளின் கொள்கையிலிருந்து மாறாதவர்கள் வடக்கும் கிழக்கும் இணைய வேண்டும், தமக்கு மட்டும் சமஷ்டித் தீர்வு கிட்ட வேண்டும், இணைந்த வடகிழக்கில் சமஷ்டி என்றெல்லாம் பேசுகிறார்கள். இன்று உலகம் நவீனத்துவமடைந்து எவ்வளவு தூரம் வளர்ந்து விட்டது. இலங்கையைப் பொறுத்தமட்டில் ஒற்றையாட்சி போதுமானது. இங்கு காணப்படும் வருமான ஏற்றத்தாழ்வை இல்லாமலாக்கி சகலரும் ஒரே மொழியில் கல்வி கற்றால், எல்லோரையும் சமனாக நடத்தும் திருத்தம் அரசியலமைப்பில் கொண்டுவரப்பட்டால் பெரும்பாலான பிரச்சினைகள் தீர்ந்து விடும்.

மூன்று தசாப்த போராட்டத்துக்கு ஒரு தீர்வை வழங்கவேண்டுமென்றால் அங்கு ஒரே மேசையில் பேசி தீர்வுகள் எட்டப்பட வேண்டும். கடந்த காலங்களில் முஸ்லிம்கள் புறக்கணிக்கப்பட்டபோதும் கிழக்கு மாகாணப் பள்ளிவாசல்கள், பொது நிறுவனங்கள் சம்மேளனத்தினூடாக நாங்கள் அதை வலியுறுத்தினோம். பேச்சுவார்த்தை என்று வருகின்றபோது அரசாங்கமும் தமிழர்களும் முஸ்லிம்களும் சமமாக இருந்து பேச வேண்டும்- என்றார்.

# சுகாதாரத்துறையில் சிறந்து விளங்கிய நிறுவனங்களுக்கு கல்முனை RDHS இனால் விருது வழங்கி கௌரவிப்பு

பெரியநீலாவணை செய்தியாளர்

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை ஏற்பாடு செய்த பிராந்தியத்தின் சுகாதாரத்துறையில் சிறந்து விளங்கிய சுகாதார நிறுவனங்களைப் பாராட்டி நற்சான்றிதழ், விருது வழங்கி கௌரவிக்கும் நிகழ்வு கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையின் பிரதான மண்டபத்தில் பணிப்பாளர் வைத்திய கலாநிதி டாக்டர் சகீலா இஸ்ஸடீன் தலைமையில் திங்கட்கிழமை (16) நடைபெற்றது.

இந்நிகழ்வின்போது 2024ஆம் ஆண்டில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் கீழ் பொதுமக்களுக்கு சிறந்த சுகாதார சேவையை வழங்கி வருகின்ற நிறுவனங்களை மதிப்பீடு செய்து பாராட்டி கௌரவித்ததுடன் முதல் மூன்று இடங்களைப் பெற்றுக்கொண்ட பிரதேச வைத்தியசாலைகளும் இங்கு விருதுகள் வழங்கி பாராட்டி கௌரவிக்கப்பட்டன.



இதில் முதலாமிடத்தை பாலமுனை பிரதேச வைத்தியசாலை பெற்றுக்கொண்டதுடன் இரண்டாம் மூன்றாம் இடங்களை சாய்ந்தமருது மற்றும் அக்கரைப்பற்று பிரதேச வைத்தியசாலைகள் பெற்றுக்கொண்டன.

இதேவேளை, ஆரம்ப சுகாதார சேவையை வலுப்படுத்தும் செயற்றிட்டத்தை வெற்றிகரமாக பூர்த்திசெய்வதற்கு பங்களிப்புச் செய்த சுகாதார நிறுவனங்கள் மற்றும் துறை சார்ந்த அதிகாரிகளும் சான்றிதழ் வழங்கி பாராட்டி கௌரவிக்கப்பட்டார்கள்.

இந்நிகழ்வில் கல்முனை பிராந்திய கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டுப் பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் எம்.சி.எம்.மாஹிர், திட்டமிடல் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் எம்.எஸ்.எம்.ஷாபி, பிராந்திய சுகாதார தகவல் முகாமைத்துவப் பிரிவு பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் ஐ.எம்.முஜீப் உட்பட பிராந்திய பிரிவு பொறுப்பு வைத்திய அதிகாரிகள், வைத்தியசாலைகளின் பொறுப்பு வைத்திய அதிகாரிகள், சுகாதார நிறுவனங்களின் பொறுப்பு வைத்திய அதிகாரிகள், வைத்தியர்கள், சுகாதார உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# குற்றச்செயல்களுடன் தொடர்புபட்ட 15 பேர் காத்தான்குடியில் கைது

காத்தான்குடி மேலதிக செய்தியாளர்

காத்தான்குடி பொலிஸார் நடத்திய திடீர் சுற்றிவளைப்பு தேடுதல் நடவடிக்கையின்போது குற்றச்செயல்களுடன் தொடர்புபட்ட 15 பேர் திங்கட்கிழமை(16) கைது செய்யப்பட்டதாக காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

மட்டக்களப்பு மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் வழிகாட்டலில் காத்தான்குடி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஆர்.எம்.ரத்நாயக்கவின் பணிப்புரையின் பேரில் காத்தான்குடி குற்றத்தடுப்புப் பொலிஸார் மற்றும் போதை ஒழிப்புப் பிரிவினர் குறித்த தேடுதல் நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தனர்.



இதன்போது கேரள கஞ்சாவை வைத்திருந்த சந்தேக நபர்கள் இருவரும் கசிப்பு விற்பனை மற்றும் தயாரிப்பில் ஈடுபட்ட 12 சந்தேகநபர்களும் துவிச்சக்கர வண்டியைத் திருடிய ஒருவருமாக 15 பேர் பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்டவர்களிடமிருந்து சான்றுப்பொருட்கள் மீட்கப்பட்டுள்ளதுடன் கைதான நபர்களை மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றத்தில் நேற்று ஆஜர்படுத்தவுள்ளதாகவும் காத்தான்குடி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

தமிழன் வணிக உலகம்
Thamilan Business World
www.thamilan.lk businessthamilan@gmail.com

# 'Meet the Tech Titans' என்ற Podcast தொடரை ஆரம்பிக்கும் ஹட்ச் நிறுவனம்

ஹட்ச் நிறுவனம், "Meet the Tech Titans" என்ற தலைப்பில் ஆர்வமூட்டும் புதிய podcast தொடரொன்றை ஆரம்பிக்கவுள்ளது. தேசத்தின் டிஜிட்டல் மாற்றத்தை வடிவமைத்து மிகவும் பிரபலமான தொழில்நுட்பத் துறைத் தலைவர்கள், புத்தாக்குனர்கள் மற்றும் தொழில் முயற்சியாளர்களின் பயணங்கள் மற்றும் ஆழமான அறிவை வெளிக்காண்பிக்கும் வகையில் இந்த முயற்சி வடிவமைக்கப்பட்டுள்ளது. டிஜிட்டல் மயமாக்கல் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதில் வலுவான கவனம் செலுத்தியுள்ளதுடன், வலுவான டிஜிட்டல் பொருளாதாரத்தை ஸ்தாபிக்க வேண்டுமென்ற அரசாங்கத்தின் இலக்குடனும் இந்த podcast தொடர் ஒன்றியுள்ளது.

டிஜிட்டல் புத்தாக்கத்தின் எதிர்காலம் குறித்து கலந்துரையாடுவதற்காக பல்வேறு துறைகளிலிருந்து சிந்தனைச்சிற்பிகளை இத்தொடர் ஒரே மேடையில் ஒன்றிணைக்கவுள்ளது.


MiHCM பிரதம நிறைவேற்று அதிகாரி ஹர்ஷ புரசிங்க உலகளாவிய தொழிலாளர் உற்பத்தித்திறனுக்கு மீள்வரைவிலக்கணம் வகுப்பதில் தன்னியக்க மயமாக்கம், பகுப்பாய்வு மற்றும் செயற்கை நுண்ணறிவு ஆகியவற்றின் அனுகூலத்துடன் டிஜிட்டல் தீர்வுகள் மூலமாக மனித வளத்தில் புரட்சிக்கு வித்திட்ட MiHCM இன் மாற்றத்துக்கான பயணம் குறித்த ஆழமான விடயங்களைப் பகிர்ந்து கொள்வார். புத்தாக்கங்கள் மற்றும் டிஜிட்டல் மாற்றங்களை முன்னெடுப்பதில் சிறந்த தலைவரான அஹமட் இர்ஃபான், Futureworks, MAS Innovation மற்றும் IQ ஆகிய நிறுவனங்கள் எவ்வாறு இன்னமும் எட்டப்படாத சந்தைகளில் புத்தாக்கங்களை முன்னெடுத்து, நிலைபேணத்தக்க மற்றும் நற்பயனை விளைவிக்கின்ற தீர்வுகளைத் தோற்றுவிப்பதில் AI, AR/VR, மற்றும் smart textiles போன்ற அதிநவீன தொழில்நுட்பங்களை உள்ளிணைக்கின்றன என்பதைக் காண்பிக்கும் வகையில் தனது அறிவைப் பகிர்ந்துகொள்வார்.

# இலங்கையர்களுக்கு சூரிய சக்தியை முதலீடாக மாற்ற உதவும் Hayleys Solar ஒன்லைன் சேமிப்புக் கணிப்பான்

Hayleys Fentons இன் புதுப்பிக்கத்தக்க வலுசக்திப் பிரிவான Hayleys Solar, இலங்கையிலுள்ள குடும்பங்களின் மின்சக்தித் தேவைகளை கையாள்வதற்கான கருவிகளை அறிமுகப்படுத்தியுள்ளது.

சூரிய மின்சக்தி தொகுதியை கட்டுப்படியான விலையில் அனைவருக்கும் வழங்குவதற்காக வடிவமைக்கப்பட்ட நயக் நொவென நயக் (கடன் ஆகாத கடன்) எனும் பிரத்தியேகமான நிதி வழிகாட்டல் திட்டத்தை அண்மையில் அறிமுகப்படுத்திய Hayleys Solar நிறுவனம், சூரிய மின்சக்தி மூலம் சாத்தியமான சேமிப்பை மதிப்பீடு செய்ய எளிதானதாகவும் வெளிப்படையானதாகவும் இருக்கும் வகையில் தற்போது இத்திட்டத்தின் கீழ் சேமிப்புக் கணிப்பானை (Savings Calculator) அறிமுகப்படுத்தியுள்ளது. சூரிய சக்திக்கான மாற்றத்தை அனைவருக்கும் இலகுவாக்கவும் பயனுள்ளதாக்கவும் மாற்றுவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.

நயக் நொவென நயக் திட்டமானது, மக்கள் தமது தற்போதைய மாதாந்த மின்சாரக் கட்டணத்திலும் குறைந்த மாதாந்தக் கடன் தவணையைத் தெரிவுசெய்வதற்கான வாய்ப்பை வழங்குகிறது. நுகர்வோர் மற்றும் முதலீட்டாளர்கள் முதல் மாதத்திலிருந்தே தங்களுடைய சூரிய மின்சக்தி தொகுதி மூலம் பெறப்படும் பண சேமிப்பை அனுபவிக்க முடியும். இது 20 வருடங்களுக்கான இலவச மின்சாரத்தைப் பெறுவதற்கு உதவும். அதேவேளை, தங்கள் குடும்பத்தின் எதிர்காலத்துக்கு உதவுகின்ற மாற்று வழிகளில் அப்பணத்தை மீள் முதலீடு செய்ய வழிவகுக்கின்றது.




இந்தப் புதிய கணிப்பானானது, சூரிய மின்சக்தித் தொகுதியில் முதலீடு செய்வதன் மூலமான உண்மையான நிதிப் பலன்களைப் புரிந்துகொள்வதற்கான தனியான, வசதியான தகவல் ஆதாரமாக செயற்படும். அதே நேரத்தில், பயனர்கள் தங்கள் மின்சாரக் கட்டணத்தின் அடிப்படையில் சிறந்த பொதியைத் தெரிவுசெய்ய வழிவகுக்கிறது.

படி 1: உங்களது தற்போதைய மாதாந்த மின்சாரக் கட்டணத்தை உள்ளீடு செய்யவும்.

படி 2: உங்கள் மின்சார இணைப்பு வகையைத் தெரிவு செய்யவும்.

படி 3: உங்களுக்கு விருப்பமான வங்கி மற்றும் கடன் கால எல்லையைத் தெரிவுசெய்யவும்.

அதன் பின் நீங்கள் Submit (சமர்ப்பி) என்பதை அழுத்தியதும், தொகுதியின் கொள்ளளவு, எதிர்பார்க்கப்படும் மாதாந்த மின்சார உற்பத்தி, மொத்த முதலீடு, மாதாந்தக் கடன் தவணை மற்றும் மிக முக்கியமாக நீங்கள் எதிர்பார்க்கும் மாதாந்த சேமிப்பு உள்ளிட்ட விரிவான தொகுப்புடனான பரிந்துரையை இந்தக் கணிப்பான் வழங்கும்.

இந்தப் பரந்த தகவல் கொண்ட கருவியைப் பயன்படுத்தி, சூரிய மின்சக்திக்கு மாறுவதன் மூலம் நீண்டகால நிதிப் பலன்களை நுகர்வோர் அனுபவிக்க முடியும்.

நயக் நொவன நயக் மூலம் முதலீடு செய்வதற்கான சாத்தியமான மாதாந்த சேமிப்பு மற்றும் மிகவும் பொருத்தமான பொதிகள் பற்றி அறிய, https://loancalculator.hayleyssolar.com/ எனும் இணையதளத்தைப் பார்வையிடவும் அல்லது 0112 102 102 எனும் இலக்கத்தைத் தொடர்பு கொள்ளவும்.

# Tropical Christmas கொண்டாட்டத்தை ஆரம்பித்த Pegasus Reef ஹோட்டல்







கிறிஸ்மஸ் மரத்தை ஒளியூட்டி, நத்தார் பண்டிகைக்காக நத்தார் தாத்தாவை வரவேற்பதன் மூலம், அனைவரினதும் மிகவும் எதிர்பார்ப்புக்குரிய Tropical Christmas (வெப்பமண்டல கிறிஸ்மஸ்) எண்ணக்கருவுடனான விடுமுறைச் செயற்பாடுகள் கொண்ட, புத்துணர்ச்சியூட்டும் திருப்பத்தை இப்பண்டிகைக் காலத்தில் Pegasus Reef ஹோட்டல் கொண்டுவந்துள்ளது. இக்கொண்டாட்டங்கள் யாவும் முழுக் குடும்பத்தினருக்குமான தனித்துவமான மற்றும் மகிழ்ச்சியான அனுபவத்தை வழங்கியதோடு, பண்டிகைக் காலத்தின் பாரம்பரிய அரவணைப்பையும் மகிழ்ச்சியூட்டும் அதிர்வுகளையும் ஒன்றிணைத்தது. அழகாக ஒளிரும் இந்தக் கிறிஸ்மஸ் மரமானது அனைவருக்கும் ஒரு மறக்க முடியாத மாலை அனுபவத்தையும் ஒரு மகிழ்ச்சி மிக்க விடுமுறைக் காலத்துக்கான தொனியையும் அமைக்கிறது. இந்நிகழ்வில் கிறிஸ்மஸ் பரிசுகள் மற்றும் நத்தார் தாத்தாவுடன் புகைப்படம் எடுப்பதற்கான வாய்ப்புகள், சிறுவர்களுக்கான பங்குபற்றலுடன் கூடிய அம்சங்கள் உள்ளிட்ட பல செயற்பாடுகளை விருந்தினர்கள் அனுபவித்தனர்.

இவ்விழாவின் முக்கிய அம்சமாக, கிறிஸ்மஸின் மகிழ்ச்சியை இளைஞர்களுக்கும் முதியவர்களுக்கும் பரப்புவதற்காக வட துருவத்தின் குளிரில் இருந்து தப்பித்து, சூடான வெப்பமண்டலத்துக்குள் நுழையும் வகையிலான நத்தார் தாத்தாவின் பிரம்மாண்டமான வருகை அமைந்திருந்தது. இது அந்தச் சூழலுக்கு மேலும் மெருகூட்டியதோடு, உண்மையான பண்டிகை உணர்வையும் வெளிப்படுத்தியது. கொண்டாட்டங்களுக்கு மேலும் சுவையை வழங்குவதற்காக வெப்பமண்டலத்தை மையப்படுத்திய பானங்கள் மற்றும் சுவையான உணவுகளும் பரிமாறப்பட்டன.

# ஆண்டின் சிறந்த தயாரிப்பு வர்த்தக நாமம் அடங்கலாக SLIM வர்த்தக சிறப்பு விருதுகளை சுவீகரித்த Fems



இலங்கையில் பெண்கள் மாதவிடாய் தூய்மை தயாரிப்புகளில் நம்பிக்கையை வென்ற நாமமாகத் திகழும் Fems, அண்மையில் நடைபெற்ற SLIM வர்த்தக நாம சிறப்பு விருதுகள் 2024 இல் ஆண்டின் சிறந்த தயாரிப்பு வர்த்தக நாமத்துக்கான பெருமைக்குரிய தங்க விருதை வென்றதனூடாக, இலங்கையில் பெண்கள் தூய்மை தொடர்பான வர்த்தக நாமமொன்று இந்த விருதை சுவீகரித்த முதலாவது சந்தர்ப்பத்தைப் பதிவுசெய்துள்ளது. வர்த்தக நாமம் மொத்தமாக மூன்று பிரதான விருதுகளை இந்த நிகழ்வில் சுவீகரித்து, 2023 ஆம் ஆண்டு முதலான தனது வெற்றியை தொடர்ந்திருந்தது.

சகல நுகர்வோர் தயாரிப்புகள் பிரிவிலும் போட்டியிட்டிருந்த புகழ்பெற்ற வர்த்தக நாமங்களுடன் போட்டியிட்டு ஆண்டின் சிறந்த தயாரிப்பு வர்த்தக நாமத்துக்கான தங்க விருதை Fems சுவீகரித்திருந்தது. ஆண்டின் புத்தாக்கமான வர்த்தக நாமத்துக்கான வெள்ளி விருதையும் ஆண்டின் சிறந்த சமூகப் பொறுப்புணர்வு வர்த்தக நாமத்துக்கான வெள்ளி விருதையும் Fems வென்றிருந்தது.

# புற்றுநோய்ச் சிகிச்சையை மேம்படுத்த Varian- DIMO Healthcare நடத்திய மாநாடு



இலங்கையில் முன்னணியில் உள்ள பல்துறை கூட்டு நிறுவனமான DIMO வின் சுகாதாரப் பாதுகாப்புப் பிரிவான DIMO Healthcare நிறுவனமானது, புற்றுநோய்ச் சிகிச்சைத் துறையில் சர்வதேச ரீதியில் முன்னணி நிறுவனமான Siemens Healthineers இன் துணை நிறுவனமான Varian உடன் இணைந்து The Varian Technology Symposium எனும் மாநாட்டை அண்மையில் ஏற்பாடு செய்திருந்தது.

இலங்கையில் புற்றுநோய் சிகிச்சையில் மேம்பட்ட கதிர்வீச்சு சிகிச்சை தொழில்நுட்பத்தின் முக்கிய பங்கை முன்னிலைப்படுத்தவும் அது குறித்து மருத்துவர்களுக்கு தெளிவூட்டுவதற்காகவும் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த மாநாட்டின் முதன்மை நோக்கமானது, பயனுள்ள புற்றுநோய்ச் சிகிச்சை வசதிகளை மேம்படுத்துதல் மற்றும் இலங்கையில் சிகிச்சை முறைகளின் தரநிலையை மேம்படுத்துவதாகும்.

இந்த மாநாட்டில் இந்தியாவின் ஜெய்ப்பூர், நாராயண மருத்துவமனையின் Radiation Oncology பிரிவின் பணிப்பாளர் வைத்தியர் நிதி பட்னி உரையாற்றியதோடு, இலங்கையில் புற்றுநோய்ச் சிகிச்சையை மேம்படுத்த மேம்பட்ட கதிர்வீச்சு சிகிச்சைத் தீர்வுகளை அறிமுகப்படுத்துவதன் முக்கியத்துவத்தை அவர் வலியுறுத்தினார்.

கதிரியக்க தொழில்நுட்பத்தின் புதிய மேம்பட்ட முறைகளை ஆராய்வதற்கான சிறந்த தளமாக Varian Technology மாநாட்டைக் குறிப்பிட முடியும். இந்நிகழ்வில் நாடளாவிய ரீதியிலிருந்து 40க்கும் மேற்பட்ட சுகாதார நிபுணர்கள் கலந்துகொண்டதுடன், உலகெங்கிலும் உள்ள புற்றுநோய்ச் சிகிச்சைக்காகப் பயன்படுத்தப்படும் புதிய தொழில்நுட்ப வசதிகள் பற்றிய விரிவான பகுப்பாய்வு தொடர்பிலும் அவர்களுக்கு விளக்கமளிக்கப்பட்டது.

# ஒரு வருட காலப்பகுதியினுள் 8 காப்புரிமைகள், 12 புத்தாக்கங்களை வணிகமயப்படுத்திய SLINTEC

- **2024 இல் இதுவரை பதிவாகிய உயர்ந்த காப்புரிமைகளை வணிகமயப்படுத்தியுள்ளது.**
- **'SLINTEC'இன் graphite-அடிப்படையிலான காப்புரிமையினூடாக அபுதாபியின் சமுத்திர துப்புரவாக்கல் செயன்முறைக்கு புத்தாக்கமளிக்கவுள்ளது**
- **SLINTEC இயற்கை சாயம் (dye) காப்புரிமைகள் ஆடை ஏற்றுமதிகள் வளர்ச்சியில் பங்களிப்புச் செய்யும்.**





இலங்கை நனோதொழினுட்ப நிறுவகம் (SLINTEC) நான்கு காப்புரிமைகளை வணிக மயப்படுத்தியுள்ளதுடன், மேலும் நான்கு (4) புத்தாக்கங்கள் வணிக மயப்படுத்தும் இறுதிக் கட்டத்தை எய்தியுள்ளதாக அறிவித்துள்ளது. முதலீட்டு வங்கியாளர் மற்றும் PPP நிபுணருமான திலான் விஜேசிங்க 2022 செப்டெம்பர் மாதம் SLINTEC இன் தவிசாளராகப் பொறுப்பேற்றதைத் தொடர்ந்து கலாநிதி துஷார வஜிர பெரேரா (அமெரிக்காவின் Pfizer Inc., இன் முன்னாள் சிரேஷ்ட விஞ்ஞானி மற்றும் MAS இன் சுகாதார விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பப் பணிப்பாளர்) பிரதம நிறைவேற்று அதிகாரியாகவும், பொறுப்பேற்றதைத் தொடர்ந்து, SLINTEC சர்வதேச ரீதியில் ஏற்றுக் கொள்ளும் நிலைக்கு உயர்ந்துள்ளதுடன், நிதித் தன்னிறைவையும் இலங்கையின் தொழிற் றுறைசார் புத்தாக்க கட்டமைப்புக்கு பெருமளவு பங்களிப்பையும் வழங்குகின்றது.

இன்று நிறுவனத்தின் பெருமளவு வளர்ச்சியில் நிறுவனத்தில் பணியாற்றும் விஞ்ஞானிகள் அணியினருக்கு தலைமைத்துவமளிக்கும் கலாநிதி பெரேரா போன்றவர்களின் செயற்பாடுகள் பங்களிப்பு வழங்குவதுடன் விஞ்ஞான ரீதியான புத்தாக்கங்களை பிரயோக ரீதியான, சந்தையில் தயார்நிலையில் கொள்ளக்கூடிய புத்தாக்கங்களாக மாற்றியமைத்துக்கொள்ளவும் முடிந்துள்ளது.

SLINTEC இன் தவிசாளர் திலான் விஜேசிங்க குறிப்பிடுகையில், "2024 ஆம் ஆண்டில் SLINTEC இன் வருமானம் சாதனைப் பெறுமதிகளை எய்தியிருந்ததுடன், 2025 இல் மேலும் வளர்ச்சியடையுமென எதிர்பார்க் கின்றோம். செயற்பாடுகளுக்கு ஏற்படும் நாளாந்த செலவுகளுக்காக அரசாங்க நிதியை எதிர்பார்த் திராத ஒரே ஆய்வுசார் அமைப்பாக SLINTEC மாத்திரம் திகழ்கின்றது. நிறுவனத்தின் 50 சதவீத பங்குகளை தேசிய விஞ்ஞான மையம் மற்றும் 50 சதவீத உரிமையை தனியார் துறை நிறுவனங்களான MAS, LOLC, Brandix மற்றும் Hayleys ஆகியன கொண்டுள்ளன. பொது – தனியார் கைகோர்த்து, இலங்கையில் விஞ்ஞான புத்தாக்கங்களை முன்னேற்றுவதற்கான சிறந்த மாதிரி எடுத்துக்காட்டாக SLINTEC அமைந் துள்ளது" -என்றார்.

நிறுவனத்தின் வெற்றிகரமான செயற்பாடுகள் தொடர்பில் SLINTEC இன் பிரதம நிறைவேற்று அதிகாரி கலாநிதி துஷார பெரேரா கருத்துத் தெரிவிக்கையில், "ஆய்வு மற்றும் விருத்தியின் கட்டமைக்கப்பட்ட வணிகமயமாக்கலினூடாக, இலங்கையின் மிகவும் பெறுமதி வாய்ந்த விஞ்ஞான அடிப்படையிலான சொத்தாக SLINTEC ஐ மாற்றுவது எமது நோக்காகும். நவீன ஆய்வுகள் மற்றும் நிலைபேறாண்மை அடிப்படையிலான புத்தாக்கங்களுக்கான மையமாக SLINTEC ஐ வழிநடத்த நாம் எதிர்பார்ப்பதுடன், தொழிற்றுறை, உள்நாட்டு மற்றும் சர்வதேச பல்கலைக்கழகங்கள், ஆய்வு மற்றும் விருத்தி அமைப்புகள் போன்றவற்றுடன் தாக்கத்தை ஏற்படுத்தும் பங்காண்மைகளை ஏற்படுத்தி இயங்க எதிர்பார்க்கின்றது. தாதுப் பொருட்கள், விவசாயம் மற்றும் ஏற்றுமதி உற்பத்தி போன்ற பல பிரிவுகளை உள்வாங்கி இந்தச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும்" - என்றார்.

# 1,00,000 மரங்கள் நடும் திட்டத்தை வெற்றிகரமாக நிறைவுசெய்த கொமர்ஷல் வங்கி





கொமர்ஷல் வங்கியானது இலங்கையில் தனது சமூக பொறுப்புத் திட்டத்தின் கீழ் 1,00,000 மரங்களை நடும் திட்டத்தைத் திட்டமிடப்பட்ட காலத்துக்கு முன்னதாக வெற்றிகரமாக நிறைவு செய்துள்ளது. நாடு முழுவதும் தேர்ந்தெடுக்கப்பட்ட இடங்களில் இம்மரங்கள் நடப்பட்டுள்ள நிலையில், வங்கியானது அடுத்த 12 மாதங்களில் மேலும் 1,00,000 மரங்களை நடும் திட்டத்தை அறிவித்துள்ளது.

இந்நிலையில், இலங்கையின் முன்னணி தனியார் துறை வங்கி என்ற அந்தஸ்தைப் பெற்றுள்ள கொமர்ஷல் வங்கியானது தனது இலட்சியமான 'மரங்கள் நிறைந்த தேசம்' திட்டத்தை வெற்றிகரமாக நிறைவு செய்ததை அண்மையில் கொண்டாடியது. முதலில் மூன்று ஆண்டுகளில் செயற்படுத்தத் திட்டமிடப்பட்டிருந்த இந்த மரம் நடும் திட்டமானது தொடங்கப்பட்டதிலிருந்து சரியாக ஒரு வருடத்தில் நிறைவுசெய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

கொமர்ஷல் வங்கியின் முகாமைத்துவப் பணிப்பாளரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான சனத் மனதுங்க கருத்துத் தெரிவிக்கையில், ''எமது நாட்டின் வளமான மற்றும் பன்முகத்தன்மை வாய்ந்த சுற்றுச்சூழல் அமைப்புகளுக்கு வங்கியின் நிலைபேறான பாதை வரைபடம் மற்றும் எதிர்காலத்துக்கான அதன் பார்வைக்கு இது ஒரு குறிப்பிடத்தக்க மைல்கல்லாகும். எங்கள் நிலைபேறுதகு நிகழ்ச்சி நிரல் இப்போது நாம் செய்யும் எல்லாவற்றுடனும் ஒன்றோடொன்று இணைக்கப் பட்டுள்ளது.

மேலும் இந்தத் திட்டமும் அதன் விரிவாக்கமும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் நிலையான வளர்ச்சிக்கான எங்கள் உறுதியற்ற அர்ப்பணிப்பை வெளிப்படுத்துகிறது. ஒரே எண்ணம் கொண்ட அர்ப்பணிப்பு மற்றும் ஆர்வமுள்ள மற்றும் ஒத்த எண்ணம் கொண்ட நபர்கள் மற்றும் நிறுவனங்களுடனான ஈடுபாட்டுடன் வங்கி இதை அடைய முடியும் என்பதற்கு இது ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும்'' - என்றார்.

# இஸ்ரேலின் குண்டுத் தாக்குதலில் 3.1 ரிச்டரில் அதிர்ந்தது சிரியா





சிரியா மீது இஸ்ரேல் நிலநடுக்கத்தை ஏற்படுத்தக்கூடிய வெடிகுண்டுகளை வீசி தாக்குதல் நடத்தியுள்ளது. இந்தத் தாக்குதலின்போது சிரியாவில் 3.1 ரிச்டர் அளவிலான நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சிரியாவிலுள்ள ஏவுகணைக் கிடங்குகளைக் குறிவைத்து இஸ்ரேல் நேற்றுமுன்தினம் (16) தாக்குதல் நடத்தியுள்ளது. இது குறித்து, அந்நாட்டின் போர் விவகாரங்களைக் கண்காணித்துவரும் சிரியா மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில்,

சிரியாவில் முன்னாள் ஜனாதிபதி பஷர் அல்-அசாத் படைகள் ஏவுகணைகளை சேமித்துவைத்திருந்த கிடங்குகளைக் குறிவைத்து இஸ்ரேல் இராணுவம் திங்கட்கிழமை அதிகாலை தாக்குதல் நடத்தியது.

அந்தத் தாக்குதல், கடந்த 2012ஆம் ஆண்டுக்குப் பின்னர் சிரியாவில் நடத்தப்பட்டுள்ள மிக சக்திவாய்ந்த தாக்குதலாகுமென்று அந்த அமைப்பு தெரிவித்தது.

டார்டஸ் நகருக்கு அருகிலுள்ள ஏவுகணைக் கிடங்கில் நடத்தப்பட்ட தாக்குதலின் அதிர்வுகள் இஸ்ரேல் நிலநடுக்கவியல் ஆய்வு மையத்தில் 3.1 அலகுகளாகப் பதிவானதாக 'தி ரைம்ஸ் ஒவ் இஸ்ரேல்' தெரிவித்துள்ளது.

வழக்கமான நிலநடுக்கத்தைவிட இரண்டு மடங்கு வேகத்தில் இந்த குண்டுவெடிப்பின் அதிர்வுகள் பரவியதாக அமெரிக்க ஆய்வாளர்கள் தெரிவித்தனர்.

கடந்த 2011ஆம் ஆண்டு தொடங்கிய சிரியா உள்நாட்டுப் போரில் ரஷ்யா மற்றும் ஈரான் உதவியுடன் நாட்டின் மிகப் பெரும்பான்மையான பகுதிகளை அல்-அசாத் தலைமையிலான இராணுவம் மீட்டது. பின்னர் கிளர்ச்சியாளர்களுடன் போர் நிறுத்த ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டதைத் தொடர்ந்து நீண்டகாலமாகவே உள்நாட்டுப் போர் தேக்கமடைந்திருந்தது.

இந்நிலையில், அரச படைகளுக்கு எதிராக கிளர்ச்சிப் படையினர் கடந்த மாத இறுதியில் திடீரென தாக்குதல் நடத்தி வெகுவேகமாக முன்னேறி தலைநகர் டமஸ்கஸை கடந்த ஞாயிற்றுக்கிழமை கைப்பற்றினர். ஆட்சியை இழந்த ஜனாதிபதி பஷர் அல்-அசாத் தனது குடும்பத்தினருடன் ரஷ்யாவுக்குத் தப்பிச் சென்றார்.

அல்-அசாத் அரசு அகற்றப்பட்டதற்குப் பின்னர் சிரியாவில் கோலன் குன்றுகள் பகுதியில் படைகளற்ற பாதுகாப்பு மண்டலமாக அறிவிக்கப்பட்டிருந்த பகுதிகளை இஸ்ரேல் கைப்பற்றியது.

அத்துடன், சிரியா அரச படைகளின் நிலைகள் மீது மிகத் தீவிரமாக வான்வழித் தாக்குதல் நடத்திய இஸ்ரேல், அந்த நாட்டின் ஏவுகணைகள், ட்ரோன்கள், போர் விமானங்கள், இராணுவ ஹெலிகொப்டர்கள், ரேடார்கள், பீரங்கிகள், போர் விமானத் தளங்கள் ஆகியவற்றை அழித்தது. அத்துடன், மினா அல்-பாய்தா, லடாகியா ஆகிய இரு சிரியா கடற்படைத் தளங்களில் இஸ்ரேல் தாக்குதல் நடத்தி அங்கிருந்த போர்க் கப்பல்களை சேதப்படுத்தியது.

சிரியாவைக் கைப்பற்றியிருக்கும் கிளர்ச்சிப் படையினருக்கு அந்த ஆயுத தளவாடங்கள் கிடைத்து. அதன் மூலம் தங்களுக்கு அச்சுறுத்தல் ஏற்படுவதை முன்கூட்டியே தடுப்பதற்காக இந்த நடவடிக்கையை மேற்கொள்வதாக இஸ்ரேல் தெரிவித்துவருகிறது.

தங்கள் நாட்டில் இஸ்ரேல் தாக்குதல் நடத்துவதை இனியும் நியாயப்படுத்த முடியாதென்று அல்-அசாத்தை ஆட்சியிலிருந்து அகற்றிய ஹயாத் தஹ்ரீர் அல்-ஷாம் (ஹெச்டிஎஸ்) கிளர்ச்சிப் படையின் தலைவர் அஹமது அல்-ஷரா கடந்த வாரம் தெரிவித்தார்.

இந்நிலையில், சிரியா ஏவுகணைக் கிடங்குகளில் இஸ்ரேல் இராணுவம் மீண்டும் சக்திவாய்ந்த தாக்குதலை நடத்தியுள்ளமை பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# ஜேர்மனி அதிபருக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம்

## முன்கூட்டியே தேர்தல் நடத்த முடிவு



ஜேர்மனி அதிபர் ஒலாப் ஸ்கோல்ஸுக்கு (Olaf Scholz) எதிராக அந்நாட்டுப் பாராளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் (16) கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

அதையடுத்து, அடுத்த அரசை தெரிவுசெய்வதற்கான தேர்தல், முன்கூட்டியே (அடுத்த ஆண்டு பெப்ரவரி 23ஆம் திகதிக்குள்) நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

கடந்த 2021ஆம் ஆண்டு நடைபெற்ற ஜேர்மனி பொதுத் தேர்தலில் எந்தக் கட்சிக்கும் பெரும்பான்மை கிடைக்காததையடுத்து, தி கிரீன்ஸ் மற்றும் சுதந்திர ஜனநாயகக் கட்சியுடன் கூட்டணியமைத்து சோஷியல் ஜனநாயகக் கட்சி ஆட்சியமைத்தது. ஒலாப் ஸ்கோல்ஸ் அதிபராகப் பொறுப்பேற்றார்.

எனினும், பொருளாதார சீர்திருத்த விவகாரத்தில் சுதந்திர ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்த நிதியமைச்சர் கிறிஸ்ரியன் லிண்டனரை கடந்த மாதம் ஒலாப் நீக்கினார். அதையடுத்து கூட்டணி முறிந்தது.

இதனால் ஆளுங்கட்சி அரசின் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவரப்பட்டது. இந்நிலையில், நேற்றுமுன்தினம் (16) அந்நாட்டு பாராளுமன்றத்தில் தீர்மானம் மீதான வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. இதில் ஒலாப் ஸ்கால்ஸ் தோல்வியடைந்தார்.

733 இடங்களைக்கொண்ட கீழ்சபையில் அதிபர் ஓலாப் ஸ்கோல்ஸ் 207 உறுப்பினர்களின் ஆதரவைப் பெற்று தோல்வியடைந்தார். அதேநேரத்தில், 394 உறுப்பினர்கள் எதிராக வாக்களித்தனர். 116 பேர் வாக்களிப்பைப் புறக்கணித்தனர். இதனால் அவர் வெற்றி பெற தேவையான 367 பெரும்பான்மையை விட மிகக் குறைவான வாக்குகளையே பெற்றிருந்தார். இதனால் வாக்கெடுப்பில் ஜேர்மனி அதிபர் தோல்வியைத் தழுவினார்.

இந்நிலையில் எதிர்வரும் பெப்ரவரி 23ஆம் திகதி முன்கூட்டியே தேர்தல் நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

# வனுவாட்டுவை உலுக்கிய 7.4 ரிச்டர் நிலநடுக்கம்








பசுபிக் கடற்பகுதியிலுள்ள வனுவாட்டு தீவில் நேற்று 7.4 ரிச்டர் சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. நிலநடுக்கத்தின் அளவு கடுமையாக இருந்ததால் கடல் அலைகள் 3 அடி உயரத்துக்கு எழும்பின. இதனால் வனுவாட்டுவை சுற்றியுள்ள தீவுகள் மற்றும் நியூஸிலாந்துக்கு சுனாமி எச்சரிக்கை விடுக்கப்பட்டது. பின்னர் எச்சரிக்கை திரும்பப்பெறப்பட்டது.

வனுவாட்டுவின் தலைநகர் போர்ட் விலாவுக்கு மேற்கே 30 கிலோமீற்றர் தொலைவிலும் பூமிக்கடியில் 43 கிலோமீற்றர் ஆழத்திலும் இந்நிலநடுக்கம் ஏற்பட்டதாக அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

நிலநடுக்கத்துக்குப் பின்னர் அப்பகுதியில் சுனாமி ஏற்படக்கூடும் என்று எச்சரித்த அதிகாரிகள், குடிமக்கள் கடலோரப் பகுதிகளிலிருந்து விலகியிருக்கவும் இராட்சத அலைகள் எழக்கூடுமெனவும் இதனால் மக்கள் கவனமாக இருக்கவேண்டுமெனவும் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

# பதவி துறந்தார் கனடா துணைப் பிரதமர்



கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ (Justin Trudeau) முடிவு மீது அதிருப்தியடைந்த அந்நாட்டு துணைப் பிரதமரும், பெண் நிதியமைச்சருமான கிறிஸ்ரியா ப்ரீலேண்ட் தனது பதவியை இராஜிநாமா செய்துள்ளார்.

இந்நிலையில் பிரதமர் ட்ரூடோவின் புகழ் குறைந்து வருவதால், அமைச்சரவையிலிருந்து தாம் விலகுவதாக கிறிஸ்ரியா அறிவித்துள்ளார். பிரதமர் ட்ரூடோவின் அமைச்சரவையில் மிகவும் சக்திவாய்ந்த அமைச்சரான இவர் நேற்றுமுன்தினம் தனது பதவியை இராஜிநாமா செய்துள்ளார்.

# குழந்தை வரம் வேண்டி கோழிக்குஞ்சை விழுங்கியவர் பலி!

## உயிர் பிழைத்தது கோழிக்குஞ்சு



சத்தீஸ்கரில் குழந்தை வரம் வேண்டி கோழிக்குஞ்சை உயிருடன் விழுங்கியவர் உயிரிழந்துள்ளார். எனினும், அவர் விழுங்கிய கோழிக்குஞ்சு உயிர் தப்பியுள்ளது.

சத்தீஸ்கர் மாநிலம் சிந்த்காலோ என்ற ஊரைச் சேர்ந்த ஆனந்த் யாதவ்வுக்கு (வயது 35) திருமணமாகி பல வருடங்களாக குழந்தைகள் இல்லை. மந்திர, தந்திரங்களில் அதீத நம்பிக்கை கொண்ட அவர், தான் தந்தையாக வேண்டும் என்பதற்காக அவ்வப்போது ஏதேனும் பரிகாரங்களை செய்து வந்துள்ளார்.

இந்நிலையில் சம்பவத்தன்று குளித்துவிட்டு வீடு திரும்பிக்கொண்டிருந்த ஆனந்த் திடீரென மயங்கி விழுந்துள்ளார். இதனையடுத்து அவரை அவரது உறவினர்கள் வைத்தியசாலைக்கு அழைத்துச் சென்றுள்ளனர்.

அவரை பரிசோதித்த வைத்தியர்கள் மூச்சுத்திணறல் காரணமாக இறந்துவிட்டதாகத் தெரிவித்தனர். இதையடுத்து, சடலம் உடற்கூராய்வுக்கு அனுப்பப்பட்டது. சடலத்தை உடற்கூராய்வு செய்தபோது ஆனந்த் மரணத்தில் திடுக்கிடும் திருப்பம் நிகழ்ந்தது. அவரது தொண்டையில் உயிருடன் கோழிக்குஞ்சொன்று சிக்கியிருப்பதைக் கண்டு அதை மீட்டுள்ளனர்.

தொடர் விசாரணையில், மந்திர, தந்திரங்கள் மீது அதிகப்படியான நம்பிக்கைகொண்ட ஆனந்த் யாதவ், தந்தையாக வேண்டி சில சடங்குகளைச் செய்து வந்ததாகத் தெரிகிறது. அதன் ஒரு பகுதியாக உயிருடனுள்ள கோழிக்குஞ்சை விழுங்கினால் குழந்தை பாக்கியம் கிடைக்குமென்று உள்ளூரிலுள்ள ஜோதிடர் ஒருவர் கூறியதை நம்பியிருக்கிறார். இதனையடுத்து கோழிக்குஞ்சை உயிருடன் விழுங்கியுள்ளார். அப்போது மூச்சுத்திணறல் ஏற்பட்டு உயிரிழந்துள்ளார்.

இதனையடுத்து உடற்கூராய்வு செய்த வைத்தியர் தெரிவிக்கையில்,

''என் வாழ்நாள் பணி அனுபவத்தில் இதுபோன்றதொரு சம்பவத்தை நான் கண்டதில்லை. உயிரிழந்த ஆனந்த் யாதவ் தொண்டையில் 20 செ.மீ. நீளம் கொண்ட கோழிக்குஞ்சை எடுத்தேன். இந்தக் கோழிக்குஞ்சு உயிருடன் இருக்கிறது.

தொண்டைக்குழியில் சிக்கிய கோழிக்குஞ்சால் மூச்சுத்திணறல் ஏற்பட்டு உயிரிழந்துள்ளார். கிட்டத்தட்ட 15,000இற்கும் மேற்பட்ட உடற்கூராய்வு செய்த நான் இதுபோன்ற ஓர் அனுபவத்தை கண்டதில்லை'' - என்றார்.

# மொஸ்கோ குண்டுவெடிப்பில் ரஷ்ய அணு ஆயுதப் படைகளின் தலைவர் பலி!



மொஸ்கோவில் இடம்பெற்ற குண்டுவெடிப்பில் ரஷ்யாவின் அணு ஆயுதப் படைகளின் தலைவர் லெப்டினண்ட் ஜெனரல் இகோர் கிரில்லோவ் கொல்லப்பட்டுள்ளார்.

ரஷ்ய தலைநகரான மொஸ்கோவிலுள்ள அடுக்குமாடி குடியிருப்பொன்றின் அருகே இரு சக்கர வாகனத்தில் மறைத்து வைக்கப்பட்டிருந்த வெடிகுண்டு நேற்று (17) அதிகாலை வெடித்துச் சிதறியது. இதில் ரஷ்யாவின் அணு, உயிரியல் மற்றும் இரசாயனப் பாதுகாப்புப்படைகளின் தலைவரான லெப்டினண்ட் ஜெனரல் இகோர் கிரில்லோவ் கொல்லப்பட்டதாக ரஷ்யாவின் விசாரணைக்குழு தெரிவித்துள்ளது.

மேலும், இந்த வெடி விபத்தில் உயிரிழந்த மற்றொருவர், கிரில்லோவின் உதவியாளர் எனத் தெரியவந்துள்ளது. இந்தச் சம்பவம் குறித்து குற்றவியல் விசாரணை தொடங்கப்பட்டுள்ளதாக விசாரணைக்குழு தெரிவித்துள்ளது. முன்னதாக, இரசாயன ஆயுதங்களைப் பயன்படுத்தியதாக கிரில்லொவ் மீது குற்றச்சாட்டுகள் உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

ரஷ்ய வெளியுறவு அமைச்சு செய்தித் தொடர்பாளர் மரியா ஜாகரோவா தெரிவிக்கையில், கிரில்லோவ் தாய்நாட்டுக்காக மிகுந்த அர்ப்பணிப்புடன் பாடுபட்டார். சிரியா, உக்ரைன் நாடுகளில் அமெரிக்கா, நேட்டோ படையினரின் இரசாயன, உயிரியல் ஆயுத ஆய்வுக்கூடங்கள் குறித்து கண்டறிந்து அம்பலப்படுத்தினார். தடைசெய்யப்பட்ட வழிமுறைகளில் சாலிஸ்பரி, ஆம்ஸ்பரியில் பிரித்தானியா மேற்கொண்ட ஆயுத சோதனைகள் பற்றியும் அம்பலப்படுத்தினார். தாய்நாட்டை மிகவும் நேசித்தார் - என்றார்.

# காதலியைத் தேடி 200 கி.மீ. தூரம் பயணித்த பொரிஸ்



காதல் என்பது மனிதர்களுக்கு மட்டுமல்ல, எல்லா உயிர்களிடமும் இருக்கிறதென்பது பல சம்பவங்களில் நிரூபிக்கப்பட்டு வருகிறது. அந்த வகையில் ரஷ்யாவில் புலியொன்று தனது துணையைத் தேடி 200 கிலோமீற்றர் தூரம் பயணம் செய்த சம்பவம் தற்போது பேசுபொருளாகியுள்ளது.

ரஷ்யாவில் சிஹோடா மலைப்பகுதியில் இரண்டு புலிக்குட்டிகள் கடந்த 2012ஆம் ஆண்டு வனத்துறையால் மீட்கப்பட்டன. அதில் ஆண் புலிக்கு பொரிஸ் (Boris) என்றும் பெண் புலிக்கு ஸ்வேட்லயா (Svetlaya) என்றும் பெயரிட்டு வளர்த்தனர். இந்த 2 புலிகளும் தனித்தனியாக தங்களது எல்லைகளைப் பகிர்ந்து வாழ வேண்டும் என்பதற்காக அவற்றை பிரித்து 200 கிலோ மீற்றர் தூரத்தில் சைதிரியா வனப்பகுதியில் பொரிஸ் புலியை விட்டனர்.

ஆனால், அந்தப் புலி தனது இருப்பிடத்தை நோக்கி தொடர்ந்து பயணம் செய்துகொண்டே இருந்தது. அதேநேரம் துணையைப் பிரிந்த ஸ்வேத்லயா வேறெங்கும் பயணம் செய்யாமல் விட்ட இடத்திலேயே தொடர்ந்து சுற்றியது. இந்தப் புலிகளின் நடமாட்டத்தை வனத்துறையினர் கண்காணித்து வந்தனர். இந்நிலையில், பொரிஸ் புலி 3 ஆண்டுகள் பயணம் செய்து ஸ்வேத்லயா இருக்கும் வனப்பகுதிக்கு வந்து சேர்ந்தது. கடந்த 6 மாதங்களாக 2 புலிகளும் மகிழ்ச்சியாக சேர்ந்து வாழ்கின்றன. இவற்றின் வீடியோ தற்போது இணையத்தில் பரவி வருகிறது.

# வவுனியாவில் எலிக்காய்ச்சல் தொற்றுக்குள்ளானவர் யாழுக்கு மாற்றம்

சிவகுமார் திவியா

வவுனியாவில் எலிக்காய்ச்சல் தொற்றுக்குள்ளாகி சிகிச்சைபெற்றுவந்தவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு நேற்று முன்தினம் (16) மாற்றப்பட்டுள்ளார்.

வவுனியா, தாலிக்குளம் பகுதியைச் சேர்ந்த நபரொருவர் வவுனியா வைத்தியசாலையில் காய்ச்சல் காரணமாக அனுமதிக்கப்பட்டிருந்தார். எனினும், அவருக்கு காய்ச்சல் சுகமாகாமையால் மேலதிக சிகிச்சைக்காக அவர் யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டிருந்தார்.

அங்கு மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் அவருக்கு எலிக்காய்ச்சல் தொற்று இருப்பது உறுதிப்படுத்தப்பட்ட நிலையில் மேலதிக சிகிச்சை வழங்கப்பட்டு வருகின்றது.

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கலைப்பீட மாணவர் ஒன்றியத்தின் சமூகநலத்திட்டம்



பு.கஜிந்தன்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கலைப்பீட மாணவர் ஒன்றியத்தால் நேற்று முன்தினம் (16) திங்கட்கிழமை யாழ்ப்பாண மாநகர சபை சுத்திகரிப்பு உத்தியோகத்தர்கள் 44 பேருக்கான பாதுகாப்புக் காலணிகளும் 10 மேற்பார்வையாளர்களுக்கான பாதுகாப்புத் தலைக்கவசங்களும் வழங்கப்பட்டன.

மேற்படி பொருட்கள் லண்டனில் வசிக்கும் கனகசபாபதி விநாயகமூர்த்தி என்பவரால் அன்பளிப்பாக கலைப்பீட மாணவர் ஒன்றியமூடாக வழங்கப்பட்டுள்ளன.

மேற்படி நிகழ்வில் கலைப்பீடாதிபதி பேராசிரியர் சி.ரகுராம், யாழ். மாநகர சபை ஆணையாளர், பொறியியலாளர், உத்தியோகத்தர்கள், கலைப்பீட மாணவர்கள், கலைப்பீட மாணவர் ஒன்றியத்தினர் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

அனர்த்த காலங்களில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவித்திட்டங்கள் தேவைப்படுகின்றன. அவை இயன்றவரை பலரால் மேற்கொள்ளப்பட்டும் வருகின்றன.

அனர்த்தங்களைத் தவிர்ப்பதற்கு களத்தில் நின்று போராடும் சுத்திகரிப்பு உத்தியோகத்தர்களின் தேவையைப் பூர்த்திசெய்வதென்பது அவர்களை ஊக்கப்படுத்துவதும் அனர்த்தத்தைக் குறைப்பதற்குமான செயற்பாடாகும்.

கடந்த வெள்ள அனர்த்தம், தற்போது எலிக்காய்ச்சல் என்பன மத்தியில் சமூகத்தின் பாதுகாப்புக்காகச் செயற்படுபவர்களை வலுவூட்டுவதற்காக இவை வழங்கப்பட்டன.

# தலைமன்னாரில் 10 வயதுச் சிறுமியை கொலைசெய்த நபருக்கு எதிர்வரும் 26 ஆம் திகதி வரை விளக்கமறியல்

ஜோசப் நயன்






தலைமன்னார், ஊர்மனை கிராமத்தில் கடந்த பெப்ரவரி மாதம் 10 வயதுச் சிறுமியொருவர் பாலியல் துஷ்பிரயோகத்துக்குள்ளாக்கப்பட்டு கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக கைதுசெய்யப்பட்ட 55 வயதுடைய நபர் விளக்க மறியலில் வைக்கப்பட்டிருந்த நிலையில், பின்னர் கடந்த மே மாதம் வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில், வைத்தியசாலையிலிருந்து தப்பிச் சென்றுள்ளார். மீண்டும் குறித்த நபர் கைதுசெய்யப்பட்டு நேற்று முன்தினம் திங்கட்கிழமை(16) மன்னார் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தியபோது அவரை எதிர்வரும் 26 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க மன்னார் நீதவான் உத்தரவிட்டார்.

இந் நபரை கடந்த ஞாயிற்றுக்கிழமை (15) திருகோணமலை, குச்சவெளி பிரதேசத்தில் வைத்தே பொலிஸார் கைதுசெய்து தலைமன்னார் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

தலைமன்னார் பொலிஸார் தடுத்து வைத்து விசாரணைகளின் பின்னர் நேற்று முன்தினம் திங்கட்கிழமை (16) காலை மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையின் சட்ட வைத்திய அதிகாரியின் பரிசோதனைக்குட்படுத்தி பின்னர் அன்றைய தினம் காலை மன்னார் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினர்.

இதன்போது விசாரணைகளை மேற்கொண்ட மன்னார் நீதவான் குறித்த சந்தேக நபரை எதிர்வரும் 26 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார்.

தப்பிச்சென்ற குறித்த நபர் தொடர்பில் பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலின் அடிப்படையில் பொலிஸார் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையின்போது கடந்த ஞாயிற்றுக்கிழமை திருகோணமலை குச்சவெளி பிரதேசத்திலுள்ள காட்டுப் பகுதியில் பதுங்கியிருந்த நிலையில் குறித்த நபர் கைதுசெய்யப்பட்டார்.

தலைமன்னார், ஊர்மனை கிராமத்தில் கடந்த பெப்ரவரி மாதம் 15ஆம் திகதி மாலை காணாமல்போன அக்கிராமத்தைச் சேர்ந்த 10 வயது சிறுமி தனது அம்மம்மாவின் வீட்டிலிருந்து சுமார் 300 மீற்றர் தூரத்திலுள்ள தென்னந்தோப்பிலிருந்து மறுநாள் 16ஆம் திகதி காலை சடலமாக மீட்கப்பட்டார்.

சடலம் மீது மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையின்போது குறித்த சிறுமி பாலியல் துஷ்பிரயோகத்துக்குள்ளாகி கழுத்து நெரிக்கப்பட்டு கொலை செய்யப்பட்டமை தெரிய வந்தது.

இக்கொலை தொடர்பாக வெளி மாவட்டத்திலிருந்து வருகை தந்து குறித்த தோட்டத்தில் வேலை செய்து வந்த 55 வயதுடைய சந்தேக நபர் கைதுசெய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த நிலையில், கடந்த மே மாதம் வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில், வைத்தியசாலையிலிருந்து தப்பிச் சென்றார்.

கடந்த 6 மாதங்களாக குறித்த நபர் தலைமறைவாக வாழ்ந்து வந்த நிலையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை (15) திருகோணமலை குச்சவெளி பிரதேசத்தில் உள்ள காட்டுப் பகுதியில் வைத்து பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## யாழ். பஸ்ஸில் பயணித்த முதியவர் உயிரிழப்பு!

பு.கஜிந்தன்

தனியார் பஸ்ஸில் நேற்று முன்தினம் (16) சுழிபுரத்திலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்த பயணியொருவர் வாயிலிருந்து நுரை வெளிவந்த நிலையில் திடீரென உயிரிழந்துள்ளார்.

சுழிபுரம் மேற்கு, சுழிபுரம் பகுதியைச் சேர்ந்த இளையதம்பி சிவசுப்பிரமணியம் (வயது 71) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில்,

குறித்த நபர் நேற்று முன்தினம் காலை 10.30 மணியளவில் 782 வழித்தட பஸ்ஸில், சுழிபுரத்திலிருந்து பயணத்தை மேற்கொண்டார். இதன்போது அவருக்கு வாயிலிருந்து நுரை வெளிவந்தது. பின்னர் தனியார் வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லப்பட்டு, அங்கிருந்து யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு ப்பட்டார். இருப்பினும், அவர் உயிரிழந்து விட்டதாக மருத்துவர்கள் தெரிவித்தனர்.

மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். மாரடைப்பு காரணமாக மரணம் சம்பவித்துள்ளதாக பிரேத பரிசோதனை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நிதி மோசடியில் கைதுசெய்யப்பட்ட யாழ். பிரபல வர்த்தகருக்கு விளக்கமறியல்

பு.கஜிந்தன்

யாழ்ப்பாணம் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் நேற்று முன்தினம் (16) 26 இலட்சம் ரூபா பணத்தை மோசடி செய்த சந்தேகநபரொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டுக்கமைவாக இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. இவர் யாழ்ப்பாணத்தில் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடும் பிரதான வர்த்தகர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சந்தேகநபரை நீதிமன்றத்தில் முற்படுத்தியவேளை அவரை எதிர்வரும் 18ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார்.

# பெண்களுக்கெதிரான பாலின ரீதியான வன்முறையை ஒழிக்க பாராளுமன்றத்தில் எனது குரல் ஒலிக்கும்

## கலைச்செல்வி எம்.பி.தெரிவிப்பு

பொகவந்தலாவை நிருபர்

நுவரெலியா மாவட்டத்தில் பெருந்தோட்டப் பகுதியில் வாழும் மக்கள் மத்தியில் பெண்களுக்கெதிரான வன்முறைகளை ஒழிக்கும் வகையில் பிரிடோ நிறுவனம் விழிப்புணர்வு செயற்றிட்டங்களை இரண்டு வார காலமாக முன்னெடுத்து வருகிறது. அந்தவகையில், கடந்த ஞாயிற்றுக்கிழமை (15) இறுதி நிகழ்வை ஹட்டன் அஜந்தா கேட்போர் கூடத்தில் பிரிடோ நிறுவன நிறைவேற்றுப் பணிப்பாளர் மைக்கல் ஜோக்கிமின் வழிகாட்டலில் பிரிடோ நிறுவன நுவரெலியா மாவட்ட பெண்கள் வலையமைப்பின் தலைவி எஸ். யோகேஸ்வரி தலைமையில் மலையகப் பெண்களின் அரசியல் எழுச்சியே வன்முறைக்கெதிரான கேடயமாகும் என்ற தொனிப்பொருளில் நிகழ்வுகள் இடம்பெற்றன.

இதன்போது, தேசிய மக்கள் சக்தியின் நுவரெலியா மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் கலைச்செல்வி கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையில்,

''பிரிடோ நிறுவனம் நுவரெலியா மாவட்ட பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுப்பதில் பாரிய பங்கு வகித்து வருகின்றது. இதன் தலைவர் மைக்கல் ஜோக்கிம் சிறந்த பண்புகளைக் கொண்ட ஒரு தலைவராவார். பெருந்தோட்டப் பெண்கள் இன்று அரசியல் மற்றும் ஏனைய துறைகளில் வருவதற்கு காரணமாக செயற்பட்டவரில் இவரும் ஒருவர். எப்போதும் சமூக சிந்தனையோடு செயற்படுவதோடு பெண்களுக்கான முழு வாய்ப்பையும் வழங்கி இன்று எங்களைப் போன்றவர்கள் அரசியலில் பிரகாசிப்பதற்கு இந்த நிறுவனம் மக்கள் மத்தியில் பெண்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தி பெண்களுக்கிருக்கின்ற உரிமைகள் தொடர்பான விடயங்களைத் தெளிவு படுத்தியதன் காரணமாகவே நாங்கள் இன்று அரசியல் பீடத்தில் இருக்கின்றோம்''.

''பெண்களின் உரிமைக்காகப் பல வருடம் போராடி வந்த ஒரு நிறுவனம் இவ்வாறான செயற்றிட்டங்கள், பெண்கள் தொடர்பான பணிகள் நடைபெறுவதை பார்க்கவேண்டுமாக இருந்தால் இந்த நிறுவனத்திலேயே அவ்வாறான நிகழ்வுகளைக் காணலாம்.

இன்று நாங்கள் அரசியலில் இருப்பதும் சரி அல்லது நாங்கள் சாதாரணமாக இருந்தாலும் சரி தோட்டங்களில் வாழுகின்ற பெண்களுக்கு அறிவுரை வழங்கி அவர்களை வழிநடத்தக்கூடிய ஆற்றல் மிக்க ஒரு நிறுவனம் என்பதை நாங்கள் மறுக்க முடியாது.

அதேவேளை, நடந்து முடிந்த தேர்தலை நாம் நினைவுகூர வேண்டும். பெண்கள் பிரதிநிதித்துவத்தை அதிகரிப்பதற்காக பேசிய மக்கள் சக்தி முழு பங்களிப்பையும் வழங்கியது. இதன் காரணமாக தமிழ், சிங்களம், முஸ்லிம் என மூவின மக்களையும் கொண்ட 22 பெண் பாராளுமன்ற உறுப்பினர்கள் தெரிவுசெய்யப்பட்டார்கள். இதில் குறிப்பாகக் கூறுவதாக இருந்தால் வரலாற்றில் இதுவரை காலமாக பெண் தலைமைத்துவம் கொண்ட ஓர் அமைச்சர் இருக்கவில்லை. இந்த அரசாங்கத்தில் பெண் ஒருவர் அமைச்சராக இருப்பது நாம் அனைவரும் முன்னோக்கிச் சென்றுள்ளோம் என்பதைக் காட்டுகிறது.



எங்களுக்கும் உங்களுக்கும் ஓர் எதிர்பார்ப்பு இருந்திருக்கும். பெண்களுக்கு குரல் கொடுக்க பெண் அரசியல்வாதிகளை பாராளுமன்றத்தில் பிரதிநிதித்துவப்படுத்த வேண்டுமென்பதை தேசிய மக்கள் சக்தி நிறைவேற்றி பெண்களுக்கான உரிமையை வழங்கியுள்ளது. என்னைப் பொறுத்த வரையில் நான் ஒரு சாதாரணமான கலைச் செல்வியாகத் தான் இருந்திருக்கின்றேன். ஆனால், தற்போது நான் உங்கள் முன்னிலையில் பாராளுமன்ற உறுப்பினராக நிற்கின்றேன் . 221 நூற்றாண்டிலும் பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் பற்றித்தான் பேசிக்கொண்டிருக்கின்றோம்.

குறிப்பாக, சிந்தித்துப் பாருங்கள். வேலைத்தளங்களில் எங்களுக்கு பொறுப்பான பதவி கிடைக்கின்றதா அரசியலில் எங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படுகின்றதா? இல்லை. அதேவேளை, நுவரெலியா மாவட்டத்தில் பிரதேச சபை மற்றும் நகரசபையில் பெண்கள் அங்கம் வகித்தனர்.

பல கட்சிகள், சமூக அமைப்புகள் இம்முறை தேர்தலில் கே போட்டியிட்டார்கள். ஆனால், ஒரு பெண்மணி கூட உள்வாங்கப்படவில்லை. சிலர் பெண்களுக்கு வாய்ப்புக் கொடுத்திருந்தாலும் அவர்களுக்குத் தேவையான வசதி வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுக்காமல் அவர்களை பகடைகாய்களாகப் பயன்படுத்தி தமக்குத் தேவையான வாக்குகளைப் பெற்றுக்கொண்டார்கள்''-என்றும் தெரிவித்தார்.

# மண்ணெண்ணெய் தட்டுப்பாடு; விவசாயிகள் அவதி

ஜே.எம்.ஹாபீஸ்

வலப்பனை பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள கீர்த்தி பண்டாரபுர பிரதேசத்தில் மண்ணெண்ணெய் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகவும் இதன் காரணமாக விவசாயத்தில் ஈடுபட்டுள்ளவர்கள் தமது விவசாயக் கருவிகளை இயக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

மேற்படி பிரதேசத்தில் அதிகமானோர் விவசாயத்தையே பிரதான ஜீவனோபாயமாகக் கொண்டவர்கள். அவர்கள் காய்கறி மற்றும் சேனைப் பயிர்ச்செய்கைகளில் அதிகம் ஈடுபட்டு வருகின்றனர்.

இதன் காரணமாக நீரிறைக்கும் இயந்திரம், மருந்து தெளிக்கும் இயந்திரம் உட்பட இன்னும் பலவற்றுக்கு மண்ணெண்ணெய் தேவைப்படுவதாகவும் சமீப நாட்களாக மண்ணெண்ணெய்க்கு பாரிய தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகவும் அப்பகுதி விவசாயிகள் தெரிவிக்கினறனர்.

அத்துடன், இரவு நேரங்களில் வன விலங்குகளின் பாதிப்பிலிருந்து தமது சேனைப் பயிர்களைப் பாதுகாப்பதற்கு சேனைகளிலுள்ள தற்காலிக குடிசைகளில் தங்குவதாகவும் அவ்வேளைகளில் மண்ணெண்ணெய் விளக்குகளையே பயன்படுத்துவதாகவும் (லாந்தர்) அதற்கும் மண்ணெண்ணெய் தேவைப்படுவதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

எனவே, மண்ணெண்ணெய் மற்றும் எரிபொருட்களை தட்டுப்பாடின்றி பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டுமென விவசாயிகள் சம்பந்தப்பட்டவர்களைக் கேட்டுக் கொண்டனர்.

# சந்திரசிறி மஹாகமவுக்கு கலாபூஷணம் விருது



தலவாக்கலை நிருபர்

நுவரெலியாவைச் சேர்ந்த சந்திரசிறி மஹாகம பல துறைகளில் சிறந்து விளங்கியதற்காக அரச கலாபூஷணம் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

புத்த சாசனம், சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்களம் இணைந்து 39ஆவது தடவையாக கலாபூஷணம் அரச விருது வழங்கும் விழா புத்தசாசன அமைச்சர் பேராசிரியர் ஹினிதும சுனில் செனவி தலைமையில் அலரி மாளிகையில் இடம்பெற்றது.

ஓவியர், அரசியல் கார்ட்டூனிஸ்ட், நாவலாசிரியர், ஓவிய வடிவமைப்பாளர், பத்திரிகையாளர் என கலைத்துறையின் வளர்ச்சிக்கு ஆற்றிய பங்களிப்பைப் பாராட்டி 2024ஆண்டுக்கான அரச கலாபூஷணம் விருது வழங்கப்பட்டுள்ளது.

## மாவனல்லையில் க.பொ.த.(சா/த) மாணவர்களுக்கான இலவசக் கருத்தரங்கு

மாவனல்லை செய்தியாளர்

அகில இலங்கை வை.எம் .எம். ஏ.பேரவையின் மாவனல்லை கிளையினரின் ஏற்பாட்டில் இம்முறை கல்விப் பொதுத் தராதர (சா/த) மாணவர்களுக்கான இலவசக் கருத்தரங்கொன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. டிசம்பர் 21 ஆம் திகதி காலை 8மணி முதல் பிற்பகல் 5மணி வரை கணித, விஞ்ஞான பாடங்களுக்கான இலவசக் கருத்தரங்கொன்று மாவனல்லை நியூமன்ஸ் விஞ்ஞானக் கல்லூரி மண்டபத்தில் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்த இலவசக் கருத்தரங்கில் அனைத்து சாதாரண தர மாணவர்களும் பங்குபற்றி பயன் பெறலாம்.

விசேட ஆசிரியர்களைக் கொண்டு நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இக்கருத்தரங்கில் வை.எம்.ஏ.தேசிய தலைவர் அம்ஹர் ஷரீப், உப தலைவர் டாக்டர் பாஸில் உவைஸ், முன்னாள் வை.எம்.ஏ.தலைவர் சஹீட் எம். ரிஸ்மி ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளதாக கேகாலை, இரத்தினபுரி மாவட்டங்களுக்கான ஏற்பாட்டாளரும் பொறுப்பாளருமான எம். கே.எம். லுக்மான் தெரிவித்தார்.

# ஆய்வுகூடத்திலிருந்து சந்தைக்கு (lab to Market) என்ற நிகழ்வு பேராதனையில் அறிமுகம்







ஜே.எம்.ஹாபீஸ்

பேராதனை, கன்னொருவ விவசாயத் திணைக்களத்தினால் ஆய்வுகூடத்திலிருந்து சந்தைக்கு (lab to Market) என்ற ஒரு நிகழ்வு நேற்று முன்தினம் (16)அறிமுகம் செய்யப்பட்டிருந்தது.

கன்னொருவ தாவர இழையங்கள் அபிவிருத்தி மத்திய நிலையத்தில் இடம்பெற்ற செயலமர்வொன்றில் இது பற்றி விவசாயப் பணிப்பாளர் நாயகம் திருமதி கமனி ரணதுங்க தெரிவிக்கையில்,

''மேற்படி செயற்றிட்டத்தினூடாக இலங்கையில் விரையமாகும் உணவுப் பொருட்களுக்கு பெறுமதி சேர்த்து பயனுள்ள விதத்தில் அவற்றைப் பயன்படுத்தக்கூடிய முறைகளை முதலீட்டாளர்களுக்கு காட்டிக்கொடுப்பதாகும். இதற்காக நாம் இங்கு 21 வகையான (முடிவுப் பொருட்களை) உணவு வகைகளை இன்று அறிமுகம் செய்துள்ளோம். இதற்காக நாடளாவிய ரீதியில் முதலீட்டாளர்களை அழைத்து அவை பற்றிய மாதிரிகளைக் காட்டி அதற்கான ஆலோசனை வழிகாட்டல்களை வழங்கி வருகிறோம்.

இதனூடாக தயார் செய்யப்பட்ட புதிய உணவுவகைகள் பலவற்றை அறிமுகம் செய்துள்ளோம்'' - என்றார்.

விவசாயத் திணைக்களப் பணிப்பாளர் அச்சல ரஞ்சித் பெர்னாண்டோ தெரிவித்ததாவது,

''இலங்கையில் உற்பத்தியாகும் அநேக உணவுப் பொருடகள், பழங்கள், கிழங்கு வகைகள் போன்றன குறிப்பிட்ட காலத்தில் அபரிமிதமாக உற்பத்தியாகி பின்னர் அவை அழிவடைகின்றன. அதேநேரம், இலங்கை மக்கள் சில ஆடம்பர உணவுப் பொருட்களுக்கு அடிமையாகியுள்ளதால் அவற்றின் இறக்குமதிக்காக பாரிய தொகை பணத்தை செலவிடவேண்டியுள்ளது. அத்துடன், இவை சுற்றுலாத் துறையினருக்கும் அவசியமாகின்றன.

உதாரணமாக பட்டர், ஜேம், பிஸ்கட் வகைகள், மென் பானங்கள், சோசஸ் வகைகள், யோக்கட், பாற்பொருட்கள், மயோனிஸ் என ஏகப்பட்டவற்றுக்கு பணம் விரயமாக்கப்படுகிறது.

அதேவேளை, பருவகாலத்தில் உள்ளூரில் அதற்கான மூலப்பொருட்கள் அழிவடைகின்றன. இதனைக் குறைத்து பயனுள்ள வகையில் உள்ளூர் மூலப்பொருட்களைக் கொண்டு எவ்வாறு பெறுமதிசேர் உணவுகளாக அவற்றை மாற்றலாமென்பதை செயன்முறையூடாக இங்கு காட்டியுள்ளோம்.

உதாரணமாக, பலாக்காயின் வித்துகளைக் கொண்டு பெறப்படும் மாப்பொருளைக் கொண்டு பல்வேறு உணவுப் பண்டங்களை உற்பத்தி செய்யும் விதத்தைக் காட்டியுள்ளோம். அதேபோல், வட்டக்காய், பூசனிக்காய், வோட்டர் மெலன்,சோளம் போன்றவற்றைப் பயன் படுத்தி சோசஸ், ஜேம் போன்றவற்றை உற்பத்தி செய்யும் விதத்தைக் காட்டியுள்ளோம். மேலும், மரவள்ளி போன்றவற்றைக் கொண்டும் வற்றாலை போன்றவற்றைக் கொண்டும் மயோனிஸ் போன்ற சுவையூட்டிகளை எவ்வாறு தயாரிக்கலாம் என்பதையும் காட்டியுள்ளோம்.

எனவே, அவை பற்றிய விபரங்களையும் பயிற்சிகளையும் தேவையானவர்களுக்கு வழங்க நடவடிக்கை மேற்கொண்டுள்ளோம். இவை அனைத்தும் எமது ஆய்வு கூடங்களில் பரிசோதிக்கப்பட்டவை. இவற்றை உற்பத்தியாளர்களூடாக நேரடியாக சந்தைக்கு விடவுள்ளோம். எனவேதான் ஆய்வு கூடத்தில் இருந்து சந்தைக்கு எனப் பெயர் சூட்டி இதனை அறிமுகம் செய்கிறோம்''- என்றார்.

## உக்குவளையில் நாட்டரிசி கிலோ ஒன்றின் விலை ரூ.240 – ரூ.260

உக்குவளை நிருபர்

உக்குவளை பிரதேசத்திலுள்ள வர்த்தக நிலையங்களில் நாட்டரிசி கிலோ ஒன்றின் விலை ரூ.240 தொடக்கம் 260 ரூபா வரை விற்பனை செய்யப்படுவதுடன் பச்சையரிசி மற்றும் நாட்டரிசிகளுக்குத் தட்டுப்பாடும் ஏற்பட்டுள்ளது.

உக்குவளையையடுத்த கிராமப் பகுதிகளிலுள்ள சிறிய வர்த்தக நிலையங்களில் முன்புபோன்று அரிசி வகைகளைக் காணமுடியாதுள்ளது. காரணம், குறிப்பிட்ட மொத்த வர்த்தக நிலையங்களில் குறைந்த விலைக் கழிவில் அரிசியைக் கொள்வனவு செய்து அவற்றை வாடகைசெலுத்தி வாகனங்களில் எடுத்துவந்து விற்பனை செய்வதில் தமக்கு எதுவித இலாபமும் கிடைப்பதில்லையென சிறிய வர்த்தகர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இந்நிலையில், தேங்காய் ஒன்று 200 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டாலும் அதற்கும் அவ்வப்போது தட்டுப்பாடு ஏற்படும் நிலைமையையே காணமுடிகிறது. அத்துடன், தற்போதைய மழைவீழ்ச்சியையடுத்து சந்தைகளில் காய்கறிகளினது விலைகளும் அதிகரித்திருப்பதால் மக்கள் பெரும் அசௌகரியங்களுக்கு முகம் கொடுக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

# வீராங்கனைக்கு பாலியல் துன்புறுத்தல் அளித்த பயிற்சியாளருக்கு கட்டாய விடுமுறை



பாலியல் துன்புறுத்தல் குற்றச்சாட்டின் பெயரில் ஒலிம்பிக் மற்றும் பராலிம்பிக் பயிற்சியாளர் ஒருவரை அமெரிக்க ஒலிம்பிக் மற்றும் பராலிம்பிக் ஆணையம் கட்டாய விடுமுறை அளித்து உத்தரவிட்டுள்ளது.

பையத்லட்டுகள் பலர் அளித்த குற்றச்சாட்டை விசாரிக்க, அமெரிக்க பையத்லான் உறுப்பினர்களுக்கு அமெரிக்க ஒலிம்பிக் மற்றும் பராலிம்பிக் ஆணையம் மின்னஞ்சல் அனுப்பியது. மின்னஞ்சல் செய்தியில், பயிற்சியாளர் ஒருவர் கட்டாய விடுமுறையில் வைக்கப்பட்டுள்ளார். மேலும், புகார் அளித்த வீரர்களின் துணிச்சல் பாராட்டுதலுக்குரியது என்று தெரிவிக்கப்பட்டது.


இருப்பினும், பயிற்சியாளரின் பெயர் விவரங்கள் எதுவும் குறிப்பிடவில்லை. விசாரணை நடக்கும்போது கூடுதல் விபரங்கள் எதுவும் வெளியிடப்பட மாட்டாது என்று அமெரிக்க ஒலிம்பிக் மற்றும் பராலிம்பிக் ஆணையம் (யு.எஸ்.ஓ.பி.சி) செய்தித் தொடர்பாளர் கூறினார்.

இந்த நிலையில், பயிற்சியாளர் கேரி கோலியண்டர் மீது வில் வீராங்கனை கிரேஸ் பௌடோட் பாலியல் குற்றச்சாட்டு கூறியுள்ளார். தனது 15ஆவது வயதில் இருந்து பாலியல் துன்புறுத்தல் அளித்து வந்ததாக கேரி மீது கிரேஸ் குற்றம் சாட்டியுள்ளார். கிரேஸ், தனது 18 ஆவது வயதில் பாலியல் துன்புறுத்தலை எதிர்த்தபோதும், அவருக்கு கேரி மிரட்டல் விடுத்துள்ளார். தனது பையத்லான் கனவு பாழாகி விடும் என்ற அச்சத்துடனேயே கிரேஸ் இருந்து வந்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து, கிரேஸ் மிகுந்த மனச்சோர்வில் இருப்பதை அறிந்த வைத்தியர், கிரேஸுக்கு பயிற்சி அளிப்பதை நிறுத்துமாறு கேரியிடம் கூறியுள்ளார். இருப்பினும், மிகுந்த மனஉளைச்சலில் இருந்த கிரேஸ், 2010ஆம் ஆண்டு, ஒக்டோபரில் அதிகளவிலான மாத்திரைகளை உட்கொண்டு, தற்கொலைக்கு முயன்றுள்ளார். இருப்பினும், அங்கிருந்த சக விளையாட்டு வீரரால் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, கிரேஸ் காப்பாற்றப்பட்டார்.

அடுத்த நாளிலேயே, கேரி தனது பதவியை இராஜிநாமா செய்தார். இருப்பினும், 2016ஆம் ஆண்டில், நோர்டிக் பனிச்சறுக்கு உயர் செயல்திறன் இணை இயக்குநராக அமெரிக்க பராலிம்பிக் அணியால் பணியமர்த்தப்பட்டார். பல ஆண்டுகளாக பாலியல் துன்புறுத்தலுக்கு ஆளாக்கப்பட்டதாக ஒலிம்பிக் வீரர் ஜோன் ரெய்ட் சில மாதங்களுக்கு முன்னர் புகார் அளித்தார். இதனைத் தொடர்ந்து, பல விளையாட்டு வீராங்கனைகளும் பாலியல் குற்றச்சாட்டுகளை முன்வைக்கின்றனர்.

# விளையாட்டுத் துளிகள்



★ இந்தியாவுடனான 3ஆவது டெஸ்டில் ஸ்டீவ் ஸ்மித் தனது 33ஆவது சதத்தை பதிவுசெய்த அதேசமயம் இந்தியாவுக்கு எதிராக அவரது 10ஆவது சதமாக (41 இன்னிங்ஸ்) அமைந்தது. இதன் மூலம் இந்தியாவுக்கு எதிராக அதிக சதங்கள் அடித்தவரான இங்கிலாந்து வீரர் ஜோ ரூட்டின் சாதனையை சமன் (55 இன்னிங்ஸில் 10 சதம்) செய்தார். ஸ்மித் ஏற்கனவே இங்கிலாந்துக்கு எதிராக 12 சதங்கள் எடுத்துள்ளார். டெஸ்டில் குறிப்பிட்ட இரு அணிக்கு எதிராக 10 சதங்களுக்கு மேல் விளாசியுள்ள ஒரே வீரர் ஸ்மித் தான்.

★ 17ஆவது சையத் முஷ்டாக் அலி ரி20 கிரிக்கெட் தொடரின் சம்பியன் பட்டத்தை ஸ்யோஸ் ஐயர் தலைமையிலான மும்பை அணி வென்றது. பெங்களூரில் உள்ள சின்னசாமி ஸ்டேடியத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற மும்பை - மத்திய பிரதேசம் அணிகள் மோதிய இறுதிப்போட்டியில் 175 என்ற இலக்கை 17.5 ஓவர்களில் கடந்து 05 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்று மும்பை அணி சம்பியன் பட்டத்தை வென்றது.



★ சிம்பாப்வே அணியுடனான ரி20 போட்டியில் ஐ.சி.சியின் நடத்தை விதிகளை மீறியதற்காக ஆப்கானிஸ்தான் வீரர் குல்பதின் நைபிற்கு அபராதம் விதிக்கப்பட்டது. குறித்த போட்டியில் அவர் ஐ.சி.சி நடத்தை விதிகளின் லெவல் 1ஐ மீறியதற்காக போட்டி கட்டணத்தில் இருந்து அவருக்கு 15 சதவீதம் அபராதம் விதிக்கப்பட்டது.

★ பங்களாதேஷுடனான 3ஆவது ஒருநாள் ஆட்டத்தில் 83 பந்துகளில் 103 ரன்கள் குவித்த அமீர் ஜாங்கே ஆட்ட நாயகனாக தெரிவானார். இப்போட்டியில் அவர் 80 பந்துகளில் சதம் அடித்ததன் மூலம் அறிமுக ஒருநாள் சர்வதேச போட்டியில் அதிவேக சதம் அடித்த வீரர் என்ற சாதனையை படைத்துள்ளார். இதற்கு முன்னதாக 2018ஆம் ஆண்டு இலங்கை அணிக்கு எதிரான போட்டியில் தென்னாபிரிக்க வீரர் ரீசா ஹென்ரிக்ஸ் 88 பந்துகளில் சதமடித்ததே சாதனையாக இருந்தது.



★ ஆஸி. அணியுடனான 3ஆவது டெஸ்டின் முதல் இன்னிங்ஸில் 05 விக்கெட்டுகள் வீழ்த்திய பும்ரா ஆசிய கண்டத்துக்கு வெளியே 10ஆவது முறையாக 05 விக்கெட் வீழ்த்தினார். இதற்கு முன்பு இந்திய பந்துவீச்சாளர்களில் கபில் தேவ், ஆசியாவுக்கு வெளியே 09 முறை 05 விக்கெட் எடுத்ததே சாதனையாக இருந்தது.

# முதற்தர ரகர் போட்டியில் கண்டி அணி அமோக வெற்றி

(கண்டி நிருபர்)

கழகங்களுக் கிடையிலான முதற்தர ரகர் போட்டியில் கண்டி அணி அமோக வெற்றி ஈட்டியது. கண்டி நித்தவல மைதானத்தில் பிரபல கண்டி விளையாட்டுக்கழக அணிக்கும் ஶ்ரீ லயன்ஸ் அணிக்கும் இடையே இடம்பெற்ற இப்போட்டியில் 61 - 14 என்ற புள்ளி வித்தியாசத்தில் கண்டி அணி வெற்றியடைந்தது.

முதலாம் பாதி இடைவேளையின்போது கண்டி அணி 27- 14 என்ற புள்ளி அடிப்படையில் முன்னிலை வகித்தது. இரண்டாம் பாதியில் கண்டி அணி தனது ஆதிக்கத்தை நிலைநிறுத்தி எதிரணிக்கு பெரும் சவாலாக இருந்தது. 2023ஆம் ஆண்டு இடம்பெற்ற இரண்டாம் நிலைப் போட்டியில் சம்பியனான ஶ்ரீ லயன்ஸ் அணி இம்முறை பங்கு கொண்ட முதற்தர போட்டியின் முதலாவது போட்டி இது என்பது குறிப்பிடத்தக்கது.

கண்டி அணி 08 ட்ரைகள், 06 கொண்வேசன், 03 பெனல்டி மூலம் 61 புள்ளிகளைப் பெற்றதுடன், ஶ்ரீ லயன்ஸ் அணி 02 ட்ரை, 02 கொண்வேசன் மூலம் 14 புள்ளிகளைப் பெற்றது.





# இத்தாலி ரி20 கிரிக்கெட் அணியின் தலைவரான முன்னாள் ஆஸி. வீரர்

இத்தாலி ரி20 கிரிக்கெட் அணியின் புதிய தலைவராக அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரர் ஜோ பர்ன்ஸ் நியமிக்கப்பட்டுள்ளார். 35 வயதான இவர் அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணிக்காக 23 டெஸ்ட் மற்றும் 06 ஒருநாள் போட்டிகளில் விளையாடியுள்ளார்.

இவர் அவுஸ்திரேலிய அணியில் 2014 – 2020ஆம் ஆண்டு கால கட்டங்களில் ஆஸி. அணியின் ஆரம்ப துடுப்பாட்ட வீரராக விளையாடியுள்ளார். அதன்பின் அணியில் இடம் கிடைக்காத நிலையில் இத்தாலிக்கு குடி பெயர்ந்து அங்கு விளையாடும் வாய்ப்பை பெற்றார்.

இந்நிலையில், 2026ஆம் ஆண்டு ரி20 உலகக்கிண்ணத் தொடருக்கு இத்தாலி முன்னேறும் நோக்கில் இவரை புதிய ரி20 தலைவராக அந்நாட்டு கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது. இவர் இதுவரை இத்தாலி அணிக்காக 05 ரி20 போட்டியில் ஆடி ஒரு சதம், ஒரு அரைச்சதம் உட்பட 211 ரன்கள் எடுத்துள்ளார்.



**13 வயதுக்குட்பட்ட டிவிஷன் - 4 கடின பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டி கல்முனை ஸாஹிரா கல்லூரி - அம்பாறை சத்தாதிஸ்ஸ அணிக்கிடையில் அண்மையில் உஹன விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது. இந்தப் போட்டியில் கல்முனை ஸாஹிரா கல்லூரி 09 விக்கெட்டுகளினால் வெற்றியீட்டியது. இதில் கல்முனை ஸாஹிரா அணியின் இல்ஹாம் உமர் இரண்டு இன்னிங்ஸிலும் 07 விக்கெட்டுகளை கைப்பற்றினார். இவ் வெற்றிக்கு உறுதுணையாய் இருந்த அனைவருக்கும் திறமையாக விளையாடிய மாணவர்களுக்கும் வாழ்த்துகளையும் பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்வதாக பாடசாலை அதிபர் எம்.ஐ.ஜாபீர் தெரிவித்தார்.**
**(மாளிகைக்காடு நிருபர்)**

# சர்வதேச போட்டிகளில் பந்துவீச தடைக்குள்ளான ஷகீப்



இங்கிலாந்தில் நடைபெறும் கவுண்டி போட்டிகளில் சர்ச்சைக்குரிய வகையில் பந்துவீசியதாக குற்றம் சுமத்தப்பட்டு இங்கிலாந்து கிரிக்கெட் சபையினால் உள்ளூர் போட்டிகளில் பந்துவீச தடைக்குள்ளாயிருந்த பங்களாதேஷ் கிரிக்கெட் அணியின் நட்சத்திர சகலதுறை வீரர் ஷகீப் அல் ஹஸனிற்கு சர்வதேச கிரிக்கெட் போட்டிகளிலும் பந்துவீச தடை விதிக்கப்பட்டுள்ளதாக பங்களாதேஷ் கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது.

இங்கிலாந்தின் சர்ரேய் அணிக்காக கடந்த செப்டெம்பர் மாதம் சோமர்செட் அணியுடன் முதல்தர கவுண்டி போட்டியொன்றில் விளையாடிய ஷகீப் அல் ஹஸன் போட்டி நடுவர்கள் வழங்கிய முறைப்பாட்டுக்கமைய இங்கிலாந்து கிரிக்கெட் சபையின் பந்துவீச்சு தடைக்கு முகம் கொடுத்திருந்தார். தடைக்காலம் காணப்படும் வரையில் துடுப்பாட்ட வீரராக மாத்திரம் கிரிக்கெட் போட்டிகளில் ஆட முடியும். எனினும் ஷகீப் அல்-ஹஸனிற்கு பங்களாதேஷின் உள்ளூர் போட்டிகளில் தொடர்ந்து பந்துவீச முடியும். ஷகீப் பந்துவீச்சு பரிசோதனைகளுக்கு முகம் கொடுத்து அதில் தனது பந்துவீச்சு முறையான பாணியில் இருப்பதனை உறுதிப்படுத்துவதன் மூலமே மீண்டும் கிரிக்கெட் போட்டிகளில் பந்துவீச முடியும்.

தன்னுடைய 17 வருட தொழில்முறை கிரிக்கெட் வாழ்க்கையில் அவர் முதல் தடவையாக முறையற்ற பாணியில் பந்துவீசுவதாக குற்றச்சாட்டுக்கு முகம் கொடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வெஸ்ட்இண்டீஸ் அணியை முழுமையாக பொறுப்பேற்கும் சமி



வெஸ்ட்இண்டீஸ் கிரிக்கெட் அணியின் மூவகை கிரிக்கெட்டுக்குமான தலைமைப் பயிற்சியாளராக அந்த அணியின் முன்னாள் வீரர் டேரன் சமி நியமிக் கப்பட்டுள்ளார். அடுத்தாண்டு ஏப்ரல் முதல் அவர் பொறுப்பேற்க உள்ளதாக வெஸ்ட்இண்டீஸ் கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது.

40 வயதான டேரன் சமி, கடந்த 2023ஆம் ஆண்டு வெஸ்ட்இண்டீஸ் அணியின் வெள்ளைப்பந்து தலைமைப் பயிற்சி யாளராகப் பொறுப்பேற்றார். முன்னதாக 2014 மற்றும் 2016ஆம் ஆண்டு நடைபெற்ற ரி20 உலகக்கிண்ண தொடரில் டேரன் சமி தலைமையிலான வெஸ்ட் இண்டீஸ் அணி ரி20 உலகக்கிண்ணத்தை வென்று சரித்திரம் படைத்தது. இதன்மூலம் ரி20 உலகக்கிண்ணத்தை இரண்டு முறை வென்ற ஒரே கேப்டன் எனும் சாதனை டேரன் சமி வசம் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7